www.tamilarangam.net



www.tamilarangam.net


## இணையத்தில்

பழைய, புதிய சமர் இதழ்களைப் பார்வையிடவும்
உழைக்கும் மக்களுக்கு எதிரான உலகளாவிய செய்திகளை வாரம் தோறும் பார்வையிடவும்
சமுதாய சார்ந்த பலதுறை சார்ந்த கட்டுரைகளை பார்வையிடவும்
உலகளாவிய சமூக விடுதலை அமைப்புகளின் இணைய முகவரிகளை கண்டறியவும், தொடர்பு கொள்ளவும்
பல பத்து புரட்சிகர மக்கள் பாடல்களை கேட்கவும்
சமுதாய நோக்கிலான காட்சிப் படங்களை பார்க்கவும்
சமுதாயம் சார்ந்த படங்களை பார்க்கவும்
விரைவில் விரிந்த பல தளத்தில் இணையம் மூலம் பார்க்கமுடியும்.
தற்போதும் வரையறுத்த எல்லைக்குள் இயங்கும் இவ் இணைய முகவரி

**http//www.tamilcircle.net**

சமூக நோக்கிலான நூல்களை பெற விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளமுடியும்.
மார்க்ஸின் மூலதனம் தேவைப்படுவோர் 325 பிராங்குடன் தபால் செலவை அனுப்பிப் பெறமுடியும்.

மக்கள் கலை இலக்கிய கழகத்தின் பல்வேறு வெளியீடுகளையும் பெற விரும்புவோர் எம்முடன் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 1.புரட்சிகர பாடல் கசெட்டுகள் | | -9 கசெட்டுகள் |
| 2.தமிழ் மக்கள் இசைவிழா | 3ம் ஆண்டு | -7 கசெட்டுகள் |
| 3.தமிழ் மக்கள் இசைவிழா | 8ம் ஆண்டு | -5 கசெட்டுகள் |
| 4.மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாகநாடு | | -10 கசெட்டுகள் |


5.தீக் கொழுந்து திரை முழக்க ஒளிக்குறுந்தகடு மற்றும் பலவற்றையும் பெற முடியும். அவை சிடி அல்லது கசெட் மூலம் பெற முடியும்.

அனைத்துத் தொடர்புக்கும்



**P.RAYAKARAN**
**32 RUE TROUILLET DEREL**
**92600 ASNIERES SUR SEINE**
**FRANCE**



# தூசு மண்டலமாகும் ஆப்கான் மக்களின் இரத்தால் தணிகின்றது

அமெரிக்கா தலைமையிலான பயங்கரவாத ஆக்கிரமிப்பை எதிர்த்து
மக்கள்திரள் போராட்டத்தை
முன்னெடுப்போம்.



அமெரிக்காவின் இதயமான மூலதனத்தின் சுதந்திர வர்த்தக மையங்கள் மீதும், அதை பாதுகாக்கும் இராணுவ கட்டளை மையமான பென்டகன் மேலான, தனிமனித பயங்கரவாத தாக்குதல்கள் உலகையே உலுக்கியது. இந்த தாக்குதலால் அமெரிக்கா பொருளாதாரத்துக்கு 3000 கோடி டொலர் நேரடி இழப்பு ஏற்பட்ட அதே நேரம். மொத்த இழப்பு 9000 கோடி டொலர் என முதல் மதிப்பு தெரிவிக்கின்றது. இதை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி புஷ் "அமைதியான அடிபணியாத ஆவேசம்" என்று கூறியபடி, மறுகாலனியாக்க முளைகள் ஆழமாகவும் அகலமாகவும் விதைப்பதன் மூலம், உலகை மீளப் மறுபங்கீடு செய்வது தொடங்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் மூலதனத்துக்கு உலகளவில் ஏற்பட்டு வந்த நெருக்கடியில் (அண்மையில் அமெரிக்காவில் பலமுறை தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் வட்டிவிதம் குறைக்கப்பட்டது. கடந்த ஐப்பசி மாதம் மட்டும் 4 லட்சம் பேர் அமெரிக்காவில் வேலையை இழந்துள்ளதாக, உத்தியபூர்வ புள்ளிவிபரமே தெரிவிக்கின்றது. இது தாக்குதலால் மட்டும் நிகழ்ந்தவையல்ல. அமெரிக்க பொருளாதார நெருக்கடியில் இருந்தே உருவானது.) இருந்து மீள, புதிய இராணுவ ஆக்கிரமிப்புகள் மூலதனத்துக்கு அவசியமாகின்றது. ஆக்கிரமிப்பின் மூலம் பொருளாதார நெருக்கடியை சரிக்கட்டி விட முடியும் என, மூலதனம் கொக்கரிக்கின்றது. மூலதனத்தின் சுதந்திரமான விடுதலைக்கு உலகம் தழுவிய விரிவாக்கமே, உலகத்தின் பொருளாதாரமாக, பண்பாடாக, ஆட்சியாக மாறிவருகின்றது. இந்த நிகழ்ச்சி நிரலில் மற்றைய அனைத்தையும் ஈவிரக்கமின்றி அழித் தொழிக்கும் போது, எதிர்வினைகள் பலதளத்தில், பலவடிவில் வெடித்துக் கிளம்புகின்றன. இந்த வகையில் உலகை உலுக்கும் மக்கள் போராட்டம் ஒருபுறமும், தனிமனித பயங்கரவாத தாக்குதல்கள் மறபுறமாக, இரு வேறு தளத்தில் நேர் எதிராக கருக்கொண்டு பிரசிவிப்பது நிகழ்ச்சி நிரலாகிவிட்டது.



அமெரிக்கா மீதும், அப்பாவி மக்கள் மீதான இந்த தாக்குதலை வித்திட்டதே, அமெரிக்க மூலதனமும் அதை பாதுகாக்கும் அதன் உளவுபிரிவுதான். உலகளவில் மக்கள் திரள் போராட்டங்களை முன்னெடுத்த கம்யூனிசத்துக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களே, ஜிகாத் என்ற பெயரில் இஸ்லாமிய மத அடிப்படைவாதத்தை உலகெங்கங்கும் கட்டமைத்தனர். உலகின் 120 கோடி இஸ்லாமிய மக்களை மத அடிப்படைவாதம் மூலம் திசை திருப்ப "ஜிகாத்" என்ற பெயரில், இஸ்லாமுக்கு புது விளக்கம் கொடுத்த ஏகாதிபத்திய உளவு அமைப்புகள், கம்யூனிசத்துக்கு எதிராகவே மத அடிப்படைவாதத்தையும், ஆயுதக் குழுக்களையும் உருவாக்கினர். இந்த இஸ்லாமிய குழுக்கள் ஏகாதிபத்திய நலன்களுக்கு இசைவாக இருந்தவரை, கம்பளம் விரித்து பணமும் ஆயுதமும் கொடுத்து சீராட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டனர். இன்று பயங்கரவாதிகள் என்று எப்படி வருணித்து ஒடுக்குகின்றனரோ, அதுபோல் அன்று இவர்களை விடுதலை வீரராக உலகு காட்டி, பாராட்டி, உதவக் கூட ஏகாதிபத்தியம் தயங்கவில்லை.

அமெரிக்காவின் முன்னாள் ஜனதிபதி றொன்ல்ட் றீகன் அன்று ஒசாமா பில்லாடனை, அமெரிக்கா சுதந்திரத்துக்கு போராடிய ஜோர்ஜ் வாஷிங்டனுக்கு ஒப்பிடும் அளவுக்கு ஒரே கோப்பையில் உண்டவர்கள். அப்படியிருக்க ஜனதிபதி புஷ் "மனித இயல்பில் உள்ள மோசமான அம்சங்களின் ஒட்டுமொத்த உறைவிடமாக" உள்ளனர் என்று இன்று கூறுவது, அமெரிக்க பொருளாதார நலன்களுக்கு இவை முரண்பாடாக இருப்பதில்லை. அமெரிக்க மூலதன நலனுக்கு இசைவாக அமெரிக்கா உளவு அமைப்பின் செல்ல வளர்ப்பு பிள்ளையாக ஒசாமா பில்லாடன் இருந்தவர். உலகளாவிய ஏகாதிபத்திய மூலதனத்தை பாதுகாக்க, ஒசாமா பில்லாடன் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை சிறப்பாக கையாண்ட போதே இந்த பாராட்டும் பதக்கமும் கிடைத்து. அமெரிக்க உளவுப்பிரிவின் முன்னணி தலைவர்களுடன், இஸ்லாமிய பயங்கரவாதத்தை கட்டமைப்பதில் தோளோதோள் நின்று திட்டமிட்ட, பல ஆதாரபூர்வமான காட்சிகள் கூட இன்று திட்டமிட்டு மூடி மறைக்கப்படுகின்றது. 1979ம் ஆண்டில் அமெரிக்காவின் ஆசியுடன் தனது சொந்த பணமாக 20 கோடி டொலரை செலவு செய்தே, முஜாகுதீன்களை ஒசாமா பின்லாடன உருவாக்கினான். ஒசாமா பின்லாடன் முஜாகுதீனின் கூட்டு தளபதியாக அமெரிக்க ஆசியுடன் அறிவுரை பெற்று செயற்பட்டவர். விமானங்களையும், இராணுவ முகாங்களையும் அடையாளம் காணும் நவீன உபகரணங்களை கூட அமெரிக்கா, ஒசாமா பில்லாடனுக்கு வழங்கத் தயங்கவில்லை. 1986 இல் சோவியத் விமானங்களை அழிக்க ஸ்ரிஞ்சர் ரக எவுகனைகள் 1000மும், 250 ஏவு கருவிகளையும் ஒசாமா பின்லாடனுக்கு அமெரிக்கா வழங்கியது. இந்த அமெரிக்கா உதவி என்பது வரை முறையற்ற வகையில் காணப்பட்டது. ஆப்கான் இயற்கை வாயுவையும், எண்ணை குதங்களையும் கைப்பற்றுவதன் மூலம், அருகில் இருந்த சீனா மற்றும் சோவியத்யூனியன் மீதான ஒரு இராணுவ எதிர் தளமாக மாற்ற, அமெரிக்கா தீவிர முயற்சி எடுத்தது.




இந்த வகையில் அமெரிக்கா நலன்களை அடையும் வகையில் கொலிவூட் (HOOLYWOOD) சினிமாக்களை உற்பத்தி செய்தது. முஜாகுதீன் (சுதந்திர போராளிகள்) என்ற அமைப்பை ஆயுத பாணியாக்குவதன் மூலம், உலகெங்கும் கம்யூனிசத்துக்கு எதிராக சர்வதேச முஸ்லிம் மதவாதம் ஊக்குவிக்கப்பட்டது. சர்வதேச முஸ்லிம் சமுகத்தை இஸ்லாம் பெயரில் இஸ்லாமை பாதுகாக்க, ஆப்கானில் போராட வருமாறு அன்று அழைப்பு விடப்பட்டது. இந்த சர்வதேச இஸ்லாம் அடிப்படைவாதத்தின் பின்னணியில் அமெரிக்க உளவு அமைப்பின் வழிகாட்டல் மற்றும் பொருளாதார இராணுவ உதவிகளை அள்ளி வழங்கியது. இந்த கம்யூனிச எதிர்ப்பின் பின்னணியில் ஒசாமா பில்லாடன் ஒரு அமெரிக்கா கைக்கூலியாக, "புனித போராளியாக", "சுதந்திர போராளியாக" திட்டமிட்டே உருவாக்கப்பட்டார். 1988ம் ஆண்டு அல்-காயிதா இயக்கத்தை அமெரிக்கா உருவாக்கிய போது, கம்யூனிசத்தை எதிர்த்து சர்வதேச இஸ்லாமிய மத அடிப்படைவாதத்ததை தட்டி எழுப்புவதே அதன் நோக்கமாக இருந்தது. அல்-காயிதா மூலம் உலகளவில் கம்யூனிசத்துக்கு எதிராக பயங்கரவாதத்தை கட்டமைத்த அமெரிக்காவின் குறிப்பான பங்கையும், அமெரிக்காவின் கைக்கூலியாக செயற்பட்ட பாகிஸ்தானின் வரலாற்று ரீதியாக பங்கை மூடி மறைத்தபடிதான், சர்வதேச பயங்கரவாதம் பற்றி சுதந்திர ஜனநாயக உலகம் பிதற்றுகின்றது.



சமூக ஏகாதிப்த்தியமான சோவியத்யூனியன் தனது போலி கம்யூனிஸ்ட்டு முகமுடியின் கீழ் ஆப்கானை ஆக்கிரமித்த போதே, முஜாகுதீனின் அமைப்பு அமெரிக்கவால் வளர்த்தெடுக்கப்பட்டது. இந்த அமைப்பு ஆப்கான் விடுதலையை தனது சொந்த மக்கள் போராட்டம் மூலம் பெறுவதற்கு பதில், அமெரிக்கா மற்றும் பாகிஸ்தானின் கைக்கூலியாகி, அவர்களின் நலன்களை பேணிப் போராடும் ஒரு இயக்கமாக சீரழிந்தது. சமூக ஏகாதிபத்தியம் தனது கம்யூனிச முகமுடியை களைந்து, ஒரு ஏகாதிபத்தியமாக மாறிவிடும் கனவுகளுடன் கொப்சேவ் செய்த மாற்றங்கள், மூலதனத்தை சுதந்திரமாக விடுதலை செய்தது. இந்த நிலையில் இந்த மூலதனத்தின் சுதந்திரத்தை பாதுகாக்கவும், சமூக ஏகாதிபத்திய நெருக்கடிகளை களைந்து ஏகாதிபத்திய நிலைக்கு மாறவும், ஆப்கானில் இருந்து சோவியத் படையை வெளியேற்றுவது என்ற தீர்மானத்தை கொப்சேவ் தவிர்க்க முடியமால் எடுத்தார்.

இந்த நிலையில் முஜாகுதீன்கள் ஆப்கானின் ஆட்சிக்கு வருவது உறுதியானது. ஆனால் தொடர்ந்து உறுதியான ஆட்சி என்பது கேள்விக்குள்ளானது. ஆட்சி அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு யுத்தம் மீண்டும், போராடியவர்களுக்கிடையில் ஏற்படும் அபாயம் இருந்தது. ஆப்கான் முஜாகுதீன் இஸ்லாமிய ஐக்கியம் என்று ஏழுபிரிவுகளாக இணைந்தே போராட்டத்தை நடத்தினர். இதைவிட அடிப்படை மதவாதிகள், அரச பரம்பரைவாதிகள், மிதவாதிகள் என்று மூன்று பிரிவும் முரண்பட்டன. மதவெறியின் அடிப்படையில் சுன்னி, ஷியா என்ற இரு பிரிவும் பிளவுபட்டே மோதின. இதைவிட மேற்கு சார்பு கொண்ட குட்டி முதலாளித்துவ தரகு பிரிவும் அதிகாரத்தை தக்க வைக்க முனைந்தன. அதைவிட பழங்குடிகள் அடிப்படையிலும் பிரிந்த கிடந்தனர். அதைவிட பல இனப்பிரிவுகளும், யுத்த பிரபுகளும் நிறைந்த ஒரு சிக்கல் நிறைந்த களமாக இருந்தது. சவுதி, ஈரான், பகிஸ்தான் ஆதரவு என்று பிரிந்து கிடந்த அதிகாரவர்க்கத்தின் பிளவுகள் உறுதியான ஆட்சி என்பதை கனவாக்கியது. சோவியத் படை வெளியேறிய போது, முதலில் அதை எதிர்த்து நின்றது பாகிஸ்தான் தான். பாகிஸ்தான் உறுதியான, தனக்கும் சார்பான ஆட்சியை நிறுவிய பின், சோவியத் ஆக்கிரமிப்பு படையை வெளியேறுமாறு கோரியது. ஆனால் சோவியத் படை மோதவிட்டு தனது நலனை புதிய வடிவில் அடைய, தீடிரென நாட்டைவிட்டு வெளியேறியது. இது புதிய உள்நாட்டு யுத்தத்துக்கு வழிகோலியது. தொடாந்து ஏகாதிபத்திய நலன்களுக்கிடையிலான உள்நாட்டு யுத்தம், உள்ளுர் அதிகாரவர்க்க நலன்கள் சார்ந்து புகைந்தது. ஏன் முன்பு முஜாகுதீன்களுடன் மோதிய ரஸ்ய, இன்று அவர்களுக்கு ஆயுதம் மற்றும் பணத்தை தலிபானுக்கும் அமெரிக்கா நலனுக்கும் எதிராக அள்ளி வழங்கி வருகின்றனர். அமெரிக்கா ஆக்கிரமிப்பு திகதி குறிக்கப்பட்ட நிலையில், அதை முந்திக் கொண்டே ரஸ்யா பாரிய ஆயுத உதவிகளை முஜாகுதீன்களுக்கு வழங்கி, ஏகாதிபத்திய நலனுக்கான, ஆழமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் மோதுகின்றன.



யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்திலும், பின்னாலும் பாகிஸ்தான், ஆப்கான் ஊடான தனது நேரடி வர்த்தக நலன்களை பாதுகாக்க, தலிபான் என்ற ஆயுதம் ஏந்திய அமைபொன்றை உருவாக்கியிருந்தனர். தலிபான் என்பது மாணவர்கள் என்ற அர்த்தத்தைக் கொண்டது. பாகிஸ்தானுக்கு அகதியாக வந்த மாணவர்களை கொண்டு, அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் நலனுக்காக இணைந்து உருவாக்கிய இஸ்லாமிய அடிப்படைவாத குழுவே தலிபானாகும். பாக்கிஸ்தான் தனது துர்க்மேனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தனுகான




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்த்தகத்தை ஆப்கான் ஊடாக நடத்திய போது, அந்த வர்த்தக பாதையின் பாதுகாப்புக்காக உருவாக்கிய படையே தலிபானாகும். ஆரம்பத்தில் இவர்களின் காண்டர், பெஷாவார் பகுதிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். உள்ளூர் மோதலை ஒரு அடிப்படை மதவாத குழுவுக்கூடாக அடக்கியொடுக்கி கட்டுப்படுத்திய ஒரு உறுதியான ஆட்சி, அமெரிக்க பொருளாதார நலன்களையும் அதன் ஊடாக பாகிஸ்தான் நலன்களையும் அடைய முடியும் என்று கருதினர். தமக்கு விசுவாசமாக பல வருடம் இயங்கிய தலிபானையே ஆயுதபாணியாக்கியதுடன், மத அடிப்படைவாதத்தை அதன் அரசியல் உள்ளடக்கமாக்கினர். மத அடிப்படைவாதத்தை அரசியல் உள்ளடக்கமாக கொண்டே தலிபான்கள், ஆட்சியை படிப்படியாக கைப்பற்ற உதவியதன் மூலம், அமெரிக்க அப்பகுதி ஊடாக எண்ணைக் குழாயை அமைக்கத் திட்டமிட்டது. இதன் முதற்படியாக துர்க்மேனிஸ்தான் எண்ணையை ஆப்பான் ஊடாக இந்தியாவரை கொண்டு வர, யூனோகோல் நிறுவனம் 15000 கோடி டொலரை முதலிட்டது. தலிபான் உருவாக்கத்தின் பின்னணியில் அமெரிக்க மற்றும் பாகிஸ்தானின் மூலதனநலன்களை அடிப்படையாகக் கொண்டு, அமெரிக்கா உளவு அமைப்பால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவையே. தலிபான்களின் அமெரிக்கா விசுவாசத்தையிட்டு முன்னைய அமெரிக்கா அதிகார வர்க்கம் மிகுந்த நம்பிக்கையை அன்றும், இன்றும் வெளிப்படுத்த தயங்கவில்லை. எப்படி திடீரென மாறிப் போனதையிட்டு கனவு கண்டவன் போல் மூக்கில் கை வைக்கின்றனர். மக்கள் மேலான மத அடிப்படைவாத ஒடுக்கமுறையையிட்டு அல்ல, அமெரிக்கா நலனுக்கு எதிராக வளர்த்த கடா மார்பில் குத்தியது போன்று தலிபான்கள் மாறியதை, அமெரிக்கா அதிகார வர்க்கத்தால் சகித்துக் கொள்ள முடியாத வயிற்று வலியில் சிக்கிவிடுகின்றனர்.



கம்யூனிசத்தை ஒழித்துக்கட்டுவன் மூலம் தனது பொருளாதார நலன்களை பாதுகாக்க, இஸ்லாமிய அடிப்படைவாதத்தை திட்டமிட்டே அமெரிக்காவும் உலக ஏகாதிபத்தியங்களும் உருவாக்கின. இதற்கு நிதி மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாத கோட்பாடுகளையும் உருவாக்கியதுடன் இராணுவ உதவிகளையும் அள்ளிவழங்கினர். மூலதனத்தை விரிவாக்கும் இந்த வரலாற்று தேவை பூர்த்தியடைந்தவுடன், இஸ்லாம் அடிப்படைவாதத்துக்கான நிதி மற்றும் உதவிகளை கைவிட்டது. இந்த நிலையில் தான் இஸ்லாமிய அடிப்படைவாதம் தனது குறுகிய பிற்போக்கு நலன்களில் இருந்து, தம்மை கைவிட்ட ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தனிமனித பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிடுகின்றது. இது வரலாற்றில் முதற்தடவையல்ல. எமக்கு பரிச்சயமான நிகழ்வுகளை பார்ப்போம் இந்தியாவில் சீக்கியரின் தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்ற போது, அதைத் தடுக்க இந்திராகாந்தியே பிந்தரன்வாலே தலைமையில் உருவாக்கிய மத அடிப்படைவாத குழுவை உருவாக்கினர். இந்த அமைப்பு பின்னால் இந்தியா அரசுக்கு எதிராக மோதியதுடன், இந்திரகாந்தியையே படுகொலையும் செய்தது. ஏன் இந்தியா புலிகளுக்கு ஆயுதம், பயிற்சி, பணம் என்று பல உதவி செய்தது மட்டுமின்றி, அனுராதபுர தாக்குதலைக் கூட திட்டமிட்டு செய்வித்தது. ஆனால் பின்னால் புலிகள் முரண்பட்டு இந்தியாவுடன் மோதியது மட்டுமின்றி, ராஜீவை படுகொலை செய்தது நிகழ்ந்தது. இவை போன்ற பல நிகழ்வுகள் உலக வரலாற்றில் பதிவாகியுள்ளது.



ஆப்கானிலும், அரபுநாடுகளிலும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை தண்ணீர் ஊற்றி வளர்த்த வரலாற்றை மூடிமறைத்தபடியே தான்; அமெரிக்க மேலான பயங்கரவாதம், அமெரிக்க மேலான யுத்தம்,



அமெரிக்கவின் புதிய யுத்தம் ("TERROR ON AMERCA", "WAR ON AMERICA", "AMERICAS NEW WAR") என்று குறிப்பிட்டு, மறுகாலனியாக்க விரிவாக்கத்தை உலகமயமாக்குகின்றது. இதன் தொடர்ச்சியில் "உலகத்தை எட்டும் அனைத்துப் பயங்கரவாதத்தையும் அழித்தொழிப்போம்" என்று அமெரிக்க கொக்கரிக்கின்றது. அதே நேரம் அமெரிக்கா ஜனாதிபதி "புனிதப்போர்" நடத்தப் போவதாக வேறு அறிவித்துள்ளார். புனிதப் போர் என்பதன் அர்த்தம், மூலதனத்தினை விரிவாக்கும் மூலதனத்தின் புனிதபோர்தான்.

இந்த புனித போரை அமெரிக்காவும், அமெரிக்காவின் வாலாக பிரிட்டின் குரங்குமாக உலக ஏகாதிபத்தியங்களுங்கு தலைமை தாங்கி நடத்தும் உலகமயமாதல் ஆக்கிரமிப்பு, உலக மக்களுக்கு எதிராக பயங்கரவாதமாக வெளிப்படுகின்றது. பிரிட்டன் அமெரிக்காவின் வாலாக ஐரோப்பிய யூனியனுக்கு முரணாக நிற்பதன் அரசியல் உள்ளடக்கம், மூலதன நலன்களில் சார்ந்து கிடக்கின்றது. 2000 ஆண்டுக்கான உலகளாவிய அமெரிக்காவின் மூலதன ஆக்கிரமிப்பு முதலீடு 32090 கோடி டொலராகும். இது 1999 இல் 27500 கோடி டொலர் மட்டுமே. அதாவது உலகமயமாதல் விரிவாக்க அதிகரிப்பு 17 சதவீதத்தைக் கொண்டதாகும். மொத்த உலகமயமாதல் முதலீட்டில் 75 சதவீதம் ஐரோப்பாவில் இடப்பட்டது. இதிலும் பிரிட்டனிலேயே அதிக முதலீட்டை அமெரிக்கா இடுகின்றது. அமெரிக்காவும் பிரிட்டனும் பரஸ்பரம் தமது பொருளாதார நலன்களை தக்க வைக்க, ஒருமித்த நிலையில் உலகமயமாதல் விரிவாக்கத்தை கையாள்வது அவசியமாகின்றது. ஐரோப்பியயூனியன் போட்டி ஏகாதிபத்தியமாக பரிமாணித்த போதும், பிரிட்டிஸ் அதற்குள் நீடிக்கின்றனர். இருந்த போதும் அமெரிக்கா ஏகாதிபத்திய பொருளாதார நலன்களுடன் பிரிட்டிஸ் கொண்டுள்ள பொருளாதார உறவுகள், பிரிக்க முடியாத ஆக்கிரமிப்பாளனாக உலகின் முன் ஒன்றுபட்டு நிற்க வைத்துள்ளது.



இதன் எதிர் நிலையில் தான் இஸ்லாமின் பெயரில் உருவான அடிப்படைவாத மதவாதக் குழுக்களின் தனிமனித பயங்கரவாத நடவடிக்கைகள், உலகளவில் ஏகாதிபத்திய அருவடிகளை நோக்கியும் அதன் அச்சின் மீதும் நடத்துகின்றனர். தனிமனித பயங்கரவாதம் ஏகாதிபத்திய இயந்திரத்தையும் அங்கு வாழும் உழைக்கும் மக்களை பிரித்து பார்க்கத் தவறி, ஒன்றுபடுத்திய வகையில் மனிதப் படுகொலைகளை நடத்தி அதையே அரசியலாக்குகின்றனர். மத அடிப்படைவாதக் குழுக்களின் தனிமனித பயங்கரவாதச் செயல்கள் எப்போதும், எதிரி போன்று மக்களின் நலன்கள் மேல் அக்கறைப்படுவதில்லை. மாறாக அப்பாவி மக்களின் பிணங்கள் மேல், தமது பிற்போக்கு மனித விரோத அடிப்படைகளை நிறுவிக் கொள்வதே நிகழ்கின்றது. அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை, தனிமனித பயங்கரவாதத்துடன் ஒப்பிட முடியாதுதான். தனிநபர் பயங்கரவாதம், ஏகாதிபத்திய பயங்கரவாதத்தில் இருந்தும், அரசு பயங்கரவாதத்தில் இருந்தும், அதன் நற்றம் பிடித்த புண்களில் சீழ்களில் இருந்தே உருவாகின்றன. இந்த சமூக அடிப்படைக்கு வெளியில் தனிநபர் பயங்கரவாதம் உலகில் உதிப்பதில்லை. நாம் தனிநபர் பயங்கரவாதத்தை எதிர்த்து போராட வேண்டுமெனின், அதை தோற்றுவித்த காரணத்தை எதிர்த்து அழிக்க வேண்டும். தனிநபர் பயங்கரவாதத்தை மட்டும் எதிர்ப்பது என்பது, ஏகாதிபத்திய மற்றும் அரசு பயங்கரவாதத்துக்கு துணை போவதாகும். அரச் மற்றும் ஏகாதிபத்திய பயங்கரவாதம் வித்திட்ட தனிநபர் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டுமாயின், ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை முடிவு கட்டவேண்டும். மக்கள் திரள் வழி மட்டும் தான், ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒழிப்பதற்கான போராட்ட மார்க்கமாகும். இது தனிநபர் பயங்கரவாதத்திற்கான ஊற்று மூலத்தை அழிக்கும். இல்லாத எல்லா நிலையிலும், ஏகாதிபத்திய பயங்கரவாதமும் தனிநபர் பயங்கரவாதமும் நகமும் சதையும் போன்று கூடிப்பிறந்தவையாக நீடிக்கும். இதில் ஒன்றை மட்டும் யாராலும், எவராலும் அழிக்க முடியாது.



உலகளவில் புதிய ஒழுங்கை மேலும் ஆழமாக விரிவாகவும் மூலதனம் கோருகின்றது. மறுகாலனியக்கத்தை விரைவு படுத்தக் கோருகின்றது. உலக பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில், புதிய இராணுவ செல்வாக்கு மண்டலங்களை உலகு எங்கும் நிறுவுவதில் ஏகாதிபத்தியம் களமிறங்கியுள்ளது. இதற்கான அமெரிக்கா உளவு அமைப்பின் வருடாந்த செலவு அண்ணளவாக 225600 கோடி இலங்கை ரூபாவாகும். இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு பயன்படுத்தும் டாமாக் ஏவுகணையை ஒருமுறை ஏவ 9.5 கோடி இலங்கை ரூபா செலவாகின்றது. மிக பிரமாண்டமான பொருளாதாரத்தை இந்த ஆக்கிரமிப்புக்கு முதலிட, ஏகாதிபத்தியங்கள் தயங்கவில்லை. அமெரிக்கா பிரிட்டிஸ் ஏகாதிபத்திய துணையுடன் மற்றைய ஏகாதிபத்தியத்தை பின்தள்ளியபடி களமிறங்கியுள்ளது. உலகு எங்கும் எல்லா நாட்டிலும் தனது படையை நிலை நிறுத்துவதன் மூலம், அரைக்காலனிய நவ காலனிய மூலதன நலன்களை மறுகாலனியாக்கி பாதுகாக்கும் அனைத்து முயற்சியிலும் களம்மிறங்கியுள்ளது. ஏகாதிபத்தியங்களுக்கிடையில் நடைபெறும் பனிப்போரை "உலக பயங்கரவாதம்" என்ற சொற்றொடர் மூலம், அமெரிக்கா தனக்கு சார்பாக மாற்றி அமைக்கின்றது. அமெரிக்காவின் பொருளாதார நலன்களை உலகளவில் நிறுவுவதே உலக பயங்கரவாத ஒழிப்பாகி, அதையே அரசியலாக்கி இராணுவமயமாக்குகின்றது.




இந்த நிலையில் உயிரியல் ஆயுதம் மூலமான பயங்கரவாதத் தாக்குதல் பற்றி, ஏகாதிபத்தியம் மக்களுக்கு பீதியூட்டி யுத்தத்தை மேலும் ஆழமாக தீவிரமாக்குகின்றது. உயிரியல் ஆயுதம் மூலம் அப்பாவி மக்களை கொன்று போடும் ஆயுதத்தை யார் செய்தனர். ஏகாதிபத்தியம் சுட்டிக்காட்டும் பயங்கரவாதிகளா உற்பத்தி செய்தார்கள்? கதிர் வீச்சைக் கொண்ட அணு குண்டு, இரசாயன ஆயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள் என அனைத்தும் எந்த தனிமனித பயங்கரவாத நபர்களோ, குழுக்களோ உற்பத்தி செய்தவையல்ல. மாறாக மூலதன விரிவாக்கத்தை உலகளவில் விரிவாக்கும் ஏகாதிபத்திய முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, உலக மக்களின் உழைப்பை சுரண்டி கொள்ளையிட ஏகாதிபத்தியங்கள் தமக்குள் தாமே உற்பத்தி செய்தவைகளே. இந்த ஆயுதங்கள் மூலம் உலக ஆதிக்கத்தை நிறுவும் அழிவுகளில் தான், இன்றைய அழிவுகரமான ஆயுதங்கள் உலகு எங்கும் குவிந்து போய்கிடக்கின்றன. இதை ஏகாதிபத்திய மூலதன அறிவியல் மையங்களில் இருந்தே, தனிமனித பயங்கரவாதமும் பெற்றுக் கொள்கின்றது. இதை மூடிமறைத்தபடி தனிமனித பயங்கரவாதக் குழுக்கள் இவற்றை பயன்படுத்த போவதாக ஏகாதிபத்தியங்கள் பீதியூட்டுவதன் மூலம், ஏகாதிபத்திய பயங்கரவாதமும் அதை வரைமுறையின்றி பயன்படுத்தும் உரிமைக்கு அங்கீகாரத்தை கோருவதே, இதன் அடிப்படையான உள் நோக்கமும் விளைவுமாகும்.

இந்த வகையில் இந்த அழிவுகரமான மனித விரோத ஆயுதங்களை பயங்கரவாத ஒழிப்பில் தலைமை ஏற்கும் ஏகாதிபத்தியமே, கேடுகெட்ட வகையில் மனித இனத்துக்கும்



இயற்கைக்கும் எதிராக பயன்படுத்தி வருகின்றது. ஈராக் மேலான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் போது, 10 லட்சம் கதிர் வீச்சுக் கொண்ட சில்வர் புல்லட்டுகளை ஏவியது. இந்த சில்வர் புல்லட்டு என்பது செறிவு குறைக்கப்பட்ட 4 கிலோ யுரோனியத்தை வெடிமருந்தாக கொண்டது. இதை பயன்படுத்திய ஏகாதிபத்திய இராணுவ வீரர்களோ பல்வேறு பாதிப்பை அடைந்துள்ளதுடன், பலர் இறந்து வருகின்றனர். இந்த நிலையில் ஏகாதிபத்திய பயங்கரவாதத்தால் ஈராக் அப்பாவி மக்களின் இழப்பு என்பது வரலாறு காணாதவையாக உள்ளது. ஈராக்கில் இன்று மாதம் 8000 குழந்தைகளை உயிருடன் கொன்றுவிடுகின்றது. மனிதனுக்கு எதிராக அவனின் வாழ்வின் இயற்கை மீதே விட்டுச் சென்றுள்ள இரசாயன படிமானங்களையும், யுரோனிய கதிர்வீச்சையும் கொண்ட ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை மூடிமறைத்தபடிதான், ஜனநாயக அமெரிக்காவும் பிரிட்டனும் பயங்கரவாதத்தை ஒழிக்க காவடி எடுக்கின்றனர். இன்று ஈராக்கில் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 108 இறந்தே பிறக்கின்றது. இந்த ஏகாதிபத்திய படு கொலை பயங்கரவாதத்தை எந்த நீதிமன்றம், எந்த மனிதபிமானம் பேசுகின்றது. ஈராக்கில் 1996 முதல் 45 சதவீதமான மருந்து பொருட்களுக்கு மட்டும் எண்ணை ஏற்றுமதியை அனுமதிக்கும் ஐ.நா, இதன் மூலம் இதுவரை 14 71 425 பேரை கொன்று போட்டுள்ளது. இந்த படுகொலைக்கு தலைமை ஏற்று நிற்கும் கோபியண்ணாவுக்கு, 2001 கான சாமதானத்துக்கான மானம் கெட்ட நோபல் பரிசு வேறு கொடுக்கப்படுகின்றது. ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை உலகளவில் மிக விசுவாசமாக வாலாட்டியபடி குலைத்து நியாப்படுத்தியதால், மூலதனத்தின் பஞ்சு மெத்தையில் காதல் கொண்டு விபச்சாரம் செய்ய நோபல் பரிசு மக்களுக்கு எதிரான துரோகிக்கு ஒரு மூடிகுட்டுதான்.




23-12-1984 இரவு போபாலில் அமெரிக்கா இரசாயன தொழிற்சாலை வெடித்த போது 16 000 முதல் 30 000 பேர் தம் உயிரை இழந்தனர். 300 000 பேர் காயம் அடைந்தனர். அத்துடன் அதன் தொடர் விளைவை இயற்கையும், அந்த மக்களும் நாள் தோறும் அனுபவிக்கின்றனர். ஆனால் இன்றுவரை குற்றவாளிகளோ சுதந்திரமான உலகத்தின் ஜனநாயக பாதுகாவலரக இருக்கின்றனர். உலகத்தின் எந்த நீதி மன்றமும் இந்த குற்றத்தை விசாரிக்கவில்லை. இதுபோன்று 5 ஆயிரம் குர்த்திஸ் மக்களை இரசாயன ஆயுதம் மூலம் துருக்கிய ஜனநாயக பாசிட்டுகள் கொன்ற போது, இந்த அமெரிக்கா எங்கே போனது? இது போன்று ஈராக் அதே மக்களுக்கு எதிராக வீசிய போது, அமெரிக்காவின் அன்றைய எதிரியான ஈரானுக்கு எதிரான ஈராக்கை பாதுகாக்க அமெரிக்கா பின் நிற்கவில்லை. உலக சமதானத்தினை வியர்வை வழிய பாதுகாக்கும் உலக பொலிஸ்காரர்கள், சமாதானத்தின் பெயரில் ஈராக்கில் 315 தொன் யூரோனிய தூசு படிமங்களை ஏற்படுத்தி, மனித அழிவை நிராந்தரமாக்கியுள்ளனர். ஐரோப்பாவில் யூரோனிய கழிவுகளை இடத்துக்கு இடம் மாற்றும் போது, போராட முன்நிற்கும் பச்சைக் கட்சிகளின் ஆதரவுடன் தான், ஈராக் மீது 10 லட்சம் யூரோனிய சில்வர் புல்லட்டுகள் வீசப்பட்டன. இது கடும் வெப்பத்துடன் எரிவதுடன், 1000 வருடம் கடந்த நிரந்தர யூரேனிய கதிர்வீச்சைக் கொண்டது. இந்த ஆயுதத்தையே ஆப்கானில் பெருமளவில் பாவிப்பதாக உலக ஆதிக்க சமாதானவாதிகள் மண்டியிட்டு அறிவிக்கின்றனர். ஈராக் மற்றும் ஆப்கானில் யூரேனியா சில்வர் புல்லட்டுகளை தாண்டிய மற்றைய ஆயுதங்களின் பிரமாண்டமான அழிவின் தரத்தை, கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமல்லவா! மனித அறிவியலையே கேடுகெட்ட வகையில் கையாளும் அமெரிக்காவே 2000 ஆண்டு, அந்திராக்ஸ் நோயை உற்பத்தி செய்யும் உயிரியல் ஆயுதத்தை தயாரித்தது. இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காற்றின் மூலம் இலகுவாக பரவும் தன்மை கொண்டது. இதன் அடிப்படையில் இதை கொண்டு செல்ல, இடம் விட்டு இடம் மாறிச் செல்லும் பருவகால பறவை இனங்களைக் கூட, ஏகாதிபத்தியம் பரிசோதித்துள்ளது. அந்திராக்ஸ் உற்பத்தி மற்றும் இது போன்ற கிருமி ஆயுதங்களை தயாரிக்கவும் பரிசோதிக்கவும், நிவேடா பாலைவனத்தில் ஆய்வு கூடங்களையும் தொழிற்சாலையையும் அமெரிக்கா நிறுவியுள்ளது. புஸ் ஆட்சியேறியவுடன் இந்த பரிசோதனைகளை தீவிரபடுத்தும் படி, விசேட உத்தரவுகளை விடுத்த ஒரு மக்கள் விரோதி மட்டுமின்றி இயற்கை விரோதியுமாவர்.





இஸ்ரேல் ஈராக்கியரை மட்டும் தாக்கி கொல்லும் உயிரியல் ஆயுதத்தை உற்பத்தி செய்துள்ளது. இஸ்ரேல் அரபு இனத்தின் மரபு அணுக்களை இனம் கண்டதன் மூலம், அவர்களை அழிக்கவல்ல உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்துள்ளனர். இந்த நிலையில் இனங்கள் மேலான உயிரியல் ஆயுத தாக்குதலை நடத்த, இனக் கூறுகள் சார்ந்து உயிரியல் ஆயுதங்களின் உற்பத்தியில் ஏகாதிபத்தியம் இறங்கியுள்ளது. உதாரணமாக அமெரிக்க கறுப்பு வெள்ளை இன நிற பிளவில் கூட, மாறுபட்ட மரபணுக்கள் மேல் உயிரியல் ஆயுத உற்பத்தி விரிவாகியுள்ளது. குறித்த மனித தேசிய இனங்களைக் கூட கொன்று விட, உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்தபடி தான், உலக பயங்கரவாதம் பற்றி கூறி, பயங்கரவாதத்தை உற்பத்தி செய்து, பயங்கரவாதத்தை மக்கள் மேல் ஏவுகின்றனர். வடகொரியவில் ஏற்பட்ட பிளாக், சீனாவில் ஏற்பட்ட கொலரா மற்றும் தைபோயிட் காச்சல், கியுபாவில் பன்றியில் எற்பட்ட ஆபிரிக்கக் காய்ச்சல் மற்றும் கரும்பை நாசம் செய்த கிருமிகளை, இனம் கண்டு கொள்ள முடியாத ஏகாதிபத்திய உயிரியல் ஆயுதத்தின் பின்னணி சந்தேகிக்கப்படுகின்றது. திட்டமிட்டு மனித இனத்தை மட்டுமல்ல அவனின் சுய பொருளாதாரத்தை கூட அழிக்கும் உயிரியல் யுத்தத்தை நடத்துவதுடன், புதிய தாக்குதலுக்கும் ஏகாதிபத்தியம் தன்னை தயார்ப்படுத்தியுள்ளது. உதாரணமாக நெற் பயிற் செய்கையின் போது வரும் பறவை இனங்களில், நெல்லை அழிக்கும் உயிரியில் ஆயுதங்களை அனுப்பி வைப்பதன் மூலம், தேசிய உற்பத்திகளை முடக்கி தேசத்தை தமது மறுகாலனியாக்கும் நடைமுறை கூட, இன்று ஏகாதிபத்திய யுத்த வழியாக ஜனநாயகமாக உள்ளது. மருத்துவ தேவைக்கு கிருமிகளை உற்பத்தி செய்யும் நாடுகள் அவைபற்றி வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென்றும், கண்காணிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் கோரிக்கை உலக நாடுகளால் கோரப்பட்டது. உயிரியல் ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் இதை சேர்த்துக் கொள்ள உலக நாடுகள் கோரிய போது, அதை எதிர்த்த முதல் நாடு அமெரிக்காதான்.

கேடுகெட்ட முதலாளித்துவ சுதந்திர ஜனநாயகத்தில் மனிதனை அழிப்பதற்கென்றே யூரோனிய குண்டுகளை, இரசாயன ஆயுதங்களை, உயிரியல் ஆயதங்களை உற்பத்தி செய்தபடிதான், பயங்கரவாத தாக்குதல் பற்றி உலக ஜனநாயக செய்தி அமைப்புகள் பிதற்றுகின்றன. கேடுகெட்ட ஏகாதிபத்திய மனித விரோத ஆயுதங்களையும் அறிவையும் பெற்று, தனி மனிதன் அல்லது தனிமனித பயங்கரவாத குமுக்களின் பயங்கரவாத நடவடிக்கையாக மாறும் போது, குற்றவாளி அவனல்ல. குற்றவாளி இவ்வகையான ஆயுதங்களை உற்பத்தி செய்த ஏகாதிபத்தியம் தான் என்பதை மூடிமறைப்பதே, இன்றைய பொதுவான ஜனநாயகத்தின் சாரம்சமாகும். ஈராக்கில் மட்டுமல்ல வியட்நாமில் 30 வருடத்துக்கு முன்பு அமெரிக்கா அந்த மக்கள் மேல் ஜனநாயகத்தின் பெயரில் பொழிந்த அழிவுகரமான குண்டு வீச்சில், 20 லட்சம் வியட்நாமியர் படுகொலை



செய்யப்பட்டனர். அன்று மூலதனத்தின் சுதந்திர ஜனநாயகம் காக்க, அமெரிக்கா வீசிய சுதந்திர குண்டுகளின் கதிர் வீச்சும், இரசாயன நஞ்சும் அவர்களின் உணவை மட்டுமின்றி குடிக்கும் நீரை சுவாசிக்கும் காற்றையும் கூட நஞ்சாக்கி கதிர்வீச்சுக்குள்ளாக்கி, அவர்களை இன்றும் ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கின்றது. நாள் தோறும் இன்றும் நூற்றுக்கணக்கில் கதிர் வீச்சுக்குள்ளான, சிதைந்து இறந்த குழந்தைகளை, வியாட்நாமிய பெண்கள் அமெரிக்காவின் ஜனநாயகத்தின் சின்னமாக பெறுகின்றனர். இதுவே ஜனநாயகம் கொழிக்கும் யூக்கோசிலாவியாவிலும் புதுக் கதையாகியுள்ளது. ஏன், இந்த குண்டுகளை ஈராக்கிலும், யூக்கோசிலவியாவிலும் கொண்டு சென்று வீசிய அமெரிக்கா மற்றும் எகாதிபத்திய ஆணாதிக்க ஆண்களினால், அவர்களின் மனைவிமார் பெற்று எடுக்கும் குழந்தைகள் கூட, கதிர் வீச்சின் சிதைவுகளுடன் அதன் சின்னத்துடன் பெற்றெடுப்பதும் அண்மையில் அம்பலமாகியுள்ளது. அத்துடன் கதிர்வீச்சு மற்றும் இராசயான ஆயுதங்களை மக்கள் மேல் வரைமுறையின்றி வீசியெறிய வியர்வை சிந்தி உழைத்த இராணுவத்தினர் கூட, கதிர்வீச்சிலும் இரசாயன பாதிப்பிலும் சிதைந்து சாகின்றனர். வீசியவனுக்கே கோரமான அவலம் ஏற்படும் போது, வெடித்த இடத்தின் அவலத்தை உலகத்தின் எந்த சுதந்திர ஜனநாயக அமைப்பும் கொண்டுவரவில்லை. மாறாக அதை மூடி மறைத்த படி, மனிதனை வதைத்து கொல்லும் புதிய அவலத்தை, வக்கிரமாக கோருவதே இன்றைய அறிவுத்துறையின் தலை சிறந்த ஜனநாயக பணியாகவுள்ளது.




இந்த நிலையில் தான் அமெரிக்கா ஜனாதிபதி புஷ் "தாலிபானைப் பார்த்து சலித்துப் போயிருக்கக்கூடிய ஆப்கான் மக்களின் ஒத்துழைப்பு" தேவை என்று, தனது படுகொலை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு கைக் கூலிகளின் உதவியைக் கோருகின்றார். அன்று சமூக ஏகாதிபத்தியமான சோவியத் ஆக்கிரமிப்பு நிகழ்ந்த போது, சோவியத்தை பார்த்து சலித்துப் போயிருந்தவர்களையே அமெரிக்கா ஆயுதபாணியாக்கியது. ஒசாமா பில்லாடன் முதல் முஜாகுதீன்கள் வரை அமெரிக்கா நலனுக்காக, இஸ்லாமின் பெயரில் அன்று அமெரிக்கக் கைக்கூலிகளாக செயற்பட்டவர்களே. முஜாகுதீன்கள் கொண்டு முழுமையாக தனது நலனை அடைய முடியாது என்ற ஒரே காரணத்தால் தான் அமெரிக்கா, முஜாகுதீன்களை எதிர்த்து சலித்துப் போயிருந்த தலிபானை ஆயுதபாணியாக்கியது. இன்று தலிபானுக்கு எதிராக மீண்டும் முஜாகுதீன்களை ஆயுத பாணியாக்குவதன் மூலம், தனது ஆக்கிரமிப்பை கைக்கூலிகளைக் கொண்டே நடத்துகின்றது. "தாலிபானைப் பார்த்து சலித்துப் போயிருக்கக்கூடிய ஆப்கான் மக்களின் ஒத்துழைப்பு" என்பதன் அர்த்தம், தலிபானுக்கு எதிரான அனைவரையும் அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் கொடியின் கீழ் கைக் கூலிகளாக செயற்பட அழைப்பதே. ஆப்கானின் இயற்கை வளங்களை வரைமுறையற்று கற்பழிக்கவும், கொள்ளையடிக்கவும் துணைநிற்க கோருவதாகும். இதையே இன்றைய உலக அளவில் உலகமயமாதல் விரிவாக்கத்திலும் வரைமுறையின்றி ஏகாதிபத்தியங்கள் செய்கின்றன.


இந்த கைக்கூலிகளுக்கு அழைப்புவிட்டபடி அமெரிக்கா பாதுகாப்பு செயலர் டொனால்டு ரும்ஸ்.்.பெல்ட் ஆப்கான் மக்களை கேவலமாக இழிவுபடுத்திவிடுகின்றார். "ஒரு ஆப்பானிஸ்தானியுனின் சராசரி ஆண்டு வருமானம் வெறும் எண்ணூறு அமெரிக்க டொலர்தான். இது வாஷிங்டனிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் போக ஒரு அமெரிக்கர் எடுக்கும் விமான டிக்கெட் கட்டணத்தைவிட குறைவானது. அந்த நோஞ்சான் நாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களோடு மோதப் பார்க்கிறது" என்று கொக்கரிக்கின்றான். இங்கு அந்த ஆக்கிரமிப்பாளன் தனது திமிர் பிடித்த வர்க்கக் கண்ணோட்டத்தில், இதை பிரகடணம் செய்கின்றான். இது மேற்கு அல்லாத மக்களை இழிபடுத்தி அவமானப்படுத்தவதற்கு சமனாகும். அதாவது வாஷிங்டனிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் போக செலவாகும் விமான பயணச் செலவுக்கு குறைந்த தேசிய தலா வருமானத்தை கொண்ட நாடுகளின் மக்களை, மனிதனாக கூட மதிக்காத ஒரு அமெரிக்கா இராணுவ வெறியனை தெளிவாக படம் பிடித்துக் காட்டியுள்ளது. ஊரையும் உலகத்தையும் கொள்ளையடித்து மக்களை கையேந்த வைத்துவிட்டு, இந்த பன்றிகள் மோதுவதைப் பற்றி வாய்கிழிய பேசுகின்றார்கள். அவன் "நாம் இராணுவத்தோடு மோதும் போரைச் செய்தால், அவர்கள் பதிலுக்கு அப்பாவிகளைக் கொல்லும் கோழைத்தனமான வெறியர்களாக இருக்கிறார்கள்" என்று பிதற்றுகின்றான். நீ செய்யும் யுத்தம் என்ன. கோழைத்தனமான வகையில் நேருக்கு நேர் போராட முடியாத நீ, மனிதனைக் கொல்லும் யூரேனிய கதிர் யுத்தத்தையும், இராசயாண யுத்தத்தையும், உயிரியல் யுத்தத்தையும் ஒளித்து நின்று நடத்துவதா உனது மானம் கெட்ட அமெரிக்க வீரம்? வியட்நாம், ஈராக், யூக்கோசிலாவியா, ஆப்கான்.... என எங்கும், நீ யாருடன் யுத்தம் செய்கின்றார்கள். மக்கள் மேல் குண்டுகளை வரைமுறையின்றி போடுவதுடன், பல நூறு வருட பாதிப்பை ஏற்படுத்தும் கேடுகெட்ட கதிர் வீச்சுகளை செய்யும் மனித விரோதிகளை என்ன என்பது. தனிமனித பயங்கரவாதம் கையாளும் மனிதவிரோதத்தை விட, அரசு மற்றும் ஏகாதிபத்திய பயங்கரவாதம் பல நூற்றாண்டு கடந்து, அழிவைத் தரக் கூடிய உலகத்தையே அழித்தொழிக்கும் அழிவுகரமான பயங்கரவாத்தை மக்களுக்கு எதிராக நடத்துகின்றனர். தனிமனித பயங்கரவாதத்தை விட பல ஆயிரமடங்கு மக்களுக்கு அழிவுகளை செய்தபடி, மற்றவனை குற்றம் சாட்டும் கோழைகளை ஆதாரமாக கொண்டதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமை. நேருக்கு நேர் யுத்தம் செய்ய முடியாத நிலையில், ஒளித்து யுத்தம் செய்யும் கோழைகள் மற்றவனை கோழையென்பது விசித்திரமானது.



மேலும் அவர் "நாம் எதிர்த்துப் போரிடுவதற்கு பயங்கரவாதிகளிடம் ராணுவமோ, கப்பற்படையோ, விமானப்படையோ இல்லை. இழந்துவிடுவோம் என்று தயங்குமளவுக்கு அவர்களிடம் சொத்துக்கள் குவிந்த பெரிய நகரங்கள் இல்லை" ஐயோ என்ன பரிதபாம். சொத்தை அழிப்பதே அமெரிக்காவின் யுத்தம் என்பதை சொல்லாமல் சொல்லுகின்றார். இங்கு, அமெரிக்கா குறிவைத்த பயங்கரவாதியை ஒழிப்பது அல்ல. தேசிய பொருளாதார வளங்களை அழித்து தரைமட்டமாக்குவதே அமெரிக்காவின் ஏன் ஏகாதிபத்தியங்களின் யுத்த முறையும் மரபுமாகும். இது மட்டும் தான் தேசிய எல்லை கடந்து, தேசிய பொருளாதாரம் கடந்து ஊடுருவி பாயும் ஏகாதிபத்திய பொருளாதரம், உலகமயமாதலை விரைவாக்கும். இழக்க எதுவுமற்ற பாட்டாளி வர்க்கம் வர்க்க விரோதிகளுக்கு எதிராக போர் தொடங்கும் போது, அமெரிக்க மூலதனம் எப்படி ஊளையிடும் என்பதுக்கு, இந்த போர் தொடங்கும் போது, அமெரிக்க மூலதனம் எப்படி ஊளையிடும் என்பதுக்கு, இந்த வார்த்தையே தவிர வேறு எதுவும் இருக்கப் போவதில்லை. இழந்து விடுமளவுக்கு எதுவுமற்ற நாடு, இழப்பதற்க்கு எதுவுமற்ற பாட்டாளி வர்க்கத்தையிட்டு அஞ்சி மூலதனமும் அதன் இயந்திரமும் புலம்பி அழும்போது, அந்த அதிகார வர்க்கத்தின் கையேலாத்தனத்தை மீண்டும் ஒருமுறை வரலாறு தெளிவுபடுத்துகின்றது. மக்களையும் நாட்டையும் வர்க்க அதிகார வெறியுடன் கேவலப்படுத்தி அழிக்க எதுவுமில்லை என்றபடி தான் "தாலிபானைப் பார்த்து சலித்துப் போயிருக்கக்கூடிய ஆப்கான் மக்களின்



ஒத்துழைப்பு" தேவை என்று கொட்டாவி விட்ட படி அமெரிக்கா ஜனதிபதி கோருகின்றனர். அத்தடன் ஜனதிபதி புஷ் "பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் பயங்கரவாதிகளுக்கும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை" என்கிறார். அச்சொட்டாக அமெரிக்காவே பொருந்தும். உனக்கு எதிரானவர்களுக்கு எதிராகவும், மற்றைய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், கம்யூனிசத்துக்கு எதிராகவும் உலகெங்கும் அடைக்கலம் கொடுத்தது யார்? ஆயுதமும், பணமும், பயற்சியும், அடைகலமும் கொடுத்தது யார்? ஏன், இன்று உனக்கு எதிராக தாக்கியவனுக்கும் நீதானே பயிற்சி முதல் ஆயுதம் பணம் என அனைத்தும் ஜனநாயகத்தின் பெயரில் வாரி வழங்கியதை மக்களின் வரலாற்றால் மூடிவிடமுடியாது. முந்தைய அமெரிக்கா ஆக்கிரமிப்பை வழிநடாத்திய தந்தையான றொன்ல்ட் றீகன், ஒசாமா பில்லாடனை ஜனநாயகத்தின் தந்தையாக பாராட்டிய பின்நோக்கிய வரலாறு எந்த அடைகலத்தில் இருந்து தொடங்கியது? இவற்றையெல்லாம் ஒவ்வொருவரும் இன்றைய அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்பின் ஊடாக திரும்பி பார்க்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு தனிமனித பயங்கரவாத தாக்குதலுக்கும் பின்னணியில் குற்றவாளியாக அரசுகளும், ஏகாதிபத்தியங்களுமே காணப்படுகின்றன. அதாவது அரசு பயங்கரவாதமும், ஏகாதிபத்திய பயங்கரவாதமுமே தனிமனித பயங்கரவாதத்தின் ஊற்ற மூலமாகும். அங்கிருந்தே வேர் விட்டபடி நகமும் சதையுமாக புரையோடிப் போயுள்ள இந்த சுரண்டல் அமைப்பில், தனித் தனியாக ஒன்றையும் யாரும் ஒழித்துவிட முடியாது.



தனிமனித பயங்கரவாதம் உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியத்தையும் அதன் பொருளாதார அமைப்பையும் பலப்படுத்துகின்றது. மக்களின் சமூக விடுதலையை மறுக்கும் இரு வேறுபட்ட எதிர்நிலை போக்குகள், எப்போதும் மக்களைின் விடுதலையையிட்டு ஒரே நிலைப்பாட்டையே ஒரே விதமாகவே அணுகி ஒடுக்குகின்றது. இரண்டும் மக்களை எதிரியாகக் காண்கின்றது. மக்களின் விடுதலையை கொச்சைப்படுத்தி தனிமைப்படுத்தி அழிக்க முனைகின்றது. இந்தவகையில் தனிநபர் பயங்கரவாதத்தை ஏகாதிபத்திய அமைப்பு ஊட்டி வளர்க்கின்றது. சமுதாய இயக்கங்களை தனிமனித கதாநாயகர் வடிவில் கட்டமைக்கப்பட்டு, அதையே பண்பாட்டு கலாச்சாரமாக்கி ஒரு ஊடாகமாக்கின்றது. சமூக அநீதிகளை தனித்தனியான தனிமனித சாகச வீரச் செயல் மூலம் தீர்க்க முடியும் என்று, இன்றைய பண்பாட்டு கலாச்சார கூறுகள் ஊட்டிவளர்க்கப்படுகின்றன. இந்த வகையில் கட்டமைக்கப்பட்ட, கட்டமைக்கப்படும் சினிமா முதல் அன்றாட செய்தி வரை, தனிமனித தாக்குதலுக்கு முன்னோடி வழிமுறைகளை திட்மிட்டே கற்றுக் கொடுக்கின்றன. பயணிகள் விமானங்களை கொண்டு தாக்குதல் நடத்த முடியும் என்பதை சினிமாக்கள் ஊட்டிவளர்த்தன. இன்று எந்த வகையிலும் எப்படியும் வாழ்வின் பயன்பாட்டில் உள்ள எதையும் ஆதாரமாக கொண்டு, அப்பாவி மக்கள் தாக்கி படுகொலை செய்ய முடியும் என்பதை, உலகுக்கு இந்த தாக்குதல் மிக மோசமாக கற்றுக் கொடுத்துள்ளது. மறுதளத்தில் அமெரிக்கா முதல் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக மக்கள் எழுச்சியுறும் போது நொருங்கி சிதையும் என்பதையே இந்த தாக்குதலின் எதிர் நிலையும் உலகுக்கு கற்றுக்கொடுத்துள்ளது. இந்த தாக்குதல், சமுதாயத்தின் மேல் அதிர்த்தியுறும் தனிமனித நடத்தைகள், எதிர் காலத்தில் மிக மோசமான மனிதவிரோத தாக்குதலாக நடத்தப்பட வேண்டும் என்ற செய்தியையும் கொடுத்துள்ளது. இது குறிக்கோள் சார்ந்தும் குறிக்கோள் கடந்தும் இதுவே உலகமயமாதலின் அக்கபக்கமான தனிமனித கதாநாயகர் வடிவமாகியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவே இனி உலகின் தனிமனித பயங்கரவாதத்தின் உலக கண்ணோட்டமாகின்றது.

இவ் நடவடிக்கைகள் முதல் நடத்தைகள் வரை அமெரிக்கா சினிமாவில் முத்தமிட்டே, அங்கிருந்தே அரசியலாகின்றது. தனிமனித சாகச அரசியல் கண்ணோட்டம், மக்களின் போராட்டத்தை எதிரியாகவே எப்போதும் அடையாளம் காண்கின்றது, காட்டுகின்றது. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் புலிகளின் தலைவர் பிரபாகரன், 1980 களில் இந்தியாவில் வழங்கிய இயல்பான யதார்த்தமான பேட்டி ஒன்றில், அமெரிக்கா யேம்ஸ்பான்ட் சினிமாவில் இருந்தே தான் போராடக் கற்றுக் கொண்டதாக கூறியது, இங்கு குறிப்பிட்டுக் காட்டக் கூடிய ஒன்றாகும். அனைத்து வலதுசாரி தனிமனித நடவடிக்கைகளும், வலதுசாரி சினிமாவில் இருந்தே தமது காதநயாகர் நடவடிக்கையை தொடங்கி, அதில்தான் முடிக்கின்றனர். விமான மூலமான தாக்குதல் முதல் எந்த தாக்குதலுக்கும் இன்றைய தனிமனித காதநாயகர்களின் வக்கிர சினிமாவே, போதகராகவும் தந்தையாகவும் இருப்பது வரலாற்றின் தற்செயலானவையல்ல.

தனிமனித கதநாயக உலகத்தில் தனிமனித தற்கொலை போல், தனிமனித படுகொலைகள் எல்லையற்றன. உலகளவில் ஆயுதம் மூலமான வருட மரணம் 500 000 மாகும். வருடாந்தம் 55 கோடி ஆயுதங்கள் நடைமுறை புளக்கத்தில் இருக்கும் அதே நேரம், இதன் மூலமான மரணங்களில் 300 000 தனிப்பட்ட தகராறு மூலம் கொல்லப்படுகின்றனர். 200 000 லட்சம் மரணங்கள் அமைப்பு வடிவம் மூலம் நிகழ்கின்றது. தனிமனித படுகொலை மற்றும் தற்கொலை சமூக அமைப்பை பாதுகாத்தபடியே தான், பயங்காரவாத ஒழிப்பு பற்றி மெய் சிலிக்க புலம்புகின்றனர். அமெரிக்காவின் உலக ஆக்கிரமிப்பு பற்றிய நியாப்படுத்தல் ஊடாக, ஆப்கான் மக்கள் பற்றி ஆக்கிரமிப்பாளனும் அவனின் செய்தி அமைப்புகளும் மூக்கால் அழுது அக்கறையை வெளிக்காட்டுகின்றன. ஆப்கான் பெண்களின் மூடிக்கட்டிய அடிமை வாழ்வு முதல் ஆப்கான் மக்கள் எதையும் அறியாத இருட்டில் தத்தளிப்பதாக மூச்சுக்கு மூச்சு மூக்கால் சிந்தி புலம்புகின்றனர். ஆனால் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளனும் அவனின் எடுபிடி ஆதாரவாளர்களும், மூலதனத்தை வரைமுறையின்றி விரிவாக்க அனுமதித்த நாடுகளான சவுதி முதல் பல பத்து உலக நாடுகளில் தொடரும் இந்த கொடுமைகளையிட்டு ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. முதலாளித்துவ ஜனநாயகத்தை மறுத்த மன்னர் பரம்பரையிலான சர்வாதிகாரத்தையோ, இராணுவ ஆட்சிகளையோ, முதலாளித்துவ ஜனநாயகத்தையோ கேலி செய்யும் அரசுகளையிட்டு ஒரு வார்த்தை கூட பேசதவர்கள் பேச மறுப்பவர்கள், ஆப்கான் மக்களையிட்டு அழுவதற்கு என்ன அருகதை இருக்கின்றது. சவுதி முதல் அமெரிக்கா வரை பெண்களின் நிலை என்ன? ஆணாதிக்க அடிமைகளாக பெண்கள் இருப்பது என்னவோ உண்மையல்லவா! ஏன் அரசியலில் பெண்களின் பங்கு என்ன? உலகு எங்கும் ஆண்களின் அரசியல் அதிகாரம் ஆணாதிக்கமாக கொடி கட்டி பறக்கும் போது, ஆப்பகான் பெண்களையிட்டு அவர்கள் புலம்புவது ஆணாதிக்கத்தின் மற்றுமொரு மோசடியுடன் கூடிய அடக்குமுறையாகும்.



முஸ்லீம் மத அடிப்படைவாதிகள் நிலப்பிரபுத்துவ காட்டுமிராண்டிகளாகி, ஆப்கான் பெண்களை மூடிக்கட்டி அடிமைப்படுத்தி அடக்கி வைத்திருக்கின்றார்கள் எனின் அதற்கு நேர் எதிராக அமெரிக்காவில் பெண்ணை நிர்வாணப்படுத்தி அவளை விளம்பரக் கவர்ச்சி பதுமையாக்கியதன் மூலம், மூலதனத்தை குவிக்கும் ஒரு பாலியல் நுகர்வு பண்டமாகவே பெண்ணை மாற்றிவைத்துள்ளனர்.



அவர்ரவர் சமூக பொருளாதார நலனுக்கு இசைவாக பெண்ணை அடிமைத்தனத்தில் நிலை நிறுத்தியபடி, பெண்னை எதிர் நிலைக்கு பரஸ்பரம் கொண்டு வரும் போக்கு, மனித விடுதலையையோ பெண் விடுதலையையோ பெற்றுத் தருவதில்லை. இவை இரண்டும், பெண்ணின் இயற்கையான மனிதத் தன்மையை அங்கீகரித்து விடுவிக்கவில்லை. மாறாக பெண்ணின் அடிமைத்தனத்தை நிலப்பிரபுத்துவ கண்ணோட்டத்திலும், ஏகாதிபத்திய (முதலாளித்துவ) கண்ணோட்டத்திலும் நிலை நிறுத்துவதாகும். ஆப்கான் மக்களின் அடிமைத் தனத்தை, அவர்களின் சொந்த விடுதலைப் போராட்டத்தால் மட்டுமே சாதிக்கமுடியும். மாறாக ஏகாதிபத்திய கைப்பாவையாகி செயல்படுவதால் அல்ல. ஏகாதிபத்திய பண்பாட்டை கலாச்சாரத்தை திணிப்பதால் அல்ல. ஏகாதிபத்தியங்கள் மனிதப் படுகொலை யுத்தத்தின் ஊடாக உலகத்தையும் அந்த மக்களையும் ஏமாற்ற, மனிதாபிமான உதவி என்ற போர்வையில் வழங்கும் உணவும் கூட, ஏகாதிபத்திய மூலதனத்தை குவிக்கும் உணவை உண்ண பயிற்சி அளிக்கின்றனர். இதன் மூலம் எதிர்கால அமெரிக்காவின் அடிமை ஆப்கானில், மக்டொனல்களை திறக்கவும், ஆப்கான் உணவு பண்பாட்டு கூறுகளையும் அழிக்கும் மறைமுக யுத்தத்தையும் திட்டமிட்டே அமெரிக்கா நடத்துகின்றது. ஏன் 1992 இல் முஜாகுதீன்கள் காபூல் கைப்பற்றிய போது, பாகிஸ்தான் 400 அதிகமான புடைவை தொழிற்சாலைகளில் இருந்த இயந்திரங்களை கொள்ளை அடித்துச் சென்றது.

இது போன்றே இங்கு அழிவுகரமான யுத்தத்தை அமெரிக்கா ஆயுத முனையில் தொடரும் அதே நேரம், நுகர்வை தன்னை நோக்கி வரும் வகையில் உணவு உதவி யுத்தம் ஆப்கான் பாரம்பரிய உணவை அழித்தபடி, அவனின் பசித்த வயிற்றின் மேலாக திணிக்கின்றது. ஆப்கான் மக்கள் மேல் திணிக்கப்பட்ட யுத்தம் மற்றும் பண்பாட்டு கலாச்சார அழிவுகள் ஒருபுறம் நிகழ்கின்றன. மறு தளத்தில் நிலப்பிரபுத்துவ மதக் காட்டுமிராண்டிகள், அம் மக்களை கற்காலத்துக்கு அழைத்துச் செல்ல முனைகின்றனர். ஆப்கான் மீதான கடந்தகால ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகள் 22 லட்சம் மக்களை பலி கேட்டன. இன்று ஆப்கான் சனத் தொகையில் 70 சதவீதம் பெண்களாகியுள்ள ஒரு சமுதாயத்தில், பெண்கள் நாயிலும் கீழாக இழிவாக்கப்பட்டு அடிமை நிலைக்குள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். ஏகாதிபத்தியங்களின் துணையுடன் அமெரிக்காவின் மூலதனத்தின் செல்வ செழிப்புக்காக நடக்கும் புதிய ஆக்கிரமிப்பு, மேலும் ஆப்கான் மக்களை பலி கேட்கின்றது. அந்த பலியெடுப்பும் தொடங்கி விட்டது. இவ் இரண்டு அடக்குமுறையையும் எதிர்த்து ஆப்பகான் மக்கள் போராட வேண்டிய வரலாற்றுச் சூழலில் உள்ளனர்.




சீனா, ரசியா மன்னன் மகா அலெக்சான்டர், பிரிட்டின், சோவியத் என்று பல ஆக்கிரமிப்பை கண்ட ஆப்கான மக்களின் போராட்டம் என்பது, ஏன் இவர்கள் எல்லோரும் தொடர்ச்சியாக ஆக்கிரமித்தார்கள் என்ற வரலாற்று காரணங்கள் மேல் தம்மை அரசியல் மயமாக்கி ஆயுதமேந்தி போராட வேண்டும். இந்த நிலையில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு யுத்தத்தை முஸ்லீம் மதம் மீதான தாக்குதலாக, மத அடிப்படைவாதிகள் சித்தரிக்கின்றனர். ஆனால் எப்படி முஸ்லீம் மதம் அழிக்கப்டுகின்றது என்பதை மட்டும் விளக்குவதில்லை. அமெரிக்கா எதை அழிக்கின்றது? எதைக் கைப்பற்றி பாதுகாக்க முனைகின்றது? உலகமயமாதல் உலகத்தையே சூறையாடிவரும் இன்றைய நிலையில், தேசிய எல்லைகடந்த அனைத்தையும் அழிக்கின்றது. தேசிய பொருளாதாரத்தை அழிப்பதுடன், உள்ளூர் அதிகார வர்க்கமான நிலப்பிரபுத்துவ மத அடிப்படைவாத பிரிவுகளின் குறிப்பான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதார நலன்களையும்  அழிக்கின்றது. இந்த அதிகாரம் மற்றும் பொரளாதார நலன்களை பாதுகாக்க முனையும் ஒருபகுதியே, அதை முஸ்லீம் மதத்துக்கு எதிரான போராட்டமாக சித்தரிக்கின்றனர். இந்த நலன்களை அனுபவித்தபடி ஆட்சியில் இருக்கும் ஒரு பகுதியினர் ஏகாதிபத்தியத்தின் பொம்மைகளாக செயற்பட்டு கைக் கூலியாவதன் மூலம், தமது நலனை பாதுகாக்க முனைகின்றனர். அத்துடன் அதிகாரங்கள் சர்வாதிகார வடிவங்களாக சிலரின் நலன்களை மட்டும் திருத்தி செய்வதால், அதில் பங்கு பெற்றமுடியாத பிரிவுகளே முஸ்லீம் அடிப்படைவாதத்தை தமது அதிகாரத்துக்கான ஒரு வடிவமாக்கி, அதிகாரத்தை கைப்பற்ற முனைகின்றனர். ஏகாதிபத்திய கைக்கூலியை பெறமுடியாத பிற்போக்கு நிலப்பிரபுத்துவ மதவாத சக்திகள் தேசிய பூர்வ பிரிவுக்கு தலைமை தாங்கும் வகையில், சர்வதேச சமூகப் பொருளாதார நிலைமை ஊக்கியாகியது. இந்த மத அடிப்படைவாத பிரிவே தாக்குதலை முஸ்லீம் மத அழிவாக சித்தரிப்பதன் மூலம், தமது பிற்போக்கு நலன்களை தக்கவைக்கவும் அடையவும் முயல்கின்றன. பூர்சுவர்க்கம் தேசிய கூறுகளை முன்னிறுத்தி தலைமை தாங்கி போராட முடியாத சமூக பொருளாதார நிலைமைகளினால், இந்த பிற்போக்கு கூறுகள் உலகம் தழுவிய முஸ்லீம் என்ற, அடிப்படைவாத கோட்பாட்டில் தலைமை தாங்கிவிட முயலுகின்றன.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் ஏன் எதிரியாக உலகு எங்கும் இருக்கின்றனர்? அவர்கள் எதை அடைய உலகை அடக்கியாளுகின்றனர். ஏகாதிபத்தியம் முஸ்லீம் மதத்துக்கு எதிராக இன்னுமொரு மதத்தை பரப்புகின்றனரா? என்ற கேள்விகள் எழுப்பப்படாத வரை, போராட்டமும் தியாகங்களும் மக்களுக்கு எதிரானதாக, பிற்போக்கு காட்டுமிராண்டி காலகட்டத்தைச் சென்று அடைவதையே குறிக்கோலாக்கும். ஏகாதிபத்தியங்கள் உண்மையில் உலகமக்களின் உழைப்பை மலிவாக சுரண்டவும், தேசிய வளங்களை கொள்ளையிட்டு சூறையாடவும், இயற்கையை கொள்ளையடிக்கவுமே முனைகின்றன. இவை தாண்டி ஏகாதிபத்திய நலன்கள் என்பது எதுவும் இருப்பதில்லை. இதை எந்த தனிநபர் பயங்கரவாத வலது குழுக்களும் மக்களுக்கு சொல்வதுமில்லை. இந்த தனிமனித பயங்கரவாத குழுக்கள், அமைப்புகள், தாம் மட்டும் மக்களை சூறையாடும் உரிமையையே எப்போதும் கோருகினறனர். இதை வந்தடையவே மத அடிப்படைவாதத்தை ஒரு நெம்பாக பயன்படுத்துகின்றனர். ஏகாதிபத்தியங்கள் தமது சூறையாடும் பொருளாதார கண்ணோட்டத்தில் பண்பாட்டு கலாச்சாரக் கூறுகளை உருவாக்கி பழைய அனைத்தையும் அழிக்கின்றது. இது எந்த விதத்திலும் மதத்துக்கு எதிராக அல்ல. மூலதனத்தை விரிவாக்கும் பொருளாதார நலன்களை பெறறு எடுப்பதற்கு தடையான அனைத்தையும் ஈவிரக்கமின்றி அழிக்கின்றது. இது மதம் கடந்து, மொழி கடந்து, இனம் கடந்து, நிறம் கடந்து, பால் கடந்து, சாதி கடந்து, எல்லை கடந்து உலகை ஒரே குடையின் கீழ் கொண்டுவர முனைகின்றது. இதை சாதிப்பதற்கு மத அடிப்படைவாதத்தை வைத்திருப்பது அவசியம் என்பதில், ஏகாதிபத்தியத்துக்கு கருத்து முரண்பாடு கிடையாது. மதம் உள்ளவரை ஏகாதிபத்திய சுரண்டலை எதிர்த்து மக்கள் போராட்டம் என்பது பின் தள்ளப்படும். மத அடிப்படை வாதத்ததை முன் தள்ளிவிடுவதும், தனிமனித ஆன்மிக வழியில் விடுதலையையும் தீர்வையும் கோரி நிற்கும் வரை, ஏகாதிபத்திய பொருளாதாரம் விரிவு பெறவும் செழித்து வளரவும் முடியும். சில அடிப்படைவாத மதக் கூறுகள் மேல்






நம்பிக்கை இழந்த அதிர்ச்சியுறும் பிரிவுகளை அரவணைக்க, புதிய மத அடிப்படைவாதக் கூறுகளுடன் வளைத்துப் போடும் நடைமுறை விரிவாகவே, ஏகாதிபத்தியம் நிதி மற்றும் கோட்பாட்டு உதவிகளை தாரளாமாகவே வழங்கிவருகின்றன. இந்த வகையில் கம்யூனிசத்துக்கு எதிராக முஸ்லீம் அடிப்படைவாதத்தை வளர்த்தெடுப்பதில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியத்தின் பங்கு மிகப் பெரியதாகும். இங்கு ஒசாமா பில்லாடனின் பங்கு என்பது சிறுதுளிதான். ஒசாமா பில்லாடனுக்கு இஸ்லாமிய அறிவூட்டிய தந்தை வேறு யாருமல்ல, அமெரிக்கா உளவு அமைப்புதான்.

ஏகாதிபத்தியத்தின் சூறையாடும் பொருளாதர நலன்களை எதிர்த்து, பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் மக்கள் திரள் வழிகளில் போராடவேண்டும். தனிமனித பயங்கரவாத வழிகளில் அல்ல. இன்றைய பொருளாதார அமைப்பு சுரண்டல் அற்றதாக மாற்றப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தனது உழைப்புக்கு சொந்தம் கொண்டாடும் ஒரு சமூக அமைப்பை படைக்க போராாட வேண்டும். உனது உழைப்பில் உழையாது சுரண்டி வாழும் எந்த பிரிவையும் எதிர்த்து போராடவேண்டும் அது மதத்தின் பெயரில் வந்தாலும் சரி, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு வடிவில் வந்தாலும் சரி, இரண்டையும் எதிர்த்து போராடவேண்டும். எனது உழைப்பு, எனது அறிவு, எனது இயற்கையை தனிமனிதன் தன் பெயரில் தனது ஆக்குவதை எதிர்த்து, அதை சமூகத்தின் பொதுச் செல்வமாக்க வேண்டும். உழைக்கும் அனைத்து மக்களையும் மதம் கடந்து இனம் கடந்து, பால் கடந்து, நிறம் கடந்து, சாதி கடந்து நேசிக்கவேண்டும்.




அமெரிக்கா கோபுரங்களின் மேலான தாக்குதலை கண்மூடிக் கொண்டு ஆதாரிப்பது, உனது அறிவின்மையின் மேலானதாகவே இருக்கும். மத அடிப்படைவாதத்தின் காட்டுமிராண்டித்தனமான விளக்கங்கள் அனைத்தும் மக்கள் விரோதமானவையாகும். உழைக்கும் மக்கள் எங்கு இருப்பினும், அவர்கள் எங்கள் தோழர்களே. அவர்கள் உங்களுக்கு எதிராக இருந்தால், அதை அவர்களுக்கு விளக்கும் முயற்சியின் ஊடாக வென்று எடுக்க முயலவேண்டும். அதுபோல் தான் உனக்கு பின்னால் உள்ள மத அடிப்படைவாத கண்ணோட்டத்தை அகற்ற, அவர்கள் விளக்கி உன்னை வென்று எடுக்க முயலவேண்டும். உள்ளடகத்தில் ஏகாதிபத்திய தேசிய வெறியையும், மத அடிப்படை வாதத்தையும் பரஸ்பரம் எதிர் தளத்தில் களைந்தாகவேண்டும்.

அன்று நான்கு விமானத்தில் பறந்த அப்பாவி பயணிகள் எப்படி மக்களுக்கு எதிரியாக இருந்தானர். அன்று இடிந்து போன கட்டிட தொகுதியில் அன்றாட கூலிக்கு உழைக்கும் மக்கள், உனக்கு எப்படி எதிரியாக இருந்தான். அங்கு முஸ்லீம் மக்களும் அடங்குவர் என்பதை, ஏன் நீ புரிந்த கொள்ளவில்லை? அப்பாவி பயணிகளும், கூலிக்கு உழைக்கும் மக்களின் மரணத்துக்காக நாம் கண்ணீர் விடவேண்டும். அவர்களுக்கு நேர்ந்த இந்த துயரத்தில் பங்கு கொண்டு, இந்த ஈனச் செயலுக்காக நாம் கோவப்படவும் எதிர்த்து போராடவும் வேண்டும். இது படு கொலைகள் விதிவிலக்காக நடந்துவிடவில்லை. மக்களை வரைமுறையின்றி கொல்ல வேண்டும் என்ற வெறியுடன் தான் இவை நடந்தன.




மறுதளத்தில் அந்த கட்டிடத்தின் உயரத்தில் இருந்தபடி, உலகை எப்படி கொள்ளை அடிப்பது என்ற ஒரு கூட்டம் திட்டமிட்டபடி இருந்தது. அன்றாட உழைப்பின் சேமிப்புகளை பெறுமதியற்றதாக்கி உலகளவில் எப்படி பறிப்பது என்று உலகின் பல




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வங்கிகளும், பங்கு சந்தை மூலம் எப்படி மனிதனின் உழைப்பை அழிப்பது என்றும், உழைக்கும் மக்களை எப்படி வேலையை விட்டே துரத்துவது என்று ஆயிரக்கனக்கான வழிகளில், மக்களுக்க எதிராக திட்டம் திட்டிக் கொண்டு இருந்த எந்த அதிகார வர்க்கத்தையிட்டும் நாம் ஒரு துளி கண்ணீர் கூட சிந்தமட்டோம். இதுபோன்ற உலக மக்களை அடிமையாக்கி அழிக்க திட்டம் தீட்டிய படி, உலகு எங்கு கண்காணித்தபடி இருந்த பெண்டகன் இராணுவ அதிகார வர்க்கத்துகாக நாம் கண்ணீர் சிந்தவில்லை. மக்களுக்காக போராடுபவர்களை படுகொலை செய்ய கண்காணிக்கும் பெண்டகன் இராணுவ பயங்கரவாதிகளையிட்டு, அவர்களின் மரணத்தையிட்டு நாம் கவலைப்படவில்லை. அவர்கள் அணுக்குண்டுகளையும், இரசாயன ஆயுதங்களையும், உயிரியல் ஆயுதங்களையும் உற்பத்தி செய்தபடி, தமது மக்கள் விரோத பயங்காரவாதத்தை எப்படி மக்கள் மேல் கையளாலாம், எங்கே குண்டு போடலாம் என்று பல தளத்தில் இயங்கிக் கொண்டிருந்த இந்த மக்கள் விரோதிகளை இட்டு நாம் கவலைப்பட போவதில்லை. அவர்கள் தண்டனைக்குரிய மனிதவிரோத குற்றவாளிகளே. அவர்கள் தனிமனித பயங்கரவாத நடவடிக்கை மூலமல்ல, மக்கள் நீதி மன்றங்களில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேணடிய அளவுக்கு மக்கள் விரோதிகளே. ஆனால் தனிமனித பயங்கரவாதம் உழைக்கும் மக்களுடன் இந்த மக்கள் விரோதிகளையும் ஒரே தட்டில் இட்டு படுகொலை செய்யும் போது, மக்களோடு மக்களாக கலந்து ஒளித்துவிடுகின்றனர். மக்கள் என்ற பெயரில் புதிய அடக்கமுறைக்கு இவை துணைபோய்விடுகின்றது. மக்களின் வாழ்வை அழிக்கும், அவர்களின் உழைப்பை உறுஞ்சும் அட்டைகளின் மேலான யுத்தம், தனிமனித பயங்கரவாதத்தால் முடிவுகட்டிவிடுவதில்லை. சுரண்டலையும் அடக்குமுறையையும் தனிமனித பயங்கரவாதம் விரிவாக்குகின்றது. மக்களின் உழைப்பு உறிந்து வாழும் இந்த பன்றிகளின் எதிரியாக மக்கள் இருக்கும் போது, அந்த மக்களை அணிதிரட்டி மக்கள் திரள் வழிகளில் போராடுவதுதான் ஒரே மார்க்கம். அதைவிட்டு தனிமனித பயங்கரவாதம் என்பது மக்களில் நம்பிக்கையற்ற, ஏகாதிபத்திய காதநாயகர் பாணியிலான மக்கள் விரோதத் தன்மை கொண்டவையே.





இத் தாக்குதலை அடுத்த உலக பொருளாதாரமே சேதத்துக்குள்ளாகி நெருக்கடியில் சிக்கிவிட்டது. மூலதன பயங்காரவாதம் தனிமனித பயங்கரவாதம் போல் உழைக்கும் மக்களை வேலையில் இருந்து துரத்த பயங்கரவாத நெருக்கடியை மூலதனமாக்கின்றனர். ஒருபுறம் தனிமனித பயங்காரவாதம் உயிருடன் மனிதனை கொன்றுவிட, ஏகாதிபத்திய உலகமயமாதல் பொருளாதாரம் உயிருடன் உழைக்கும் மக்களை வதைத்து கொல்ல பின் நிற்கவில்லை. அதன் தொடர்ச்சியில் நளாந்தம் 35000 விமானப் பறப்பை கொண்ட அமெரிக்க விமானத்துறை ஒரு லட்சம் ஊழியர்களை வேலையில் இருந்து துரத்தும் பயங்கரத்தை அறிவித்துள்ளது. பொழுது போக்கு சார்ந்து நத்தார் வர்த்தகம் சார்ந்து நியுயோர்க்கில் மட்டும் 50 சதவீதம் வர்த்தகம் சரிவடைந்துள்ளதாக கூறி பலரை வீட்டுக்கு அனுப்புகின்றது மூலதனம். பிரிட்டிஸ் விமானச் சேவை தனது ஊழியரில் 7000 பேரை தனது பங்கு (யுத்தத்தில் பங்களிப்பது போல்) வேலையை விட்டு நீக்கியுள்ளது. தாக்குதல் நடந்து ஒருமாதம் கழித்த நிலையில், பிரிட்டிஸ் விமானச் சேவை தனது விமானப் பறப்பை கிழமை ஒன்றுக்கு 190 யால் (9 சதவீதமான விமானச் சேவையை) குறைத்துள்ளது. அத்துடன் அமெரிக்க விமானச் சேவை 120000







முதல் 140000 வேலையை இழப்பர் என்று அறிவித்துள்ளனர். அமெரிக்கா ஏகாதிபத்தியத்துக்கும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்கும் ஆழமாகியிருந்த விமான உற்பத்தி மற்றும் விமான சேவைக்கான மூலதன ஆதிக்க முரண்பாட்டு மேலும் ஆழமாகியுள்ளது இத் தாக்குதலை ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்கு சார்பாக மாறி, அமெரிக்க விமானத்துறை சார்ந்த அனைத்து மூலதனமும் ஆழமான நெருக்கடியில் சிக்கிவிட்டது. தனிமனித பயங்கரவாதத்தை கண்காணிக்கும் அதே தொழில் நுட்பம் தான் ஐரோப்பிய பொருளாதார வர்த்தகத்துக்கு எதிராக, அண்மையில் சவுதிக்கான பிரான்சின் விமான வர்த்தகத்தை ஒட்டுக் கேட்டு முறியடித்த போது, ஐரோப்பிய ஏகாதிபத்தியம் பிரிட்டனில் இயங்கும் அமெரிக்கா கண்காணிப்பு மையத்தை மூடக்க கோரி துள்ளிக் குதித்தனர். இந்த கண்காணிப்பு மையங்கள் கூட கம்யூனிசத்தை ஒழித்துக் கட்ட, அன்று உலக ஏகாதிபத்தியங்கள் உலகு எங்கும் நிறுவியதே. அது போன்று உலகு எங்கும் கம்யூனிசத்தக்கு எதிராக பல நூறு செய்தி வலைப் பின்னல்களை உருவாக்கி, பல மொழி ஒளிபரப்புகளையும் நிறுவினர். அதையே இன்று அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு உலகமயமாக்கும் நலனுக்கும் பயன்படுத்துகின்றது.

இன்று ஆப்கான் மக்கள் மேல் நடத்தும் ஆக்கிரமிப்பை ஏகாதிபத்திய செய்தியமைப்புகள் நியாப்படுத்தும் அதேநேரம், ஒவ்வொரு தனிமனிதனும் பயங்கரவாதியை கொல்வது போன்ற கம்யூட்டர் விளையாட்டுகளை உருவாக்கி, இலவசமாக உலகு உலவவிட்டுள்ளனர். பயங்கரவாதி என்ற பெயரில் படுகொலையை பல ஆயிரமாக நடத்தி வக்கரிக்கும் அமெரிக்கா வக்கிரத்தை கம்யூட்டரிலும் உருவாக்கியுள்ளனர். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை படுகொலை செய்யும் ரசனைக்கு கட்டமைக்கும் இந்த விளையாட்டுகள், பச்சை இனவாதத்தில் தொடங்கி மனிதவிரோத தனிமனித படுகொலை வக்கிரத்தையும் கற்றுக் கொடுக்கின்றது. இந்த தாக்குதல் நடந்தவுடன், நாசி கண்ணோட்டத்தில் இனவாதத்தை உச்சத்துக்கு மேற்கு செய்தியமைப்புகள் எடுத்துச் சென்றனர். அமெரிக்காவில் பல நூறு இனவெறி



தாக்குதல்கள் நடைபெற்றன. இது ஐரோப்பாவிலும் நடைபெற்றது. சுவீடன் விமானச் சேவையை சேர்ந்த ஒரு இன நிற வாத விமானி, அரபு பிரஜை ஒருவரை வலுக்கட்டயமாக விமானத்தில் இருந்து இறக்கிவிட்ட பின்பே விமானப் பறப்பை நடத்தினர். ''இஸ்லாமிய பயங்கரவாதி'' என்று அடையாளப்படுத்தி செய்தி அமைப்புகள் வெளியிட்ட செய்திகள், இன நிறவாதத்தை மேற்கில் ஊக்குவித்தன. அத்துடன் யுத்தத்துக்கு ஆதாரவான கண்ணோட்டம் இதை உச்சத்துக்கு கொண்டு போனது. மேற்கு அல்லாத அனைவரையும் பயங்கரவாதியாக காண்பது விளக்கவது, சர்வசாதரணமாக நிகழ்ந்தது. உதாரணமாக இலங்கையில் நடக்கும் ஒரு சம்பவத்தை, "தமிழ் பயங்கரவாதமாக" காட்டுவது ஏகாதிபத்திய இன நிறவாத வடிவமாகும். இது போன்று "இஸ்லாமிய பயங்கரவாதமாக" வருணித்த நிகழ்வு, மேற்கு எதிரான கண்ணோட்டத்தை உலகு எங்கும் உருவாக்கியது.





இவை நியாப்படுத்திய உலக ஆக்கிரமிப்புக்கும், உலகமயமாதல் பொருளாதார அமைப்புக்கும் பாதகமாக மாறிய நிலையில், மேற்கு தலைவர்களும் செய்தி அமைப்புகள் தீடிரென தமது பல்லவியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாற்றி வாசிக்கத் தொடங்கினர். அதேநேரம் தாக்குதலைத் தொடர்ந்து உச்சத்தில் இருந்த யுத்த ஆதரவு கண்ணோட்டம், யுத்தத்துக்கு எதிரான போராட்டத்தின் வளர்ச்சியுடன் படிப்படியாக சரியத் தொடங்கியது. யுத்த எதிர்ப்பு போராட்டங்கள் ஒழுங்கமைந்த வகையில் வளர்ச்சி பெற, இனவாத கண்ணோட்டம் படிப்படியாக கேள்விக்குள்ளாகி வருகின்றது. சமூகத்தை அரசியல் ரீதியாக சிந்திக்கவும், மேற்கின் ஆக்கிரமிப்பு நோக்கம் அரசியல் ரீதியாக அம்பலமாகி வருகின்றது.

உலகு எங்கும் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டங்கள் தெளிவாக இதை கற்றுக் கொடுக்கின்றது. அமெரிக்காவில் இன்று யுத்தப் பிரச்சாரமே ஒரே மொழியான நிலையிலும், அதைத் தாண்டி அதற்கு எதிரான 15 சதவீதமான மக்கள் உறுதியான எதிர்ப்பை அமெரிக்காவில் காட்டுகின்றனர். இது போல் கட்டிட இடிபாடுகளில் சிக்கி இறந்தவர்களில் கூட, இந்த யுத்த எதிர்ப்பு குரல்கள் இயல்பானது. ஏன் இந்த யுத்த பிரச்சாரத்தை எதிர்த்து 20.9.2001 அன்று 36 அமெரிக்கா அரசு பிரிவுகளில் இருந்து 146 பல்கலைக்கழகம் சார்ந்த 2000 மாணவர்கள், அமெரிக்காவின் யுத்தவெறிக்கு எதிராக ஒரு போராட்டத்தை அமெரிக்காவிலேயே நடத்தியுள்ளனர். நிறுத்து சண்டையை என கோசம் எழுப்பியுள்ளனர். குண்டு வெடித்தது முதல் பத்து நாளில் 500 மேற்பட்ட இனவெறி தாக்குதல்கள் அமெரிக்காவில் நடத்தப்பட்டுள்ளது. இருவர் கொல்லப்பட்டனர். பல முஸ்லிம் பள்ளி வாசல்கள் நொருக்கப்பட்டன. இதை எதிர்த்தும் கூட அமெரிக்க மக்களின் போராட்டம் நடைபெற்றுள்ளது. இவர்கள் எல்லாம் மக்களின் எதிரிகளா? இல்லை நண்பர்களா? மத அடிப்படைவாதம் இதையும் எதிரியாக காட்டியே, தனிமனித பயங்கரவாதத்தை மக்கள் மேல் தீர்வாக்குகின்றது. இன்று முஸ்லீம் மத அடிப்படைவாதம் அல்லாத யுத்த எதிர்ப்பு போராட்டங்கள், உலகு எங்கு நடக்கின்றன. நேபாளத்தில் (27.9.2001 20000 பேர் யுத்த எதிர்ப்பு, தனிநபர் பயங்காரவாத எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் பங்குகொண்டனர்) தொடங்கி அமெரிக்கா வரை இது யதார்த்தமாகியுள்ளது. உழைக்கும் மக்கள் தம்மைத் தாம் அடையாளம் காணவும், எதிரியை இனம் காணவும் தெரிந்து கொண்டு, மக்கள் திரள்வழி போராட்டத்தை முன்வைத்து போராட வேண்டியதே, உலகளாவிய ஒரே ஒரு மக்கள் போராட்ட வழியாகும்.


## ஏகாதிபத்திய கிருஸ்துவ புனித கூட்டில் உருவான வேரிதாஸ் வானோலிக்கு வெள்ளிவிழா



கிருஸ்துவ மதத்தின் பெயரில் உலகை அடிமைப்படுத்தும் காலனித்துவத்தை ஆதாரமாக கொண்ட கொள்ளையிலேயே, வத்திக்கான் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. இன்றைய வத்திக்கானின் செல்வச் செழிப்புடன் கூடிய அதிகாரமும் கூட, உலக மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆண்ட பரம்பரையின் எச்சங்களே. மற்றவன் உழைப்பை உறுஞ்சியபடி வத்திக்கானின் அதிகார பீடங்களில் கொழு வீற்றிருக்கும் பன்றிகள் 1958 இல் எடுத்த முடிவுக்கு இணங்க, ஆசிய மக்களின் உழைப்பை நிபந்தனையின்றி வேட்டையாட ஒரு வானொலியின் தேவையை உணர்ந்தது போன்று ஏகாதிபத்தியமும் உணர்ந்தது. 1960 ஆண்டு மேற்கு ஜெர்மனியிடம் இதற்கான பணத்தை வத்திக்கான் கோரியது. ஏகாதிபத்தியமும் கிருஸ்துவ மதமும் இணைந்து மக்களின் உழைப்பை சுரண்ட, மக்களை மதத்தின் பின் அடிமைப்படுத்தி செம்மறிகளாக்க,



1963 இல் ஜெர்மன் ஏகாதிபத்திய பாராளுமன்றம் இந்த வானொலியை அமைக்க நிதியை வழங்கியது. இந்த எகாதிபத்திய கிருஸ்துவ கூட்டு வானொலியான வெரிதாஸ், 17 ஆசிய மொழியில் தனது செம்மறிகளைத் தேடி இன்று களத்தில் உள்ளது. இந்த ஏகாதிபத்திய கிருஸ்துவ வானொலி, 2000 ஆண்டில் 126 000 நேயர் கடிதத்தை பெற்றதாம். இதில் அரைப்பகுதி இலங்கை தமிழருடையது என்பது கவனத்துக்குரியதாக எம்முன் உள்ளது.



இந்த எகாதிபத்திய கிருஸ்துவ புனித கூட்டு வெரிதாஸ் வானொலியின் தமிழ் மொழி ஒளிபரப்புகான வெள்ளிவிழாவை, அண்மையில் இலங்கைத் தமிழர்கள் பிரமாண்டமாக பெரும் தொகை பணம் செலவு செய்து கொண்டாடிக் கோமாளிக் கூத்துமாடினர். தமிழ் சேவையை நடத்தும் ஜெகத் கஸ்பர் அழைக்கப்பட்டு, அவருக்கே வெள்ளிவிழா நடத்தினர் மானம் கெட்ட தமிழர். விழாவே அவருக்குத்தான் என்பதும், அவர் தமிழ் மக்களின் தேசியத்தை தவறாக நிலைநிறுத்தி பிழைக்கும் கிருஸ்துவத்தை சர்வதேசமயமாக்கினர் என்பதால்தான் இந்த வெள்ளிவிழா. அதாவது தேசிய போராட்டத்தை சொல்லி வியாபாரம் முதல் பத்திரிகை வானொலி ஈறாக எத்தனையோ பிழைப்புகளை நடக்கின்றன. அதேபோல் இவர் கிருஸ்த்துவத்தை உலகமயமாதல் குடையின் கீழ் பரப்பியவர். மக்களின் அறியாமையை தேசியத்தின் குடையின் கீழ் பாதுகாத்து வளர்ப்பதே, இவரின் கிருஸ்துவ பிழைப்புவாதமாகும். மதத்தை அறிவியலுக்கு புறம்பாக திணிக்கும் கிருஸ்துவம், தேசியத்தை தேசிய உள்ளடகத்தின் மேல் அல்ல, அதை ஏகாதிபத்திய உலகமயமாதல் காலனிய உள்ளடகத்துக்குள்ளான அறியாமை மேல் கட்டமைப்பதே இவரின் குறிப்பான கிறிஸ்துவ பங்கும் செயலாகும். அதாவது தேசியம், தேசிய வளத்தை அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொண்ட பொருளாதாரத்தையும், அதன் அடிப்படையில் அரசை நிறுவவும், அதன் பாற்பட்ட கலாச்சார கூறுகளையும் வளர்த்தெடுப்பது அடிப்படை நிபந்தனை. இது அனைத்து மத நிலப்பிரபுத்துவ உறவுகளையும் களையவேண்டும். களையாத வரை அந்த தேசியம் என்று எதுவும் இருப்பதில்லை. தேசிய பொருளாதார அடிப்படையில் சர்வதேச உறவுகளை, அரசியல் மதம் என அனைத்தின் மேலும் கையாள்வதே தேசியத்தின் சிறப்பு பண்பாகும். குறிப்பாக இன்றைய உலகமயமாதலை எதிர்த்தே தேசியம் இருக்கமுடியும், உயிர் வாழமுடியும். இதற்கு வெளியில் தேசியம் என்பது கற்பனையே. இதை ஏற்றுக் கொள்ளாத, இதை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் போராடாத யாவரும், தேசியத்தை தமது சொந்த குறிக்கோள் சார்ந்து பயன்படுத்துபவர்களே. இந்த வகையில் தான் வெரிதாஸ் வானொலியின் தமிழ் மூலம் ஜெகத் கஸ்பர் நடத்தும் தேசிய மற்றும் கிருஸ்துவ பிழைப்புவாத "அருட்பணி" நீடிக்கின்றது. புலம் பெயர் சமூகத்தில் அண்மைக் காலமாக வேகமாக நடக்கும் கிருஸ்துவ மதமாற்றம் போன்று, மற்றொரு வழியில் தேசியத்தின் மேலான அறிவற்ற முட்டாள் தனத்தில் இந்த "அருட்பணி" நடக்கின்றது. தமிழன் தனது சொந்த அடையாளத்தைக் கூட வரலாற்று ரீதியாக அடையாளப்படுத்தி இனம் காண முடியாத குருட்டுத் தனத்தின் மேல், ஏகாதிபத்தியமும் கிருத்துவமும் போதகர்களுக்கு வழங்கும் விசேட புத்தியீவி அறிவை பயன்படுத்தியே இந்த "அருட்பணி" நடக்கின்றது




இந்த "அருட்பணி"யின் தொடர்ச்சியில் ஜெகத் கஸ்பர் வெளிநாட்டு தமிழர்களைப் பார்த்து கூறுவதைப் பார்ப்போம். "ஒரு சமுதாயத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒட்டுமொத்த அழிவால் இது உங்களுக்கு கிடைத்த வாழ்க்கை என்றால், அந்த சமுதாயத்திற்கு பதில் சொல்ல வேண்டியது உங்கள் மனச்சாட்சியின் கடமை. உங்கள் வாழ்வுக் கடமை. உங்கள் ஆன்மீகக் கடமை. அதுவே நீங்கள் கடவுளுக்குச் செய்யும் புண்ணியமான கடமை" என்று வெள்ளிவிழா மலரில் எழுதுகின்றார். ஒட்டுமொத்த சமுதாய அழிவு என்றால் என்ன? ஒரு மக்கள் போராட்டம் சமுதாயத்தை அழிப்பதில்லை. மாறாக சமுதாயத்தின் வளர்ச்சி நிலைக்கு அல்லவா மக்கள் போராட்டம் நடக்கின்றது. இதை மறுத்து நாசுக்காக போராட்டத்தின் மேல் வீசும் சேறு, இங்கு போராட்டத்தை ஆதரிப்பது போல் நடக்கின்றது. மக்கள் போராட்டம் அல்லாத தனிமனித பயங்கரவாத போராட்டம் ஒரு சமூகத்தை எப்போதும் அழிக்கின்றது. சமுதாயத்தின் அழிவால் புலம் பெயர் வாழ்க்கை கிடைத்தது என்றால், இவர்களா சமுதாயத்தை அழித்தனர்? அழிகின்ற போது இலாபம் அடைகின்றவன் தான் அழிக்கின்றான். இங்கு புலம் பெயர் சமூகமா சமுதாயத்தை அழித்தது! உங்களுக்கு கிடைத்த வாழ்க்கை என்ற மெச்சும் கண்ணோட்டம், நக்கி வாழும் மேற்கு அடிமை வாழ்க்கையை கிருஸ்துவ கண்ணோட்டத்தில் போற்றுவதாகும். ஒட்டு மொத்த சமுதாய அழிவால் கிடைத்த வாழ்வு சார்ந்து பதில் சொல்ல வேண்டியதே புலம் பெயர் சமூகத்தின் கடமை. அதுவே கடவுளுக்கு செய்யும் கடமை. என்ன விசித்திரமான கிருஸ்துவ பிதற்றல். ஒரு சமுதாயம் அழிகின்றது என்றால் எப்போதும் அழிப்பவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். ஆனால் புலம் பெயர் சமூகம் பதில் சொல்ல வேண்டும் என கிருஸ்துவம் கோருவது ஏன்? இந்த நிலையில் புலம் பெயர் சமூகம் மண்ணில் இருந்து பிரிந்து, சொந்த பண்பாட்டு கலாச்சார கூறுகளை இழந்து, அன்னிய மதங்களின்( கிருஸ்துவ) பிடியில் சிக்கி ஆழமாகவும் அகலமாகவும் சிதைந்து வருகின்றனர்.

ஒருபுறம் இனவெறி சிங்கள் அரசுகள் எமது சமூகத்தை அழிக்கின்றது. அதனுடன் தமிழ் குறுந் தேசிய போராட்டமும் சமூகத்தை அழிக்கின்றது. இவர்கள் தான் அழிவுக்கு பதில் சொல்ல வேண்டும். வத்திக்கான் கிருஸ்துவ அதிகார பீடம் பல நூற்றாண்டாக கையாண்ட, காலனித்துவ கொள்கையே, தமிழ் மக்களின் அழிவுக்கும் வித்திட்டது. இலங்கை காலனியாக இருந்த வரலாற்றுச் சூழல் இன்றைய நிலைக்கு பிரதான காரணம். வத்திக்கானின் கிருஸ்துவமும் மேற்கும் புனித கூட்டு அமைத்து உலகையே மேற்கின் காலனியாக்கிய வரலாற்று வழியில் தான், எமது தேசிய இனப்பிரச்சைன இன்று நீடிக்கின்றது. இன்றும் ஏகாதிபத்தியமும் கிருஸ்துவமும் வைத்திருக்கும் புனித கூட்டே, ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதல் விரிவாகத்தை அங்கீகரிக்கின்றது. மறுகாலனியாக்கத்தை புனித கூட்டு அங்கிகாரித்து தேசிங்களுக்கு எதிராக குழிபறிக்கின்றது கிருஸ்துவம். புனிதகூட்டின் அடிப்படையில் ஏகாதிபத்திய விரிவாக்கத்தை ஆதாரிப்பதும், தேசிய போராட்டங்களை (தமிழ்) அழிப்பதும் நிகழ்கின்றது. எமது தேசிய சுயநிர்ணயத்தை கொள்கை ரீதியாக அங்கீகரிக்கவும், அதற்கு ஆதாரவாக இலங்கை ஆக்கிரமிப்பையும் வத்திக்கானால் விமர்சிக்க முடியுமா? தமிழ் மக்கள் மேல் ஆய்வு என்ற பெயரில் நடக்கும் கிருஸ்துவமும் தமிழ் குறுந்தேசிய புனித கூட்டுடன் கூடிய பிதற்றல்களை விடுத்து, உனது புனித ஆணாதிக்க கிருஸ்துவ தந்தைகளின் கடந்தகால வரலாற்று அடக்குமுறைகளையும், அதன் இன்றைய நீட்சியையும் ஆய்வு செய்யாத பிழைப்பவாதிகளே, தமிழ் மக்களை பற்றி மூக்கால் அழுகின்றனர். இலங்கையில் நேரடியான செய்தி சேகரிப்பில் ஈடுபடாதவர்கள், அங்கு இருந்து வரும் அரசு மற்றும் புலி சார்ந்த செய்திகளை வளைத்து நெளித்தும் ஒரு பக்க சார்பாக திரித்து கூறும் "அருட்பணி" உண்மையில் போலித்தனமானவை.



இந்த ஏகாதிபத்திய குறுந்தேசிய கிருஸ்துவ புனித கூட்டுக்கு இணங்க ஜெகத் கஸ்பார் "அருட்பணி"யின் தொடர்ச்சியில் சிலவற்றை பார்ப்போம். அண்மையில் அமெரிக்கா மேல் நடந்த தாக்குதலை அடுத்து, அவரின் கருத்துகள் புனித கூட்டை பிரதிபலிக்க தயங்கவில்லை. அவர் "தாடி வளர்த்தல், பர்தா அணிதல் உள்ளிட்ட தாலிபானின் ஏனைய பைத்தியக்காரத் தனங்களை நாம் ஏற்கனவே அறிந்திருக்கின்றோம். ... இதுதான் இஸ்லாம் என்றால் ஹிட்லரின் நாஜிக் கொள்கைக்கும் இஸ்லாத்திற்கும் வேறுபாடு இல்லை." என்கிறார். என்ன அருமையான வாதம். ஐயா, உனது கிருஸ்துவத்தின் இருண்ட மக்கள் விரோத வரலாற்றை மறந்து போனது ஏன். "புனித பைபிளின்" பெயரில் அதில் உள்ள முட்டாள் தனமான காட்டு மிராண்டித்தனங்களை எல்லாம் சொல்லி அதையே இன்றும் புனிதமாக பிதற்றும் உங்களுக்கு, முஸ்லீம் அடிப்படைவாத காட்டுமிராண்டிகள் உங்களைப் போல் "புனிதகுரானின" மூலம் நடத்தும் வக்கிரங்களை கண்டிக்கும் எதிர்க்கும் தார்மிக பலம் கிடையாது. உங்கள் கிருஸ்துவ பைத்தியக்காரத் தனங்கள் "புனித பைபிளில்" வக்கரித்துக் கிடப்பதை மறந்து, மற்றவனை குற்றம் சாட்டி நிற்பது தான் வேடிக்கை. இங்கு வேறுபாடு முஸ்லீம் அடிப்படைவாதம் மக்களிடையே ஆழமாக வேர் ஊன்றி அதிகாரத்தை நிலைநிறுத்த முனைகின்றது. கிருஸ்துவ அடிப்படைவாதம் அதிகாரமிழந்து ஏகாதிபத்தியத்தின் குண்டி கழுவி நக்கி பிழைக்கின்றது.



இந்நிலையில் கிருஸ்துவம் பெண்கள் கிருஸ்துவ போதகராக வர ஆணாதிக்க ஜனநாயகத் தடை. ஆண்போதகர் மற்றும் பெண் கன்னியாஸ்திரிகள் திருமணம் மற்றும் பாலியலில் ஈடுபடத் தடை. இவை எல்லாம் பைத்தியக்காரத் தனமில்லையா? பைபிளை அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொண்ட கிருஸ்துவம் "புனித பைபிளின்" பெயரில் நடத்தும் கூட்டுத் தற்கொலைகள், படுகொலைகள் எல்லாம் கிருஸ்துவத்தின் உள்ளீடுதான். கிருஸ்துவத்தின் வெவ்வேறு பிரிவுகள் "புனித பைபிளின்" விதிப்படி மருந்து குடிக்கத் தடை, இரத்தம் ஏற்றத் தடை என்ற எணணற்ற பைத்தியக்காரத்தனங்களின் காட்டுமிராண்டித்தனத்தை என்ன என்பது. ஏன் பைபிளின் பெயரில் அறிவியல் விஞ்ஞானிகளை உயிருடன் "புனித சிலுவையில்" அறைந்து தீயிட்ட நீங்கள், மற்றவனை குற்றம் சாட்ட எந்த உரிமையும் தார்மீகப் பலமும் கிடையாது. கிட்லரின் நாசிசத்துக்கு வேறுபாடு கிடையாது என்பது சிரிப்புக்குரிய ஒன்றாகும். கிட்லர் யாருடன் முரண்பட்டான். உலக மூலதனச் சந்தையை அடிப்படையாக கொண்டு நடந்த ஏகாதிபத்திய உலக விரிவாக்க நலன்களைச் சார்ந்தே, கிட்லர் உருவானவன். முதலாம் உலக யுத்தம் போல் இரண்டாம் உலகயுத்தம் ஒரே நோக்கத்துக்காக நடத்தப்பட்டது. இன்று ஏகாதிபத்தியம் செய்து குவிக்கும் ஆயுதங்களும் அதே நோக்கத்தில் தான். ஏன் புனித கிருஸ்துவம் அதிகாரத்தில் இருந்த போது, தனது காலனிய விரிவாக்கத்தை உலகத்தில் தொடங்கிய போது, கிட்லரை விட மிக மோசமான வகையில் மனித இனத்தை அழித்தவர்களின் குழந்தைகள், இன்று மற்றவனைச் சாடி கிருஸ்துவத்தை உலகமயமாக்குவது தான் வேடிக்கையானது. இதற்கு ஏகாதிபத்திய பக்கத்துணையாக இராணுவ ஆக்கிரமிப்புகள், நிதி மற்றும் அறிவியலால் துணைநிற்கின்றது. அவுஸ்திரேலியா முதல் அமெரிக்க செவ்விந்தியர்களின் தோலை உயிருடன் உரித்தது வரை, சில பத்து கோடி காலனிய மக்களை கொன்று குவித்த கிருஸ்துவம், அந்த மக்களை கொள்ளையடித்தும் உழைப்பை உறுஞ்சியும் தன்னை ஒரு உலக விரிவாக்க மதமாக நிறுவிய தொடர்ச்சியில் தான், அதன் கைக்கூலிகளான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெகத் கஸ்பர் தனது "அருட்பணி"யைத் தொடருகின்றார்.



மேலும் அவர் "தவறான ஒழுக்கத்தில் பிறந்ததென சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கக் கூட துப்பாக்கியால் தலையில் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றியிருக்கின்றது" ஏகாதிபத்தியம் போல் என்ன சமூக அக்கறை. ஐயா உங்கள் புனித சிலுவைகளில் இதே காரணத்துக்காக எத்தனை லட்சம் பெண்களை உயிருடன் அறைந்து தீயிட்ட வரலாற்றை மறந்து இப்படி கூறலாமா? ஆப்கான் பெண்கள் குழந்தைகளின் ஒழுக்கத்தின் மேலான இஸ்லாமிய அடிப்படைவாத படுகொலை வன்முறைகளையிட்டு, கிருஸ்துவ "புனித பைபிளை" தொழுபவர்கள் கருத்து சொல்ல என்ன தார்மிக அருகதையிருக்கின்றது. இன்றும் அதே "புனித பைபிள்" காலத்தின் தேவையுடன் பிழைக்க பல மாற்றத்தை கண்ட போதும், அதே ஆணாதிக்கம் கொலுவீற்று பெண்ணை அடிமையாக இருக்க போதிக்கின்றது. ஐரோப்பிய ஆணாதிக்க வரலாற்றில் அடிமைகளாக பெண்களை ஒடுக்கிய "புனித பைபிள்", அப் பெண்களின் ஒழுக்கம் மேல் நடத்திய சித்திரவதையையும் படுகொலைகளையுடன் கூடிய கிருஸ்துவத்தின் இருண்டகால வரலாற்றை வெளி உலகுக்கு காட்ட மறுக்கும் கிருஸ்துவ ஜனநாயகத்தில் தான், இன்றும் "அருட்பணி"கள் தொடர்கின்றன. அதே "புனிதபைபிள்" அதே ஆணாதிக்க கிருஸ்துவத்தின் தொடர்ச்சியில், முஸ்லீம் அடிப்படைவாதம் மீதான ஒருதலைபட்சமாக தாக்குதல் அனைத்தும் ஏகாதிபத்திய நலன்களை பாதுகாப்பதே. வத்திக்கானின் ஆசி பெற்ற அமெரிக்க "புனிதபைபிள்"வாதிகள் அமெரிக்கா கொடியுடன் ஆப்கான் ஆக்கிரமிப்பு யுத்த பிரார்த்தனைகளை புனிதபைபிளின்" "புனித" மேற்கோளுடன் நடத்துகின்றனர்.

மேலும் இந்த ஏகாதிபத்திய நலன் சார்ந்த கிருஸ்துவ தூதர்கள் "விதவைகளை உன் சொந்தத் தாய்போலக் கருதி கருணை காட்டு என்று சொல்லி வந்தவர் முகம்மது நபி அவர்கள். ஆனால் விதவைகள் ஆண்களின் மனச்சபலத்திற்கு காரணமானவர்கள் என்பதால் நூற்றுக்கணக்கான விதவைத் தாய்மார்களை உயிரோடு புதைத்திருக்கின்றது." என்று குற்றம்சாட்டும் நீங்கள், உங்கள் புனித பைபிளின் பெயரில் செய்யாதையா அவர்கள் செய்கின்றனர் என்கின்றீர்கள். அவர்கள் உயிருடன் புதைக்கின்றார்கள், நீங்கள் உயிருடன் எரித்தீர்கள். கிருஸ்துவ மதத்தின் உலக விரிவாக்க போதகர்கள் தமது வரலாற்றை இருட்டில் வைத்தபடி, மற்றவனை குற்றவாளியாக்குவது ஏகாதிபத்தியத்தின் உலகமயமாக்கல் பலத்தில் தான். கிருஸ்துவம் விதவைத் திருமணத்தை எற்றுக் கொள்கின்றதா? விவாகரத்தை எற்றுக் கொள்கின்றதா? அதே காரணத்தை அடிப்படையாக கொண்டே, இஸ்லாமிய அடிப்படைவாதமும் திகழுகின்றது. அதன் மேல் தனது வக்கிரத்தை வேறுபட்ட வடிவில் திணிக்கின்றது



மேலும் அவர் "நாஜி வதைமுகாம்களில் யூதமக்களைப் போலத்தான் இன்றைய அப்பாவி ஆப்கான் மக்களும்" என்கின்றார். நாஜி முகாம் படுகொலைக்கு, அப்போதைய வத்திக்கான் போப் கம்யூனிசத்துக்கு எதிராக, மக்களை சுரண்டும் உரிமைக்காக கிட்லருடன் கூடி வழங்கிய "புனித ஆசியி"லேயே நிகழ்ந்தவை. வத்திகானின் அதிகாரம் கொடிகட்டி பறந்த காலனிய காலத்தில் காலனி மக்களை கொல்ல வழங்கிய ஆசி செய்தியைப் போல், அதே நோக்கத்தில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாசிகளுக்கு வத்திகான் போப் ஆசி வழங்கினான். வத்திக்கானும் நாசிகளும் உருவாக்கிய "புனித கூட்டு" தான் நாசிய வதை முகாமாகி கள்ளக் குழந்தையாக பெத்துப் போட்ட



வரலாற்றை மூடிமறைத்தபடி, மற்றவனை குற்றம் சாட்டும் ஏகாதிபத்திய முகத்துடன் கூடிய ஆசியை செய்தியாக்கின்றனர்.

மேலும் அந்த ஆசி செய்தியில் "... தலிபான் காட்டு மிராண்டிகளால் வல்லுறவுக்கு உள்ளாகிச் சிதைந்து கிடக்கும் ஓர் அப்பாவி இளம் பெண்ணை ..." என்ற கூறுவது, வரலாற்றை உயிருடன் புதைப்பதாகும். தலிபானை சீராட்டி வளர்த்து ஆளாக்கியது அமெரிக்கா ஏகாதிபத்தியமே. இதற்கு வத்திகானின் ஆசியுடன் கூடிய எதிர்ப்பற்ற அங்கீகாரத்தை வழங்கியவர்கள் இவர்கள். ஏகாதிபத்திய பொருளாதார நலன்களே அங்கு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாகி, அந்த மண்ணும் வளமும் சிதைந்தது. ஏகாதிபத்தியம் சொல்வது போல் கிளிப் பிள்ளயைாக கிருஸ்துவமும், நாட்டை தலிபான் சிதைத்தாக கூறுவது வரலாற்றை கிருத்துவம் போல் மூடிமறைப்பதாகும். ஏன் அமெரிக்கா தலைமையில் ஆப்கான் மேல் தொடங்கிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, பல பத்து லட்சம் ஆப்கான் மக்களை வரலாறு காணத வகையில் நாடு கடந்த அகதியாக்கியுள்ளது. சிதைந்த நாட்டை தூசு மண்டலமாக்கும் அமெரிக்காவின் குண்டுவீச்சு, மக்களின் இரதத்தால் தணிக்கின்றது.



இந்த ஆக்கிரமிப்பை எப்படி செய்யவேண்டும் என கிருத்துவம் கூறும் ஆலோசனையை பார்ப்போம். "ஹிட்லரின் படைகளை முறியடித்து நாஜிக் கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வந்தது போல் தலிபான் - ஒசமா பின்லாடனின் மனநோய் பிடித்த குற்றக் கும்பலின் பிடியிலிருந்து அப்பாவி ஆப்கான் மக்களை விடுவிக்க உலக சமுதாயம் இணைந்து முயற்சி மேற்கொள்ளுமேயானால் அதனை நாம் வரவேற்கின்றோம்." என்ன அருமையான ஆக்கிரமிப்பு மறு காலனித்துவ வாதம். உலக சமூகம் என்பது உலகமயமாதல் அதிகாரத்தை கொண்ட சமூகம் தான். ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாக ஆப்கான் அடிமைப்பட்டு அடங்கி வாழ, உலக சமூகம் ஒத்துழைக்க அழைக்கின்றார். தேசிய வளத்தையும், சொந்த உழைப்பை ஏகாதிபத்திய சுரண்டலுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் அமைதியான சமாதானமே ஆப்கான் மக்களுக்கு தீர்வு என்கிறார். இதைத் தான் அவர் தமிழ் மக்களுக்கு தீர்வு என்கின்றார். இங்கு எல்லாம் கிருஸ்துவம் கொடிகட்டி பறந்தால் சிறப்பு என்று சொல்லாமல் சொல்லுகின்றார் கிருத்துவ உலக விரிவாக்க வாதிகள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லீம் மக்கள் மீதான வன்முறையும் அதற்கு எதிரான போராட்டமும்

முஸ்லீம் மக்கள் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றப்பட்டு 10 வருடங்கள் கடந்த நிலையிலும், எந்தவிதமான அடிப்படை உரிமைகளும் இன்றி வாழ்விழந்து ஒடுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் தமிழ் அடிமையாக உயிர்வாழ்கின்றனர். 1990 ஐப்பசி மாதம் 30 ம் திகதி வடக்கில் இருந்து 48 மணி நேரத்தில் அனைத்து பாரம்பரிய தலைமுறை உழைப்பையும் பறித்தெடுத்த பின்பு, சொந்த மண்ணில் இருந்து ஈவிரக்கமின்றி துரத்தப்பட்டனர். முஸ்லீம் மக்களுக்கு இழைத்த துரோகம், தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணயத்துக்கான விடுதலைப் போராட்ட சீரழிவை மீண்டும் ஒரு முறை நிறுவியது. புலிகளின் குறுந் தேசிய இனவாதம் தமிழ் மக்களின் தேசியத்தையே மறைமுகமாக கேலி செய்து ஒடுக்கியதையே நிரூபித்தது.

சொந்த மண்ணில் இருந்து வேரோடு பிடுங்கப்பட்டு, எந்தவிதமான காரணத்தையும் முன்வைக்காது இரவோடு இரவாக ஆயுத முனையில் துரத்திய நிகழ்வு, தமிழ் மக்களின் வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் ஒரு கறுப்புநாள்தான். இந்த நிகழ்வையிட்டு இலங்கையின் அனைத்து சமூகங்களும், ஆதரவாகவோ எதிராகவோ ஒரு நிலைப்பாட்டை எடுத்தனர். புலிகளின் இந்த மனித விரோத நிலைப்பட்டை எதிர்க்காது மௌனம் சாதித்த அனைவரும், ஏதோ ஒரு விதத்தில் குற்றவாளிகளே. முஸ்லீம் மக்களுக்கு இந்த நிலைமை ஏற்படவும், இழைக்கப்பட்ட கொடூரத்தை முடிவுக்கு கொண்டு வரமுடியாத ஒரு நிலைமை தொடர்வதற்கும், மார்க்சியவாதிகளாகிய நாங்கள் (இங்கு தமிழ், முஸ்லிம், சிங்கள...) பொறுப்பாளிகளே.



இலங்கையில் பாட்டாளி வர்க்கம் தனது அதிகாரத்துக்கான வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்க தவறிய வரலாற்றுத் தொடர்ச்சியில் தான், தேசிய விடுதலைப் போராட்டம் முன்னுக்கு வந்தது. இந்த தேசிய விடுதலைப் போராட்டம் கூட ஜனநாயகக் கோரிக்கையின் உள்ளடக்கத்தில், ஒரு வர்க்கப் போராட்டத்தை அடிப்படையாக கொண்டது என்பதை பாட்டாளி வர்க்கம் புரிந்து கொள்ளத் தவறிய நிலையில், வலது குறுந் தேசியவாதம் தேசியவிடுதலைப் போராட்டத்தின் தலைமைக்கு வந்தது. இந்த வலது தேசியவாதம், குறுந்தேசிய கண்ணோட்டத்தில் மற்றைய இனங்களை எதிரியாக அடையாளம் காட்டியே தன்னையே கட்டமைக்கின்றது. இந்த குறுந்தேசிய இனவாத கண்ணோட்டம் மட்டுமே, அதன் பிரதான மையமான அரசியல் கோசமாக இருந்தது. மற்றைய இன மக்களை எதிரியாக காட்டிய அரசியல், மற்றைய இன மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கவும், அவர்களை எதிரியாக காட்டி ஒடுக்கவும், ஒழிக்கவும் வழிகாட்டியது. தமிழ் தேசிய விடுதலை போராட்டத்தில் ஆயுதம் ஏந்தி போராடிய அமைப்புகளின் அரசியல் வரையறை இதுவாகவே இருந்தது. பிந்திய காலத்தில் இதன் வளர்ச்சிப் போக்கில் புலிகள் தமது இராணுவ வலிமையில் உயர்ந்த அதிகாரத்தை பயன்படுத்தி ஒடுக்குவதில், ஈவிரக்கமற்ற மனிதவிரோதத்தை கையாண்டனர்.

இந்த வகையில் சிங்கள மற்றும் முஸ்லீம் அப்பாவி மக்கள் மீதான இனப் படுகொலை தாக்குதல்கள், கூட்டம் கூட்டமாக கொன்று குவிப்பதில் வளர்ச்சி பெற்றது. இந்த குறுந்தேசிய இனவாதமே, புலிகளின் அரசியலில் மையமான நடவடிக்கைக் கண்ணோட்டமாக மாறிய நிலையில், மற்றைய இன போர்வீரர்கள் யுத்தத்தில் சரணடைந்தாலும் கொன்றுவிடும் போராட்டமாக மாறியது. இது போராட்டத்தை பாரிய பின்னடைவுக்கு இட்டுச் சென்றுள்ளது. எதிரி சரணடைவதைவிட கூலிக்கு போராடி மரணிப்பது மேல் என்றளவுக்கு, போராட்டத்துக்கே இது பாதகமாகியுள்ளது. இந்த குறுந்தேசிய இனவாதத்தை அடிப்படையாக கொண்ட புலிகளின் பல்வேறு நடவடிக்கையின் மூலம் முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரமான வரலாற்று தொடர்ச்சி கொண்ட மனிதவிரோத நடத்தையையிட்டு, தமிழ் மக்களாகிய நாம் தலைகுனிகின்ற அளவுக்கு அவமானத்துக்குரியது மட்டும் இன்றி வெட்ககேடானதுமாகும். இன்று கட்டமைத்துள்ள "வீரம்", மற்றும் "தியாகம்" என அனைத்தும் கறைபடிந்துபோன நிலையில் அவமானத்துக்குரியதாகும். தமிழ் மக்கள் சார்பாக மார்க்சியவாதிகளாகிய நாங்கள் இந்தக் கொடூரமான நிகழ்வையிட்டு, நிபந்தனையற்ற மன்னிப்பை கோருகின்றோம். தமிழ் மக்கள் இந்தக் கறையை துடைக்க முனையாத வரை, அக்கறை அவர்களின் முகத்திலும் கையிலும் அப்பிக்கிடக்கும் வரலாற்றுத் தொடர்ச்சியை இன்று நாம் மீளவும் சுட்டிக் காட்டுகின்றோம். இந்த வரலாற்று கறையை துடைக்க போராடும் வரலாற்று கடமையை செய்யத் தவறுகின்ற யாரும், மார்க்சியவாதிகளாக இருப்பதில்லை. முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அவமானகரமான நிகழ்வுக்கு தீர்வு இன்றி தொடரும் எமது தேசிய போராட்ட வரலாற்றில், இந்த மக்களுக்கான தீர்வை பாட்டாளி வர்க்கம் மட்டுமே தீர்த்துவைக்கும் அளவுக்கு முரணற்ற ஜனநாயகத்தை கையாள்பவர்கள். முஸ்லீம் மக்களின் பிரச்சனைகள் மற்றும் சொந்த மண்ணில் இருந்து துரத்திய கொடூரத்துக்கான அடிப்படைகளை கண்டறிவது மற்றும் தீர்வுகளை முன்வைப்பது வரை பாட்டாளி வர்க்கம் அல்லாத எந்தப் பிரிவுக்கும் அக்கறையிருப்பதில்லை. முஸ்லீம் மக்களின் துயரத்தையும் அந்த வரலாற்றையும் தமது பிழைப்புவாத அரசியலுக்கு பயன்படுத்துபவர்கள், அந்த மக்களுக்கான விடுதலைக்கான தீர்வை முன்வைப்பதில்லை. இந்த நிலையில் பிழைப்புவாதத்தை அம்பலம் செய்யவும், முஸ்லீம் மக்களின் பிரச்சனைகளையும் மற்றும் அதன் தீர்வையும் முன்வைப்பதும் பாட்டாளி வர்க்கத்தின் முரணற்ற கடமையாகும். இந்த வகையில் முஸ்லீம் மக்களை வெளியேற்றிய காரணம் என்ன என்பதை ஆராய்வதன் ஊடாக, தேசியத்துக்கு பதிலாக குறுந்தேசிய போராட்டம் தமிழ், முஸ்லீம், சிங்கள, மலையக மக்களுக்கு எதிராக எப்படி மாறியது என்பதை பார்ப்போம்.

கிழக்கில் முஸ்லீம் மக்கள் மேலான தொடர்ச்சியான இனப்படுகொலைத் தாக்குதல்களும், அதைத் தொடர்ந்து வடக்கில் இருந்து 75000 முஸ்லீம் மக்களை ஏன் புலிகள் வெளியேற்றினர். இதற்கு பலரும் தமது பிழைப்புவாத அரசியலில் தொடங்கி குறுந்தேசிய இனவாத கண்ணோட்டம் வரை, பல்வேறு விளக்கத்தை முன்வைக்கின்றனர். அதை பார்ப்போம்.

1.புலிகள் இந்துத்துவ கண்ணோட்டத்தை அடிப்படையாக கொண்டே, முஸ்லீம் மதத்தை எதிர்த்து இதை நடத்தினர்

2.புலிகள் வெள்ளாளர் உயர் சாதி கண்ணோட்டத்தை அடிப்படையாக கொண்ட இயக்கம். இதனால் முஸ்லீங்களை இழிவாக கருதி இதைச் செய்தனர்.

3.யாழ் என்ற உயர் தகமையை கட்டமைக்கும் பிரதேசவாத கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட புலிகளின் தலைமை, பிரதேசரீதியாகவே முஸ்லீம் மக்களை இழிவாக்கி வெளியேற்றினர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4.முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள் மேல் நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாக இதை செய்தனர்.
5.முஸ்லீம் மக்கள் போராட்டத்தை காட்டிக் கொடுத்தனர். இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டனர். அதைத் தடுக்கவே தாக்கியதுடன் வெளியேற்றப்பட்டனர்.
6.முஸ்லீம் மக்கள் "தொப்பிபிரட்டிகள்" அதனால் தாக்கியதுடன் வெளியேற்றப்பட்டனர்.
7.முஸ்லீம் மக்கள் வந்தேறு குடிகள். அவர்கள் தமிழ் தேசிய இனம் அல்ல. அதனால் தாக்குவதும் வெளியேற்றுவதும் அவசியமாகும்.
8.விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பி.பி.சி பேட்டியில் "தமிழ் -முஸ்லீம் கலவரம் பரவும் அபாயமிருந்தது." அதனால் வெளியேற்றினோம் என்கின்றார்.
9.முஸ்லீம் மக்கள் ஒரு சிறுபான்மை தேசிய இனம் என்ற அடிப்படையில், தமிழ் குறுந்தேசிய இனவாத அடிப்படையில் புலிகள் வெளியேற்றினர்.

முஸ்லீம் மக்கள் பற்றியும், அவர்களை தாக்கியது முதல் வெளியேற்றியதுக்கான காரணங்களையும் குறிப்பாக இப்படி தொகுக்க முடியும். இதில் ஒன்று முதல் மூன்றுவரையிலான காரணங்கள் பிழைப்புவாத அரசியலில் குளிர்காய விரும்புபவர்களின் கற்பனை புனைவுகளாக உள்ளது. நாலு முதல் எட்டு வரையிலான காரணத்தை அடிப்படையாக கொண்ட கண்ணோட்டங்கள், குறுந்தேசிய தமிழ் இனவாத அடக்குமுறையை நியாயப்படுத்தும் கருதுகோள்களாக உள்ளது. ஒன்பதாவது காரணமே பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பகுப்பாய்வாகும். முஸ்லீம் மக்களின் வெளியேற்றப்பட்ட நிகழ்வை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தும் இந்த வாதங்களை தனித் தனியாக ஆராய்வோம்.



## புலிகள் இந்துத்துவ இயக்கமா? சாதி இயக்கமா? பிரதேசவாத இயக்கமா?

முதலாவதாக முஸ்லீம் மக்களை வெளியேற்றிய நிகழ்விலும் சரி, அவர்கள் மேலான தொடர்ச்சியான படுகொலை தாக்குதலில், புலிகள் இந்து மதவாதத்தை அல்லது வெள்ளாள உயர் சாதியத்தை அல்லது யாழ் பிரதேசவாதத்தை அல்லது மூன்றையும் இதற்கு அடிப்படையாக கையாண்டார்களா? கையாண்டார்கள் எனின் இது எந்த வகையில் கையாளப்பட்டது. எப்படி கையாண்டார்கள்? கையாண்டார்கள் என்று கூறுபவர்கள் யாரும் இதை ஆதாரமாக முன்வைப்பதில்லை. பிழைப்புவாதம் இவற்றை கோசமாக்கி கோசம் போடும் போது, இதை வலிந்து காட்டுவதே பிழைப்புவாதத்தின் சிறப்பியல்பாகும். பிழைப்புவாதத்தின் பண்பாகின்றது.

புலிகள் என்ற அமைப்பு எதை அடிப்படையாக கொண்டு தனது குறுந் தமிழ் தேசியத்தை கட்டமைக்கின்றது. இந்த அடிப்படையான கேள்விக்கு பதிலளிக்காமல், யாரும் எதையும் ஆராய முடியாது. புலிகள் சாதியத்தை முன்வைக்கின்றார்களா? சாதியைச் சொல்லி இயக்கத்தை கட்டுகின்றார்களா? சாதியின் பெயரில் ஆள் திரட்டலில் ஈடுபடுகின்றார்களா? எனின், இல்லை என்பது தெளிவான பதிலாகும். சாதியத்தை தமது அமைப்பாக்கலில் முன்னிறுத்தி இயக்கத்தை கட்டவில்லை. அப்படி இருக்க, புலிகளை சாதிய அமைப்பு என்று கூறுவதில் எந்த அர்த்தமும் இருப்பதில்லை. அடுத்து இந்து மதத்தை அடைப்படையாக கொண்டு புலிகள் தம்மை கட்டமைக்கின்றார்களா? மற்றைய மதங்களை இழிவாக காட்டி தம்மை உருவாக்கின்றார்களா? புலிகள் இந்து இயக்கமா எனின், இல்லை என்பது தெளிவான பதிலாகும். இது போன்று யாழ் பிரதேசவாதத்தை அடிப்படையாக கொண்டு தமது இயக்கத்தை உருவாக்கின்றார்களா? மற்றைய பிரதேச மக்களை இழிவாக்கி பிரச்சாரம் செய்து ஆட்களை சேர்க்கின்றார்களா? எனின் இல்லை என்பது தெளிவான பதிலாகும். இப்படியான பிரச்சாரத்தை புலிகள் செய்யின், புலிகள் என்ற இயக்கம் குறுங்குழுவாகி அதன் அளவில் அது எப்போதே சிதைந்து போயிருக்கும். இப்படி இல்லாத ஒரு நிலையில் தான் புலிகளின் குறுந் தமிழ் தேசிய இயக்கம் எம்மண்ணில் நீடிக்கின்றது. உயர் சாதியம், யாழ் பிரதேச மேலாண்மை, சைவ அடிப்படைவாதம் என்பன நிலப்பிரபுத்துவ கண்ணோட்டமாகும். இந்த வர்க்கம் தேசியத்துக்கான ஆயுதப் போராட்டத்தில் இருக்கவோ, நீடிக்கவோ முடியாது. இந்த நிலப்பிரபுத்துவ வர்க்கம் தேசியத்தால் தனது நலன்களை இழக்குமே ஒழிய, புதிதாக எதையும் அடைவதில்லை. சாதியத்தை முன்வைத்தால் சாதிப் பிளவும், பிரதேசத்தை முன் வைத்தால் பிரதேச பிளவும், சைவத்தை முன் வைத்தால் மதப் பிளவும், புலிகளின் குறுந் தமிழ் தேசிய போராட்டத்தை சிதைந்தவிடும். போராட்டத்தில் விதிவிலக்கான உதிரிச் சம்பவங்கள், ஒரு இயக்கத்தை மதிப்பிடும் எடுகோளாக எப்போதும் இருப்பதில்லை. விதிவிலக்கான சம்பவங்களில் தண்டனை கொடுக்கப்பட்டது உண்டு. கொடுக்கப்படாத நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளது. சாதி குறைந்த பிரிவுகள் உயர் சாதிக்கு தண்டனை கொடுத்ததும் உண்டு. இதுபோல் மற்றவையும். இவை அனைத்தும் விதிவிலக்குகள்தான். அதாவது விதிவிலக்குகளுக்கு மேலான விதிவிலக்கு தான் இவை.

## நிலவுகின்ற சமூக ஆதிக்க அடிப்படையிலேயே புலிகள் தம்மை கட்டமைத்தனர்

புலிகள் என்ற இயக்கம் சாதி, மதம், பிரதேசவாதம் மீது என்ன நிலையைக் கையாண்டது. இங்கு யாழ் மையவாதம், உயர்சாதிய அதிகாரம், இந்துத்துவ மேலாண்மை மீது சரி ஆணாதிக்கம் மீதும் சரி ஒரு போராட்டத்தை நடத்தவில்லை. மாறாக அதை அப்படியே சேதமின்றி பாதுகாத்தது. இருக்கின்ற நிலப்பிரபுத்துவ சமூக கட்டமைப்பில் சாதியம், மதவாதம், பிரதேசவாதத்தை அப்படியே பாதுகாப்பதன் ஊடாகவே தன்னை அதனூடாகவே கட்டமைத்து. எதிர்ப்பு மின்றி ஆதரவுமின்றிய நிலையில் இருக்கின்ற ஆதிக்க கண்ணோட்டத்தை அப்படியே பாதுகாத்ததன் ஊடாக தன்னை உறுதி செய்து கொண்டது. இது மேல் இருந்து கீழாகவும், கீழ் இருந்து மேலாகவும் அத்துமீறுவதை அனுமதிக்கவில்லை. சமூக கட்டமைப்பில் சாதிய பிரதேச மதவாதக் கூறுகளின் சார்பாகவும் எதிராகவும் அத்துமீறுவதை புலிகள் அனுமதிக்கவில்லை. இந்த ஒரு நிலை தான் புலிகளின் குறுந்தேசியத்தை முண்டுகொடுக்கின்றது. சமூகத்தில் அத்துமீறுகின்ற போது, அதிகாரத்தில் உள்ள நபர்களின் விருப்பு வெறுப்புடன் பல தடவைகளில் கடும் தண்டனைக்கும், தண்டனையில் இருந்து தப்பிய நிகழ்வுகளும் நடந்துள்ளன. உதாரணமாக உயர்சாதி ஆதிக்க அடக்குமுறையை தாழ்ந்த சாதிக்கு எதிராக கையாண்ட போது, புலிகள் தாழ்ந்த சாதி நபரை படுக்க வைத்து உயர் சாதி ஆதிக்க வாதியின் நாக்கால் முதுகை நக்க வைத்து, உயர் சாதியத்தை அவமானப்படுத்திய நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளன. இதற்கு மாறாக தாழ் சாதி இளையன் உயர்சாதி பெண்ணை காதலித்து ஓடிய போது, பிரித்துவிட்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன. புலிகள் இருக்கின்ற ஆதிக்க சமூக அமைப்பின் அமைதி, தமது தேச விடுதலைப் போராட்டத்துக்கு அவசியமானது என்பதில், அதை அதன் எல்லைக்குள் பாதுகாத்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது போன்று சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தை தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானதாக பார்த்தனர். ஆணாதிக்கத்துக்கு எதிராக பெண்களை தமது இராணுவ ஆள் திரட்டலுக்கு ஒரு கோசமாக்கியதுக்கு அப்பால், சமூக தளத்தில் அதை அப்படியே பேணுவதில் தமது நிலையை உறுதியாகவே கொண்டிருந்தனர். பெண்களை இயக்கத்தில் இணைப்பதற்கு புறநிலை நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1985க்கு பின்னால் இயக்கங்களை படுகொலை செய்த நிகழ்வுகளைத் தொடர்ந்தும், மக்களுக்கான ஜனநாயக மறுப்பைத் தொடர்ந்தும் ஆட்சேர்ப்பு என்பது மந்தமாகியது. அத்துடன் இந்திய ஆக்கிரமிப்பு ஏற்பட்ட நிலையில் வயது வந்த ஆண்களின் இணைவு குறைந்த நிலையில், சமூகத்தில் பலவீனமான நிலையில் வீட்டில் சிறைப்பட்டிருந்த சமூக பொது அறிவில் பின் தங்கியிருந்த பெண்களை இணைப்பது இலகுவானதாகியது. பெண்கள் மீதான ஆணாதிக்க சமூகக் கட்டுப்பாட்டை மீறி விடுதலை பெறத் துடித்த பெண்களை இணைப்பதில், புலிகள் ஆணாதிக்கத்தை ஒரு கோசமாக்கி உத்தியாக்கினர். புலிகள் தமது குறுந்தேசிய இனவாத கண்ணோட்டத்தில் சமூக உள் முரண்பாடுகளை அப்படியே பேணுவதிலும், பாதுகாப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தனர். சமூக ஆதிக்க கண்ணோட்டமே புலிகளின் இயக்க கண்ணோட்டமாக இருந்தது. அத்துமீறுவதை அனுமதிக்காத ஆதிக்க பொது சமூக எல்லைக்குள் தன்னை கட்டமைத்துக் கொண்டது. சமூக ஆதிக்கத்தில் நிலவிய ஆணாதிக்க சுரண்டல் அமைப்பில் உயர் சாதிய அதிகாரம், யாழ் பிரதேச மேலாண்மை, இந்துத்துவம் போன்றவற்றை ஆதாரமாக கொண்டிருந்தனர். இதில் ஒன்றைக் கூட முன்னிறுத்தி அதன் அடிப்படையில் அதிகாரத்தை கட்டமைக்கவில்லை. இருக்கின்ற அமைப்பை அப்படியே பாதுகாத்ததன் ஊடாக, இந்த அமைப்பு இவற்றின் பிரதிநிதியாக இருக்கின்றனர். பொதுவான சமூக ஆதிக்க கண்ணோட்டத்தின் பூர்சுவா பிரதிநிதியாக புலிகள் இருக்கின்றார்களே ஒழிய, புலிகள் இதில் ஒன்றைக் கூட தனது பிரதான மையக் கோசமாக்கவில்லை.

இந்த நிலையில் முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதல், மற்றும் வெளியேற்றப்பட்டதில் சாதி, மதம், பிரதேசவாதம் எந்த இடத்தில் எப்படி புலிகளால் கையாளப்பட்டது என்பதை யாரும் முன்வைப்பதில்லை. கிழக்கில் மசூதி மீதான தாக்குதலின் போது, புலிகள் "ஓம், சூலம்" போன்ற அடையாளங்களை இட்டதாக செய்திகள் வெளியாகின. இவை கூட தாக்குதலை நடத்த திட்டமிட்டவர்கள் உடனடியாக உணர்வூட்டக் கூடிய மத அடிப்படைவாதத்தை எழுப்பியதால் அல்லது சிலரின் மத உணர்வு சார்ந்து தன்னிச்சையாக எழுதப்பட்டனவே. ஏன் இத்தாக்குதலின் பின்பு புலிகளின் முஸ்லீம் உறுப்பினர்கள் தாக்குதல் இடத்தை கண்காணிக்க சென்ற தகவலும் வெளியாகியுள்ளது. ஆகவே புலிகள் இந்து அடிப்படைவாத இயக்கமாக மாறிவிட்டதாகவோ அதை ஆதாரமாக கொள்வதாகவோ சொல்ல, ஒரு அடிப்படையான எடுகோள் அல்ல. இதை அவர்களின் நடவடிக்கைகள், அவர்களின் கருத்துகள், அவர்களில் காணப்படும் குணாம்சங்களில் கூட காட்டமுடியாது. இதற்கு பிழைப்புவாத கோசம் கூட எதையும் ஆதாரமாக முன்வைக்க முடியாது. வரலாற்று ரீதியாக தமிழ் தலைமைகள் மற்றும் புலிகள் அல்லாதோரின் கருத்துகளில் இதைக் காட்டுவதும், அதை புலிக்கு பொருத்த முனைவதும் அர்த்தமற்றதாகும். அதுபோல் பொதுவான சமூக ஆதிக்க கருத்தை அடிப்படையாக கொண்டு காட்டுவதும் தவறாகும். பிழைப்புவாத வரலாற்று அரசியல் தலைமைகள், பிழைப்புவாத அறிவுத்துறையின் விளக்கவுரைகளை புலிகளுக்கு பொருத்துவது, புலிகளின் பாத்திரத்தை மதிப்பிடத் தவறிய வங்குரோத்துத்தனமாகும். குறிப்பாக மசூதி போன்றவற்றின் மேலான தாக்குதல் மத அடிப்படையிலானது அல்ல. மசூதி முஸ்லீம்



மக்களை ஒருங்கமைத்த ஒருமித்த வகையில், இயக்க அடாவடித்தனங்களை எதிர்த்து போராடிய ஒரு களமாகவே இருந்தது. தலதாமாளிகை மேலான தாக்குதல் கூட மத அடிப்படையில் இருந்து அல்ல. சிங்கள பேரினவாதத்தை புத்தமதம் வெளிப்படுத்தி வந்த நிறுவனம் மீதானதாகவே தாக்குதல் அமைந்தது. இந்த வகையிலான தாக்குதல்கள் மக்களை போராட்டத்துக்கு சார்பாக அல்லாமல் எதிரியின் தரப்புக்கு அணிதிரட்டவே வழிவகுக்கின்றது என்பதை குறுந்தேசிய இனவாத அரசியல் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது.

## குறுந்தேசிய இனவாதம் எப்படி முஸ்லிம் மக்களுக்கு எதிராக மாறியது

இரண்டாவதாக முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதல் மற்றும் வெளியேற்றத்துக்கு கூறும் காரணங்கள் குறுந்தேசிய இனவாத கண்ணோட்டத்தில் இருந்து எழுவதாகும். ஆதிக்க இனங்கள் சிறுபான்மை இனங்கள் மேலான அதிகாரத்தையும், நலன்களையும் தக்கவைக்க கட்டமைக்கும் கருதுகோள்களை அடிப்படையாக கொண்டே இவை முன்வைக்கப்படுகின்றது. 1993 இல் புலிகளின் தலைவர் பிரபாகரன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் "முஸ்லீம்கள் தனியான கலாச்சாரத்தையும் தனித்துவத்தையும் கொண்டவர்கள். அவர்களின் தனித்துவமும் நில உரிமையும் பாதுகாக்கப்படும். தமிழ் மக்களுடன் ஒன்றாக வாழ்வதன் மூலம் அவர்களின் சமூக பொருளாதார வாழ்வு சிறப்பாக இருக்கும்." என்ற புலிகளின் கூற்று அவர்களையே அவர்களின் நடவடிக்கைகள் ஊசலாடவைக்கின்றது. இந்தப்பேட்டி இத்தாக்குதலின் பின்பாகவே வெளிவந்துள்ளது. புலிகளின் வெளியீடான "இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்" என்பது, ஜனவரி 1987 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு வெளியீடாகும். இது "தமிழீழ விடுதலைப் போரில் முதற் களப்பலியான இஸ்லாமியத் தமிழ் வீர மறவன் புலிகள் இயக்கத்தின் லெப்டினட் ஜீனைதீனுக்கு இந்த நூல் காணிக்கை"யாக வெளிவந்தது. இந்த நூல் முஸ்லீம் சமுகம் பற்றி பேசுகின்றது. புலிகளின் அரசியல் பிரிவின் முன்னுரையில் "மதம், சாதி என்ற எல்லைக் கோடுகளை அழித்து, ஓரினம் என்ற தேசிய எழுச்சியும், ஒரே நிலம் என்ற தாயகப் பற்றுணர்வும் இஸ்லாமியத் தமிழர்களை எமது புரட்சிப் போராட்டத்தில் அணிதிரட்டி வருகின்றது. இரத்தம் சிந்தும் எமது விடுதலைப் போராட்டம் இஸ்லாமியத் தமிழரின் விடிவுக்கு வழிகோலும் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு" அதன் தொடர்ச்சியில் "தமிழீழத் தனியரசே இஸ்லாமிய மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை வழங்கும்..." என்ற கூற்றும் முஸ்லீம் மக்கள் பற்றிய புலிகளின் குறுந்தேசியத் தன்மையை முரண்பட்டபடி வெளிப்படுத்துகின்றது. தமிழ் மக்கள் பற்றி பேசும் இவர்கள், முஸ்லீம் மக்கள் என்று தனித்துவமாக்கி பிரித்துக்காட்டும் போது, மதம் என்ற வேறுபாட்டில் நின்றே விளக்கிய போதும், அதில் இருந்து வேறு ஒன்று அதற்குள் உறுத்தி நிற்கின்றது. இங்கு தமிழ் மக்கள் என்பதற்கு பதில் இந்து, கிறிஸ்துவம் என்று சொல்லத் தவறுவது, முஸ்லீம் மக்களின் தனித்துவத்தை மதம் கடந்து ஒத்துக்கொள்ள மறுக்கின்றது. முஸ்லீம் மக்கள் மதச் சிறுபான்மையினர் அல்ல. இந்துக்கள், கிறிஸ்துவர்கள் என்ற வரிசையில் முஸ்லீம் மக்கள் மதமாக இல்லை. மாறாக வேறு எதோ ஒன்று இருப்பதால் தான், அதைத் தனித்து புலிகள் குறிப்பிட்டு காட்ட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். முஸ்லீம் மக்கள் என்று குறித்துக் காட்டும் தன்மை எதை குறிக்கின்றது.

இலங்கையில் சிங்கள, தமிழ், மலையக, முஸ்லீம் மக்கள் என்று குறிப்பிடும் போதே, இனத் தன்மை வாய்ந்த ஒன்று காணப்படுகின்றது. இந்தக் கூற்றில் மதத் தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பதில்லை. புத்தம், இந்து, முஸ்லீம், கிறிஸ்துவம் என்ற குறிப்பிடும் போது மட்டுமே மதம் சார்ந்து வெளிப்படுகின்றது. சிங்களம், தமிழ் என்று குறிப்பிடும் போது அது மொழி சார்ந்து பிரிகின்றது. இங்கு மலையகம், முஸ்லீம் என்று குறிப்பிடுவதில்லை. தேசிய விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே மொழி சார்ந்தது அல்ல. மாறாக பொருளாதாரம், பொது மொழி, கலாச்சாரம், நிலத் தொடர் என்ற எல்லைக்குள் தேசியம் வளர்ச்சி பெறுகின்றது. இது மதத்தை கடந்து நடக்கின்றது. தேசிய போராட்டம் குறுந்தேசிய போராட்டமாக மாறும் போது, அது மொழியாக தன்னை குறுக்கி கொண்டு, மொழி கடந்த முரண்பாடுகளை அடங்கி ஒடுங்கி நடக்கக் கோருகின்றது. அடங்க மறுத்தால், அடக்குகின்றது. முரண்பாடுகளை மதமாகவும் அல்லது ஏதோ ஒன்றின் ஊடாக காட்டி அடக்கி ஒடுக்குகின்றது.

## முஸ்லீம் மக்கள் சிறுபான்மை தமிழ்த் தேசிய இனமே

புலிகளின் தலைவர் பிரபாகரனின் முஸ்லீம் மக்கள் தனியான கலாச்சாரம், தனித்துவமான நிலத் தொடரை கொண்டவர்கள் என்ற கூற்று, அவர்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கக் கோருகின்றது. ஆனால் புலிகள் சொற்களுக்கு அப்பால் நடைமுறையில் இதை மறுக்கின்றனர். முஸ்லீம் மக்களின் பொருளாதார கூறு என்பது வளர்ச்சி பெறாத தன்மை தான், அவர்களை சிறுபான்மை தமிழ் தேசிய இனமாக்கின்றது. இங்கு அவர்களின் மொழி கூட தமிழில் ஒரு பகுதியாகவே உள்ளது. அதாவது தமிழ் என்பது, பல கிளை மொழியே பொதுவாக தமிழாக இருக்கின்றது. இது பிரதேசம், மதம், பண்பாடு, பொருளாதாரக் கூறு... என்று பல்வினை அம்சங்கள் தமிழ் மொழியை தனக்குள் பிரிக்கின்றது. தமிழ் இதுதான் என்று ஒன்றை சொல்லவோ, திணித்துவிடவோ முடியாது. யாழ்ப்பாணத்து தமிழை, கிழக்குக்கோ, முஸ்லீம் மக்களுக்கோ, மலையகத்துக்கோ, தமிழ் நாட்டுக்கோ திணிக்க முடியாது. ஆனால் தமிழ் என்ற பெயரில் வேறு மொழியை அப்படியே தமிழ் ஆக்குவது, தமிழ் அல்ல. அதாவது தமிழ் மொழி பேசும் மக்கள் தமது வாழ்வின் சூழல் சார்ந்து, பொருள் முதல்வாத கண்ணோட்டத்தில் பொருட்களின் உச்சரிப்பையும், அதன் கலாச்சார வேறுபாட்டையும் கொண்டு பிரியும் போது அதை தமிழாக பரஸ்பரம் அங்கீகரிக்க வேண்டும். யாழ்ப்பாணத்து தமிழ் மொழியின் அடிப்படையில் முஸ்லீம் மக்களின் தமிழை கிண்டல் செய்வது அல்லது அதை தூற்றுவது குறுந்தேசிய இனவாதமாகும். இது முஸ்லீம் மக்களை தமிழ் மொழியில் இருந்து தனிமைப்படுத்தி, அவர்களின் தனித்துவ இனத் தன்மையை மறுக்கின்றது. இந்த மறுப்பே அவர்கள் மேலான அடக்குமுறையாக பரிணமிக்கின்றது.

## முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களை தாக்கினார்களா?

நாம் தனித் தனியாக முஸ்லீம் மக்கள் மேலான ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் காரணங்களை ஆராய்வோம். முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள் மேல் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி என்பது, தமிழ் தரப்பின் முன்கூட்டிய ஆயுதம் எந்திய படுகொலைத் தாக்குதலை மூடிமறைப்பதாகும். அதாவது முஸ்லிம் மக்களில் இருந்து அன்னியமான கூலிப்படைகளின் தாக்குதல் கூட, இயக்கங்களின் வரைமுறையற்ற அப்பாவி முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதலின் விளைவாகும். அதாவது இந்தக் கூலிப்பட்டாளம் உருவாக இயக்கங்களின் குறித்த வன்முறையே காரணமாக இருந்தது என்பதை, இந்தக் குற்றச்சாட்டு மூடிமறைத்து அதை மேலும் ஊக்குவிக்கின்றது. இதே போன்ற குற்றச்சாட்டை சிங்கள மக்கள்



தமிழ் மக்களுக்கு கூறின், என்ன தர்க்க நியாயம் இருக்க முடியும். இதேபோல் தான் முஸ்லீம் மக்கள் நிலையும். பலமான இனங்கள் பலவீனமான இனங்கள் மேல் தாக்குதலை நடத்தும் போது, பலவீனமான இனம் தவிர்க்க முடியாமல் எதிர் தாக்குதலில் இறங்குகின்றது. சிங்கள இனவாத சக்திகள் தமிழ் மக்கள் மேலும், தமிழ் குறுந் தேசியவாதிகள் முஸ்லீம் மக்கள் மேலும் நடத்தும் தாக்குதலுக்கு எதிர் மறையில் பதிலடி கொடுக்கின்றது. இங்கு மக்களில் இருந்து அன்னியப்பட்ட குழுக்கள் இதை நேரடியாக கையாளும் போது, இனத்தையே எதிரியாக காட்டி அழிப்பது நியாயப்படுத்தப்படுகின்றது. இங்கு அப்பாவி மக்கள் மேல் இனவாத சக்திகள் நடத்தும் இரண்டு பக்க வடிவத்தையும், நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இனவாதத்தை கட்டமைக்கும் இனவாதிகளை நோக்கி மக்கள் எதிர் தாக்குதலை, இனம் கடந்து நடத்த வேண்டும். இதை இனவாதிகள் செய்யக் கூடாது. இனவாதி மற்றொரு இனவாதி மேல் நடத்தும் தாக்குதல், படிப்படியாக இன மக்கள் மேலானதாக மாறிவிடுகின்றது. தமிழ் இனவாதிகள் முஸ்லீம் மக்கள் மேலும், சிங்கள மக்கள் மேல் நடத்திய தாக்குதல், முஸ்லீம் இனவாதிகள் தமிழ் மக்கள் மேல் நடத்திய தாக்குதல், சிங்கள இனவாதிகள் தமிழ் முஸ்லீம், மலையாக மக்கள் மேல் நடத்திய தாக்குதல் அனைத்தும் தேசிய இனவாதத்தை அடிப்படையாக கொண்டது. எதிரியை விட போராடும் இயக்கங்கள் மக்களை இனத் தன்மையில் கொல்லும் போது, அப்போராட்ட தியாகமே இனவாதமாகி சீரழிகின்றது. ஆனால் போராளிகள் அல்லாத இராணுவம் இனப்படுகொலைகளை நடத்தும் போது, கூலித்தனத்தை வெட்ட வெளிச்சமாக்கி மேலும் இனவாதம் அம்பலமாகின்றது. தமிழ் குறுந்தேசிய இனவாத இயக்கங்கள் முஸ்லீம் மக்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதலின் விளைவால் தான், முஸ்லீம் இனவாத கூலிக்குழுக்கள் உருவாகியது மட்டுமின்றி எதிர் தாக்குதலை தமிழ் மக்கள் மேல் நடத்தும் நிலைக்கும் இட்டுச் சென்றனர். தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் மற்றைய இன மக்களின் ஐக்கியத்தை அங்கீகரித்து, அவர்களுடன் இணைந்து போராடத் தவறினர். அம் மக்கள் மேல் அடக்குமுறையை கையாளும் போது, பிரதான எதிரி தனக்கு சார்பாக தாக்குதலுக்கு உள்ளான இனங்களை மாற்றி, தனது கூலிப்பட்டாளத்தை அந்த இனங்களிலும் உருவாக்கின்றது. இது தமிழ் மக்களுக்கும் கூட பொருந்தும். இந்த முஸ்லீம், தமிழ் கூலிப்பட்டாளங்களுக்கும் மக்களுக்கும் எந்தவிதமான அரசியல் உறவும் இருப்பதில்லை. மாறாக அந்த மக்களுக்கு எதிராகவே செயற்படுகின்றது. மக்களில் இருந்து தனிமைப்பட்ட பயங்கரவாத கூலிக்குழுவாக இயங்கும் இந்தக் குழுக்கள், தனக்கு எதிரான இன மக்கள் மேல் படுகொலைத் தாக்குதலை நடத்துகின்றது. இதை இனம் கடந்து கண்டிக்க வேண்டும். மக்களுக்காக போராடும் இயக்கங்கள் இந்தக் கூலிக்குழுக்களை அம்பலம் செய்து, இது போன்ற நடவடிக்கையில் தானும் ஈடுபடாது போராடவேண்டும். அதை விட்டு அந்தக் கூலிக் குழு சார்ந்த இன மக்களை தாக்கி அழிப்பது, போராட்டத்தை குறுந் தேசிய இனவாதமாக்கி சீரழிந்து செல்வதைக் கடந்து, எந்த விளக்கமும் அதற்கு இருப்பதில்லை.

## முஸ்லீம் மக்கள் போராட்டத்தை காட்டி கொடுத்தனரா?

முஸ்லீம் மக்கள் போராட்டத்தை காட்டிக் கொடுத்தனர் என்பது அர்த்தமற்ற வாதமாகும். காட்டிக் கொடுத்தனர் என்று இயக்கங்களால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை, முஸ்லீம் மக்களின் விகிதாசாரத்துக்கு ஒப்பிடின் மிக அதிகமானது. காட்டிக் கொடுப்பு என்பது எப்படி, எந்தக் காரணங்களால் நிகழ்கின்றது என்பதை விடுத்து, ஒற்றைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பரிணாமத்தில் தண்டிக்கும் போது அப்பவிகள் கூட துரோகியாகின்றனர். போராட்டம் மக்களின் ஆதரவைப் பெற்று மக்கள் இயக்கமாக தலைமறைவாக இயங்கத் தவறி, மக்களிடம் இருந்து அன்னியப்பட்டு பகிரங்கமாக இயங்கிய குற்றம் யாருடையது. அது இயக்கத்தின் காட்டிக் கொடுப்பு அல்லவா. காட்டிக் கொடுக்கும் காரணத்தின் சமூக உறவாக்கம் ஆராயப்பட்டு தன்னை சுயவிமர்சனம் செய்யத் தவறி தண்டிப்பது, குற்றத்தை தனக்குள் மூடிமறைப்பதாகும். உண்மையில் காட்டிக் கொடுப்பவன் ஏன் செய்தான் என்ற காரணத்தை கண்டறிந்து தண்டிக்காதவரை, இயக்கத்தின் நோக்கமும் அதே காரணத்தால் கொச்சைப்படுத்தப்படுவது நிகழ்கின்றது. அதுவும் இந்தக் காட்டிக் கொடுப்பை இன்னொரு இனமான முஸ்லீம் மக்கள் மேலாக சுமத்தி கொச்சைப்படுத்துவது என்பது கேடுகெட்ட பச்சை இனவாதமாகும். அந்த இனங்களின் தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களின் ஜனநாயகத்தை செயல்வடிவமைக்க உதவாத வரை, காட்டிக் கொடுப்பு பற்றிக் கூறி துரோகியாக்க எந்த உரிமையும் எந்த இனத்துக்கும், குழுவுக்கும் கிடையாது.

## முஸ்லீம் மக்கள் "தொப்பி பிரட்டி"களா?

முஸ்லீம் மக்கள் "தொப்பி பிரட்டிகள்" என்று தமிழ் மக்களின் கொச்சையான இன அடையாள மொழி, தமிழ் மக்களின் தேசியத்துக்கு பச்சைத் துரோகம் துரோகமிழைத்த கூட்டணியால், தமது பச்சை இனவாத அரசியலுக்காக கட்டமைக்கப்பட்டவையே. "தொப்பி பிரட்டிகள்" என்று சொன்னவனே தமிழ் மக்களுக்கு துரோகியாகிய போதும், அந்த எடுகோள்கள் மட்டும் துரோகமாகாமல், அதே இனவாத அரசியலில் வன்முறை மொழியாகி நடவடிக்கையாகின்றது. தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகம் போன்று, தமிழ் தலைவர்கள் முஸ்லீம் மக்களுக்கு தொடர்ந்து துரோகமிழைத்தனர். உண்மையில் அண்ணர்களான தமிழ் பாராளுமன்ற அரசியல் வாதிகள் முஸ்லீம் மக்களுக்கு செய்த துரோகத்துக்கு, பரிகாரம் தேடுவதற்குப் பதில் துரோகத்தை நியாயப்படுத்தி மூடிமறைக்க, தம்பிகள் தொடர்ந்தும் "தொப்பி பிரட்டிகள்" என்று கேவலமாக தமது குறுந்தேசிய இனவாத அரசியலை கட்டமைத்தனர். தமிழ்த் தலைமைகள் முஸ்லீம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை கைவிட்டு, தானே தொப்பி பிரட்டியாக இருப்பதை மூடிமறைக்க, எதிர் தரப்புக்கு அவர்களின் தொப்பி மேல் அடையாளப்படுத்திக் கூறிய அரசியலே, எந்த வேறுபாடும் இன்றி இன்றுவரை அவர்கள் மேலான வன்முறையாக தொடருகின்றது.

## முஸ்லீம் மக்கள் வந்தேறு குடிகளா?

முஸ்லீம் மக்கள் வந்தேறு குடிகள் என்பதும், அவர்கள் தமிழ் தேசிய இனம் அல்ல என்பதும் அர்த்தமற்ற ஆதாரமற்ற இனவாதமாகும். இதைத் தான் பெருந்தேசிய இனவாதமும் தமிழ் இனத்துக்கு எந்த வேறுபாமின்றி கூறுகின்றது. இஸ்லாம் மதம் என்பது அரபு தேசத்தில் இருந்து இலங்கை வந்ததே ஒழிய, அங்கிருந்து அரபு மக்கள் வரவில்லை. அதாவது முஸ்லிம் மக்கள் அரபு வழிவந்தவர்கள் அல்ல. பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மக்கள், இஸ்லாம் மதக் தத்துவத்தை ஏற்றுக் கொண்டதற்கு அப்பால், அவர்கள் அங்கிருந்து வந்தவர்கள் அல்ல. சாதிய அடக்குமுறை உடன்கட்டை ஏற்றுதல் போன்ற காட்டுமிராண்டித் தனங்களைக் கொண்ட மதமாக இந்து மதம் தன்னை நியாயப்படுத்தி நீடிக்கும் போது, மற்றைய மதத் தத்துவங்களை மக்கள் ஏற்பது இயற்கையாக இருந்தது. ஏன் கிறிஸ்துவ மதம் கூட வெளியில் இருந்து காலனித்துவ வாதிகளால் காலனித்துவ நோக்கத்துக்காக கொண்டு வந்தவை தான். ஏன் இன்று எம்



மண்ணில் இருக்கின்ற இந்துமதம் கூட, எம்மண்ணுக்கு புதியவைதான். எமது பாரம்பரிய மதமாக இன்று இருக்கும் இந்துமதம் என்றும் இருக்கவில்லை. வட இந்தியாவில் இருந்து வந்த இன்றைய இந்து மதம், எம் மண்ணில் பாரம்பரிய வழிபாடுகளை அழித்து அதன் மேல் தன்னை நிறுவிக் கொண்டதே. ஏன் பிள்ளையார் வழிபாடு முதல் இன்று அனுமார் வழிபாடு வரை இந்திய பார்ப்பனியத்தின் அதிகாரத்தின் வரலாற்று செல்வாக்குடன், எம் மண்ணில் அண்மைக் காலத்தில் புகுந்தவையே. இதை விட முஸ்லீம் வழிபாடுகள் காலத்தாலும் அறிவாலும் முந்தியவை.

## வடக்கில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக தமிழ் இனக்கலவரம் ஏற்பட இருந்ததா?

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 1993 இல் பி.பி.சி க்கு வழங்கிய பேட்டியில் "யாழ்ப்பாணத்திலும் அப்போது தமிழ்-முஸ்லீம் கலவரம் பரவும் அபாயமிருந்தது. அதனால் தான் முஸ்லீம்களை தற்காலிகமாக யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லுமாறு கூறினோம். அதையும் அவர்களின் பாதுகாப்புக்காகவே செய்தோம்.'' என்கிறார். யாழ்க்குடாநாட்டையும் வன்னியின் பெரும் பகுதியையும் கிழக்கின் ஒரு பகுதியையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஒரு இயக்கத்தின் தலைவரின் பேட்டி, அந்த இயக்கத்தின் குறுந்தேசியத்தின் இனவாத இயல்பை தெளிவாகவே பட்டவர்த்தமாக்கியது. வடக்கில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான ஒரு இனக்கலவரம் (கவனிக்கவும் இது மதக்கலவரம் அல்ல, ஒரு இனக் கலவரம். இது முஸ்லீம் இனத்தை இனமாக பார்க்கின்றதே ஒழிய மதமாக அல்ல) நடக்க இருந்தது என்பதை, வடக்கில் வாழ்ந்த எந்த தமிழனாவது ஒப்புக் கொள்வானா! தமிழ் மக்கள் சொந்த ஆளுமையில் செயற்படும் ஆற்றல் இழந்து இயக்கங்களின் ஆயுத வன்முறைக்கு அடிமையாகியதன் பின்பு, சுயேட்சையான செயல் என்பது கற்பனைக்குரியதே. அதுவும் ஒரு இனக் கலவரம் நடத்துமளவுக்கு! என்ன ஆச்சரியமான விளக்கம்! இந்த இனக் கலவர புனைவுகளை அங்கு வாழ்ந்த சாதாரண மக்கள் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. அது சரி, ஒரு இனக்கலவரம் நடக்க இருந்தது எனின், இதை புலிகள் அரசியல் ரீதியாக எப்படி எதிர்த்துப் போராடினீர்கள். இதை தடுக்க என்ன செய்தீர்கள். முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள் தான் எனின், தமிழ் மக்களின் இன உணர்வுகளை அல்லது மத உணர்வுகளை எதிர்த்து போராடி, முஸ்லீம் மக்களை பாதுகாத்து சகோரதத்துவத்தை நிலை நாட்டியிருக்க வேண்டுமல்லவா! எங்கே! எப்படி! முஸ்லீம் சகோரதத்துவத்தை பாதுகாத்தீர்கள்! இனக் கலவரத்தை தடுக்க முஸ்லீம் மக்களை பாதுகாக்கவே வெளியேற்னீர்கள் எனின், அந்த மக்களின் உழைப்பை ஏன் ஈவிரக்கமின்றி கொள்ளையடித்தீர்கள்? இது பகற்கொள்ளை இல்லை எனின், இது என்ன? அன்றாடம் சுரண்டலுக்குள்ளாகிய வண்ணம் கூலிக்குச் சென்று உழைத்த உழைப்பை அபகரிப்பதை என்ன என்பது? மீண்டும் சுரண்டியதற்கு அப்பால் வேறு எதுவுமில்லை. அவர்களின் உழைப்பிலான சொத்தை பாதுகாப்பாக வைத்துவிட்டுச் செல்லச் சொன்னீர்களா? யாரிடம் பாதுகாக்க? நல்ல வேடிக்கையான வாதங்கள் தான். எங்கே அந்த மக்களின் சொத்துகள். அந்த மக்களின் உழைப்பை எல்லாம் ஏலம் விட்டு அரையும்குறையுமாக விற்ற பின்பு, அவர்களை பாதுகாக்கவே நாம் வெளியேற்றினோம் என்று சொல்வது, புலிகளின் அரசியல் நேர்மையை, புலிகளின் வாக்கை எல்லாத் தளத்திலும் நிபந்தனையின்றி தகர்த்துவிடுகின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முஸ்லீம் மக்கள் ஒரு சிறுபான்மை தேசிய இனமாகும்

முஸ்லிம் மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதை பலர் மறுக்கின்றனர். மாறாக அவர்களை மதச் சிறுபான்மையினர் அல்லது தேசிய இனம் என்று வரையறுப்பது என்ற, இரு கடைக்கோடியில் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றது. புலிகள் அவர்களை ஒத்தவர்களும் "இஸ்லாமியத் தமிழர்களும் தமிழ்த் தேசிய இனத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமே. ஏனைய தமிழர்கள் இந்து மார்க்கம், கிறிஸ்தவ மார்க்கம் என்று ஏற்றுக் கொண்டதைப் போலவே இஸ்லாமியத் தமிழர்களும் இஸ்லாம் மதத்தைத் தமது மார்க்கமாகக் கொண்டிருக்கிறார்களே தவிர , அவர்கள் இனத்தால் தமிழர்களே. தமிழ் மொழி மீது அவர்கள் ஏனைய தமிழர்களை விட அதிகப் பற்றுக் கொண்டவர்கள் என்று கூடச் சொல்லலாம்." என்று புலிகளின் வெளியீடு கூறுகின்றது. இங்கு முஸ்லீம் என்ற சொல்லுக்கு பதில் இஸ்லாமிய மக்கள் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. புலிகளின் தலைவர் பிரபாகரன் "யாழ்ப்பாணத்திலும் அப்போது தமிழ்-முஸ்லீம் கலவரம் பரவும் அபாயமிருந்தது." என்று சொல்லும் போது, அதை மதக் கலவரம் என்று சொல்லவில்லை. ஏன் அதே பேட்டியில் "முஸ்லீம்கள் தனியான கலாச்சாரத்தையும் தனித்துவத்தையும் கொண்டவர்கள். அவர்களின் தனித்துவமும் நில உரிமையும் பாதுகாக்கப்படும். தமிழ் மக்களுடன் ஒன்றாக வாழ்வதன் மூலம் அவர்களின் சமூக பொருளாதார வாழ்வு சிறப்பாக இருக்கும்." இங்கும் முஸ்லிம் மக்களை மதச் சிறுபான்மையினர் என்று கூறவில்லை. ஆனால் அவர்களின் நூல் அதற்கு எதிராக கருத்து கூறுகின்றது. உண்மையில் முஸ்லிம் மக்களை தனியான ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதை ஏற்க மறுக்கின்றனர். அதை மதச் சிறுபான்மை இனமாக காட்டவே முரண்பட்டபடி முயற்சி எடுக்கின்றனர்.

முஸ்லீம் மக்கள் ஒரு சிறுபான்மை இனம் என்ற அடிப்படையிலேயே, தமிழ் குறுந்தேசிய இனவாத அரசியலே அவர்களை படுகொலை செய்தது முதல் வெளியேற்றியது வரை நிகழ்ந்தது. இங்கு இவர்கள் மதச் சிறுபான்மையினர் அல்ல. ஒரு இனச் சிறுபான்மையினரே. இங்கும் முஸ்லீம் என்ற பதம் முஸ்லீம் மதத்தை குறித்து சொல்லப்படுவதில்லை. எல்லா குறுந்தேசிய இனவாதிகளும் முஸ்லீம் மதம் என்ற அடிப்படையில் தான் அடையாளப்படுத்தி, வன்முறையை கட்டமைக்கின்றனர். முஸ்லீம் என்ற பதம் எப்படி வரலாற்று ரீதியாக கட்டமைக்கப்பட்டது என்ற ஆய்வு மிகமுக்கியத்துவம் வாய்ந்து. பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் மத்தியில் இஸ்லாம் ஒரு மதத் தத்துவவியலாக வந்த போது, அதை உள்வாங்கிக் கொள்வது இயற்கையாக இருந்தது. இந்து மதத்தில் காணப்பட்ட பல பிற்போக்கான மனிதவிரோத நடத்தைகள் மற்றும் சாதிய பிளவுளை எதிர் கொண்ட மக்கள், இஸ்லாம் மதத்தை சென்றடைவது இயற்கையானதாகவும் இயல்பானதாகவும் இருந்தது. அத்துடன் சமூக பொருளாதார கூறுகளும், இதை உந்திச் செல்வதில் குறித்த பங்கை வகித்துள்ளது. இந்த நிலையில் இஸ்லாம், மதம் என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் காலூன்றத் தொடங்கியது. இந்த வரலாற்றுத் போக்கை இந்து மதம், தனது கடந்தகால நிலப்பிரபுத்துவ ஆதிக்க வடிவிலேயே ஏற்றுக் கொண்டதில்லை. இது அந்த மக்களை மத அடிப்படை எல்லைக்குள், தன்னில் இருந்து அன்னியப்படுத்தியது. அதாவது நிலப்பிரபுத்துவ சமூகம் என்ற அடிப்படையில் இருந்த மத உறவாக்கம், மத அடிப்படையில் பிளவுபடத் தொடங்கியது. இந்தப் பிளவில் ஆதிக்க மதமான இந்து மதமே (சைவம்) முன்னின்று ஒடுக்கியது மட்டுமின்றி, எதிர்த்தரப்பை முஸ்லீம் என்ற மதத்தின் ஊடாக



அடையாளம் காட்டி ஒடுக்கியது. மக்களை பிளந்து காட்டியது. இவை அனைத்தும் மதம் சார்ந்த நிலப்பிரபுத்துவ சமூக வடிவத்தில் வளர்ச்சி பெற்றது. இந்த சமூகப் புறக்கணிப்பு மத அடிப்படை எல்லைக்குள், தனக்குள்ளான குறுகிய எல்லைக்குள் தன்னை நிலைநாட்ட இட்டுச் சென்றது. இந்த வளர்ச்சி கடந்த சில நூறு வருட வளர்ச்சியில் படிப்படியாக ஏற்பட்டவையே. சைவத்தில் இருந்து அன்னியப்படுத்தப்பட்ட முஸ்லீம் மக்கள், முஸ்லீம் மத பண்பாடு கலாச்சாரம் சார்ந்து தனது நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைக்கு இசைவாக, தனக்குள் தன்னை மாற்றிக் கொள்ளத் தொடங்கியது. மறு தளத்தில் சைவ மதத்தின் பரந்த தன்மையற்ற வன்முறை கொண்ட சமூக கண்ணோட்டமே, முஸ்லீம் மதவாத கட்டமைப்பை உருவாக்க துணையாக நின்றது. சைவ மதம் சார்ந்த நிலப்பிரபுத்துவ கண்ணோட்டம் அடிப்படையில் தன்னை தனக்குள் வளர்த்துக் கொள்ளும் ஒரு கட்டமைப்பு ஏற்பட்டது. முஸ்லீம் மக்கள் மேலான சைவ ஆதிக்கம் மற்றும் புறக்கணிப்புடன் கூடிய ஒடுக்குமுறை, முஸ்லீம் மக்களை சிங்கள சமூகத்துடன் இணைந்து செல்லும் தகவமையை ஏற்படுத்தியது.

தமிழ், முஸ்லீம் மக்களிடையே இருந்த மத ஆதிக்க நிலப்பிரபுத்துவ பண்பாடு, தனிமைப்படுத்திய உள்ச் சுற்று நிலப்பிரபுத்துவ பொருளாதார உறவுகள், தனித்துவமிக்க தனித்தனி மொழியை உருவாக்கியது. தமிழ் என்பது மதம் சார்ந்த பிற்போக்கு கூறுடன் தன்னை மாற்றிக் கொண்டது. தமிழ் மொழி என்பது அதன் இயற்கையான பொருள் முதல்வாத கூறில் இருந்து விலகி, கருத்துமுதல்வாத கண்ணோட்டத்தை உள்வாங்கிய மொழியாக மாறியது. ஆதிக்கத்தில் இருந்த நிலப்பிரபுத்துவ மதவாத கண்ணோட்டம் கருத்துமுதல்வாதம் சார்ந்து, பொருளின் பொருள் முதல்வாத கண்ணோட்டத்தை சிதைத்ததன் மூலம், மொழியில் பிளவு ஏற்பட்டு வேறுபட்ட தன்மையில் வளர்ச்சி பெற்றது. இது இந்து மற்றும் முஸ்லீம் மக்களின் இரு மொழிக் கூறிலும் உள்ளடங்கியதாக மாறியது. இது மொழியின் பிளவை ஏற்படுத்தியது. இன்று தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் பேசுகின்ற தமிழ் மொழி மத அடிப்படைவாதம் சார்ந்து, நிலப்பிரபுத்துவ பண்பாட்டு கலாச்சார கூறுகளுடன் வேறுபட்டே தனித்தனியாக நிற்கின்றது.

இங்கு முஸ்லீம் சிறுபான்மை மதம் மீதான இந்து மதத்தின் புறக்கணிப்புடன் கூடிய அதிகாரம் நீண்ட வரலாற்று தொடர்ச்சியில், தனித் தனியான பண்பாட்டு கலாச்சார படிமங்களை ஏற்படுத்தியது. இந்த இரு சமூகங்களும் தனக்குள் தானே தன்னை மீள ஒருங்கமைத்துக் கொள்ளும் போக்கு, இதன் சிறப்பான வடிவமாகியது. இங்கு யாழ் ஆதிக்க பிரதேசவாதம் மற்றைய பிரதேசங்களுடன் தன்னை அன்னியப்படுத்திய போதும், ஆதிக்கத்தில் இருந்த இந்துமதம் சார்ந்த நிலப்பிரபுத்துவ ஆதிக்க பண்பாடு பிளவை மட்டுப்படுத்தியது. இந்த மதவாத நிலப்பிரபுத்துவ பண்பாடு கடந்த தேசிய எழுச்சிகள் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் வித்திட்ட போது, இந்த தேசிய கண்ணோட்டம் மதவாத நிலப்பிரபுத்துவ கூறுகளில் இருந்து தன்னை முரணற்ற வகையில் வெளிப்படுத்திவிடவில்லை. மாறாக பழைய கூற்றின் நீட்சியாக வெளிப்பட்ட போது, தேசிய விழிப்புணர்ச்சிகள் மதக் கண்ணோட்டத்தில் இருந்தே அணுகும் போக்கு தலைகாட்டியது. மறுபக்கத்தில் அந்த தேசிய உணர்வுகள் மொழி சார்ந்த இன உணர்வை தனக்குள் கொண்டிருந்த தன்மை என்பது, மதம் கடந்து தன்னை வெளிப்படுத்தியது. இங்கு மொழி சார்ந்த தேசிய இன உணர்வுக்கு பின்னால், மத உணர்வு நீட்சியாக நீடிப்பது தவிர்க்கமுடியவில்லை. இரட்டைத் தன்மை கொண்ட தேசியம் இனம் சார்ந்தவையாக இருந்தபோதும், அதன் உட்சாரம் மதம் சார்ந்து வெளிப்படத் தொடங்கியது. மதம் சார்ந்த கண்ணோட்டத்தை அடைப்படையாக கொண்ட இனக் கண்ணோட்டம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனத்தை மதமாக அடையாளம் காட்டி விடுவது பொது குணாம்சமாகியது. இங்கு விழிப்புணர்ச்சி என்பது இனம் சார்ந்து இருப்பது, தமிழ் முஸ்லீம் என்ற இரு இனத்துக்கும் பொருந்தும். இது சென்ற நூற்றாண்டின் இறுதி வரையும், இன்றும் அதுவே பொதுசாராம்சமாகும் இதனால் தான் இந்த தேசிய விடுதலைப் போராட்டம் குறுந்தேசிய இனவாதமாக சிதைந்து சீரழிகின்றது. இதை நாம் மேலும் ஆதாரமாக பார்க்க, முஸ்லீம் மக்கள் மேல் நடத்திய தாக்குதல்களையும், முக்கிய மாற்றங்களையும் ஆராய்வோம்.

முஸ்லீம் மக்கள் மேலான அனைத்து தாக்குதலையும் இதில் பதிவு செய்யவில்லை. அதே நேரம் இக்காலத்தில் தனிநபர்களாக கொல்லப்பட்டோரையும் இது உள்ளடக்கவில்லை. இந்தப் படுகொலைகளை பல்வேறு இயக்கங்கள் செய்த போதும், இறுதியாக புலிகள் அதை ஒரு நடவடிக்கையாகவே செய்தனர். இக்காலத்தில் இதற்கு பதிலடியாக அரசின் கூலிப்பட்டாளமாக இயங்கிய ஜிகாத் மற்றும் ஊர்காவல் படையினர் தமிழ் மக்கள் மேல் நடத்திய படு கொலைகளை இதற்குள் உள்ளடக்கவில்லை. அன்றைய நாளாந்த பத்திரிகையில் வெளியாகிய செய்தியை அடிப்படையாக கொண்டும், கிடைத்த பத்திரிகையை மட்டும் ஆதாரமாக கொண்டு இவை தொகுக்கப்பட்டது. இதில் காயம் அடைந்தவர்கள் மற்றும் காயம் அடைந்த பின் மருத்துவமனையில் இறந்தவர்களையும் உள்ளடக்கவில்லை. அவை பற்றி எந்த ஆய்வும் இது வரை யாரும் செய்யவில்லை என்றே நம்புகின்றேன்.

29.11.1986 இல் முஸ்லீம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக பிரகடனம் செய்யப்பட்டது. முஸ்லீம் மக்களுக்காக கிழக்கில் உருவான முதல் தனிக் கட்சி என்று தகவல்கள் கூறுகின்றன. 1984 இல் இக் கட்சியை புனர்நிர்மானம் செய்த போது, அதில் எட்டுப் பேர் தான் அதில் எஞ்சியிருந்தனர். 1987 ல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட முடிவு எடுத்த நிலையில், புலிகள் மரண தண்டனையை பிரகடனம் செய்திருந்தனர். வடக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் காங்கிரஸ் 17 ஆசனங்களை பெற்று பிரதான எதிர்க்கட்சியாகியது. அதே நேரம் தென் இலங்கையில் 12 ஆசனங்களைப் பெற்றது.
1986 ஆரம்பத்தில் ஈரோஸ் இயக்கம் மன்னார் பள்ளிவாசலில் வைத்து முஸ்லீம் மக்கள் சிலரை கொன்றனர்.
1987 இல் மார்கழி 30ம் திகதி காத்தான்குடியில் 28 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்.
6.1.88 வீரகேசரி செய்திப்படி காத்தான்குடி எல்லையில் 60 குடியிருப்புகள் எரிக்கப்பட்டன.
19.3.88 வீரகேசரி செய்திப்படி நிந்தவூரில் 7 பேரை கடத்திச் சென்றனர்.
1988 பங்குனியில் கல்முனையில் 25 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.
1988 கார்த்திகை மாதம் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எவ் இணைந்து உருவாக்கிய தமிழ் தேசிய இராணுவம் சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருவைச் சேர்ந்த முஸ்லீம் பொலிசார் 42 பேரை மட்டும் தேர்ந்தெடுத்து படுகொலை செய்தனர்.
2.2.89 வீரகேசரி செய்திப்படி கல்முனையில் கைது செய்தவர்களை விடுவிக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டம் மீது வீசிய கிரனைட் குண்டு வெடித்ததில், இருவர் கொல்லப்பட ஏழு பேர் காயமடைந்தனர்.
7.3.89 வீரகேசரி செய்திப்படி கல்முனையைச் சேர்ந்த 600 தமிழர்கள், தமிழ் முஸ்லீம் மக்களுக்கு தனித்தனியான உதவி அரசாங்கப்பிரிவுகள் வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
11.4.89 வீரகேசரி செய்திப்படி கிண்ணியாவில் 5 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்.
4.12.89 வீரகேசரி செய்திப்படி காத்தான்குடியில் மூன்று முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.
10.12.89 வீரகேசரி செய்திப்படி 12 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.



89 பாராளுமன்ற தேர்தலில் முஸ்லீம் மக்களின் வாக்கில் 75 சதவீதத்தை முஸ்லீம் காங்கிரஸ் பெற்றிருந்தது. அதேநேரம் 4 தொகுதிகளை வென்றது
1.2.90 வீரகேசரி செய்திப்படி புலிகள் காத்தான்குடியில் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனம் செய்து, வீடுவீடாக சோதனை செய்தனர். 30 பேரை கைது செய்தனர். அத்துடன் சம்மாந்துறையில் மாகாணசபை உறுப்பினர் மன்சூர் சுட்டுக் கொல்லப்பட்டார். கல்முனையைச் சுற்றி வளைத்து 40 பேரை கைது செய்து கொண்டு சென்றனர். இதை அடுத்து காத்தான்குடியிலும், கல்முனையிலும் கடைகள் மூடப்பட்டன. முஸ்லீம் காங்கிரஸ் அரசியல் குழு உறுப்பினர் மருதூர் கனி கடத்தப்பட்டார். இவர்களை விடுவிக்கக் கோரி கல்முனையில் புலிகளின் அலுவலகத்தின் முன் போராட்டம் நடத்திய மக்கள் மேல், புலிகள் சுட்டதில் 17 பேர் காயம் அடைந்தனர். அவர்களை வைத்தியசாலை கொண்டு சென்ற நிலையில், அங்கு வந்த புலிகள் வைத்தியசாலையை சுற்றி வளைத்தபின், ஐவரை சுட்டுக் கொன்றதுடன், வைத்தியர் உட்பட 10 பேரை கைது செய்து கொண்டு சென்றனர்.
7.2.90 வீரகேசரி செய்திப்படி அக்கரைப்பற்றில் கனிபா என்பவரிடம் பணம் தரும்படி கோரி மறுத்த நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
10.7.90 வீரகேசரி செய்திப்படி ஏறாவூரில் இரண்டு முஸ்லீம் மக்களை கடத்தி சென்றனர்.
1990 யூன் 11 க்கு பின்பாக வடக்கு கிழக்கில் யுத்தம் தொடங்கிய முதல் இரண்டு மாதத்தில் 300 பேர் அளவில் இயக்கங்களால் கொல்லப்பட்டனர். அத்துடன் கிழக்கில் மட்டும் 2500 முஸ்லீம்கள் தேசிய போராட்டம் தொடங்கிய பின் இராணுவம் மற்றும் இயக்கத்தால் கொல்லப்பட்டனர்.
1990.7.16 வீரகேசரி செய்திப்படி மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் 68 முஸ்லிம் பயணிகளை கடத்திக் கொன்றனர். மொத்தமாக அங்கு 150 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் ஏறாவூரில் 62 பேரை கடத்தினர்.
31.7.1990 வீரகேசரி செய்திப்படி அனுராதபுர மாவட்ட உடுப்பாவலா சின்னப்பிக்குளத்தில் 10 முஸ்லீம்கள் கொல்லப்பட்ட பின் கிணற்றில் போடப்பட்டனர்
1.8.90 வீரகேசரி செய்திப்படி அக்கரைப்பற்று வயல்களில் வேலை செய்து விட்டு வந்த 17 முஸ்லீம்கள் கடத்தப்பட்ட பின் கொல்லப்பட்டனர்.
1.8.90 வீரகேசரி செய்திப்படி கந்தாளாயில் 5 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.
3.8.1990 வீரகேசரி செய்திப்படி மஜீத்புரம் பகுதி வயலில் இருந்து திரும்பிய 7 முஸ்லீம்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். அத்துடன் சம்மாந்துறையில் முஸ்லீம் தந்தையும் மகனும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
13.8.90 வீரகேசரி செய்திப்படி செங்கலடியில் 5 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்.
13.8.90 ஐலண்ட் பத்திரிகை செய்திப்படி கடந்த 24 மணித்தியாலத்தில் 200 தமிழர் மற்றும் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
13.8.90 ஐலண்ட் பத்திரிகை செய்திப்படி ஏறாவூரில் 4 முஸ்லீம் கிராமங்கள் மேல் நடத்திய தாக்குதலில், 119 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர். 60 பேர் காயம் அடைந்தனர்.
13.8.90 ஐலண்ட் செய்திப்படி சம்மாந்துறையில் 6 முஸ்லீம் விவசாயிகள் கொல்லப்பட்டனர்.
15.8.90 வீரகேசரி செய்திப்படி அக்கரைப்பற்றில் 8 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்.
1990 ஆகஸ்ட் 3ம் திகதி காத்தான்குடி பள்ளிவாசலில் 122 பேர் கொல்லப்பட்டனர்.
7.8.90 வீரகேசரி செய்திப்படி அம்பாறையில் 18 முஸ்லீம் விவசாயிகள் கொல்லப்பட்டனர். அக்கரைப்பற்றில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், 10ம் திகதிக்கு முன்னர் அம்பறையை விட்டு முஸ்லீம்கள் வெளியேறிவிட வேண்டும் என்ற துண்டுப் பிரசுரமும் போடப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11.8.90 ஏறவூரில் 164 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
1.9.1990 காத்தான்குடியில் மூன்று கிராமத்தில் 5 பள்ளிவாசல் மற்றும் 55 வீடுகள் எரிக்கப்பட்டன.
16.9.90 புனாவை என்ற கிராமத்தில் 7 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.
25.9.90 வீரகேசரி செய்திப்படி கல்முனை கடலில் வைத்து மூன்று முஸ்லீம் மீனவர்கள் கொல்லப்பட்டனர்.
3.10.90 வீரகேசரி செய்திப்படி மருதமுனையில் இரண்டு முஸ்லீங்கள் கடத்தப்பட்டனர்.
1990 ஐப்பசி மாதம் 30 ம் திகதி யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவில் இருந்து 60000 முதல் 75000 ற்கு மேற்பட்டோரின் அனைத்து சொத்தையும் கைப்பற்றிய பின்பு புலிகளால் துரத்தப்பட்டனர்.
15.11.90 வீரகேசரி செய்திப்படி மன்னாரில் இருந்து புலிகளால் துரத்தப்பட்ட முஸ்லீம்கள் தமது இருப்பிடத்துக்கு திரும்பிய போது, புலிகள் சுட்டதில் ஒருவர் மரணம். ஆறு பேர் காயம் அடைந்தனர்.
1992.4.26 இல் அழிஞ்சிப் பொத்தனையிலும், ஆவணியில் பள்ளித்திடலிலுமாக மொத்தம் 300 க்கு மேற்பட்டோரை வெட்டியும் சுட்டும் கொன்றனர்.

இந்த தொடர்ச்சியான தாக்குதல்கள் 1986-1987 க்கு பின்பாக அதிகரிக்கின்றது. இந்திய இராணுவத்தின் வருகையின் பின்பு இது அகலமாகி அதிகரித்து. இந்தியா இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்பு உச்சத்தை அடைகின்றது. 1985 க்கு பின்பாக விடுதலை இயக்கங்கள் பண்பு ரீதியாக மற்றாத்தை சந்தித்ததை தொடர்ந்தே, இந்தப் புதிய நெருக்கடி பரிணமிக்கின்றது. தமிழ்த் தேசிய விடுதலைக்காக ஆயுதம் ஏந்த ஆயிரமாயிரமாக போராட வெளிக்கிட்டவர்கள், அன்னிய அரசுகளின் கைக்கூலியாகி ஆயுதப் பயிற்சி பெற்ற பின்பு, அதன் சிதைவு அங்கிருந்து வழிகாட்டப்படுகின்றது. ஆரம்பம் முதலே அரசியல் ரீதியாக தமிழ் தேசியத்தின் உட்கூறுகளை புரிந்து கொள்ள முடியாத தரகு கட்சியான கூட்டணியின் அரசியல் வழியில் வாலாக உருவான இயக்கங்கள், மத நிலப்பிரபுத்துவ கூறுகளை தனது அரசியல் அடிப்படையாக கொண்டே தன்னை வெளிப்படுத்தியது. இங்கு தேசியம் முதன்மை முரண்பாடாக நீடித்தமையால் இனமுரண்பாடு அடிப்படையாக, அதுவே அரசியலின் மையமான கோசமாகியது. இது தனக்கிடையிலான முரண்பாட்டை முதன்மை முரண்பாடாக கொண்ட அதே நேரம், மற்றையை இனங்களை அழிப்பதில் தன்னை அரசியல் மயமாக்கியது.

இந்த வரலாற்று வளர்ச்சியில் தான் முஸ்லீம் மக்கள் மேல் தாக்குதலை இயக்கங்கள் தொடங்கி வைத்தன. முஸ்லீம் மக்களை தமிழ் மக்கள் என்ற ஒரே அடையாளத்தின் கீழ் ஒன்றிணைத்த இயக்கங்கள், அவர்களையும் தனது உறுப்பினர் ஆக்கினர். புலிகளின் மாவீரர் பட்டியலில் நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லீம் உறுப்பினர்கள் தம் உயிரை இழந்தே உருவாகியுள்ளது. இது போல் எல்லா இயக்கத்துக்கும் பொருந்தும். முஸ்லீம் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய அடிப்படை உள்ளடக்கத்தில், முஸ்லீம் மக்களை ஒன்றிணைத்த இயக்கங்கள் அவர்களின் ஆதரவை பெறுவதிலும் கணிசமான வெற்றி பெற்றனர். தமிழ்ப் பகுதி போல் ஆதரவு கொடுப்பதும், இணைவதும் ஒரு நிகழ்வாகவே இருந்தது. இயக்கங்கள் தமது குறுகிய குறுந்தேசிய இனவாத நலன்களில் வளர்ச்சி பெற்ற தன்மையானது, தமிழ் தேசியத்துக்கு முரண்பாடானதாக வளர்ச்சி பெற்றது.

இந்த குறுந்தேசிய இன நலன்கள் படிப்படியாக சொந்த மக்களை விட்டே விலகிச்



சென்றது. தமிழ் மக்களையே ஒடுக்குமளவுக்கு அது பரிணமித்தது. புலிகள் உள்ளிட்ட ஆயுதம் எந்திய அனைத்து இயக்கமும், இதில் தீவிரமான மக்கள் விரோதிகளாக தம்மை வெளிப்படுத்தினர். மக்களின் தேசிய பொருளாதார நலன்களை வென்று எடுப்பதற்கு பதில், தனது குறுகிய தேசிய நலனை முதன்மைப் படுத்தி அதில் தனது நலனை அடைவதன் ஊடாக சீரழிந்தது. மக்கள் மேலான வரிகளாகவும், கட்டாய பணச் சேகரிப்பாகவும் மாறியபோது, இதை அடைவதில் இயக்க மோதல் அவதாரமாகியது. இதில் அன்னிய கைக்கூலித் தனத்தை விசுவாசித்து மெய்ப்பித்து காட்ட எடுத்த முயற்சி மேலும் மக்களுக்கு எதிரானதாக மாறியது.

தமிழ் மக்களுக்கு மேலானதாக பொதுவான தாக்குதலாக மாறியது என்பது, பின்பு குறிப்பாக முஸ்லீம் மக்கள் மேலானதாகவும் பரிணமித்தது. முஸ்லீம் மக்கள் மேலான வரி, பணச் சேகரிப்புகள் முரண்பாடாக வளர்ச்சி பெற்ற போது, முஸ்லீம் மக்கள் மத்தியில் இருந்து அமைப்பாக்கப்பட்ட வடிவம் மூலம் இதை நியாயமாகவே எதிர்க்கத் தொடங்கியது. இந்த எதிர்ப்புகளை ஆயுத முனையில் அடக்க தமிழ் இயக்கங்கள் பின்நிற்கவில்லை. அமைப்பாக்கல் (கட்சி வடிவிலும் பள்ளிவாசல் வடிவிலும் எழுந்தன) இருந்தமையால் தமிழ் பகுதி போல், இந்த எதிர்ப்பை முறியடித்துவிடமுடியவில்லை. அதேநேரம் முஸ்லீம் தேசிய விழிப்புணர்ச்சி வெளிப்பட்டது. முஸ்லீம் காங்கிரஸ் இந்த வன்முறையின் பரிணாமத்துடன் புத்துயிர்ப்படைந்தது. முஸ்லீம் மக்களின் தேசிய விழிப்புணர்வு மதத்துக்கு வெளியில், முஸ்லீம் மக்களை அணிதிரட்டுவதில் படிப்படியாக வெற்றி கண்டது. தமிழ் தேசியம் எப்படி சிங்கள இனவாத தாக்குதலால் விழிப்புற்றதோ, அதே போன்று முஸ்லீம் சமூகமும் இயக்க தாக்குதலால் விழிப்புற்றது. தமிழ் தேசியம் எப்படி தமது நிலப்பிரபுத்துவ அடிப்படையை உள்ளடங்கியதாக உருவானதோ, அதே போன்று முஸ்லீம் காங்கிரசும் உருவானது. இந்த தேசியக் கூறு தேசியத்துக்கு பதிலாக குறுந்தேசியத்தை இனவாதத்தை பரஸ்பரம் அடிப்படையாக கொண்டு உருவானது மட்டும் இன்றி, அதுவே அதன் சீரழிவுக்கான அடிப்படையாகவும் இருந்தது.

முஸ்லீம் மக்கள் மேலான தொடர்ச்சியான தாக்குதல், முஸ்லீம் மக்களை தமிழ் தேசியத்தில் இருந்து தள்ளிச் சென்றது. தனியான தேசியத்தை கோருவது அதன் புதிய வடிவமாகியது. தமிழ் மற்றும் முஸ்லீம் தேசியம் மதத்தை தனது முதன்மைக் கூறாக கொண்டு, தமது அணியைக்கட்டிவிடவில்லை. மாறாக தேசிய இனக் கூறை அடிப்படையாக கொண்டே, தம்மை கட்டமைத்தன. புலிகளைப் போல் தாக்குதலும் சரி எதிர் தாக்குதலும் சரி இந்த தேசிய இனக்கூறில் நின்றே, இவை நடத்தப்பட்டன. மதக் கூறு இங்கு ஒரு அரசியல் வடிவமாக முஸ்லீம் மக்கள் மத்தியில் இருக்கவில்லை. அதாவது தமிழ் மக்கள் போல் முஸ்லீம் மக்களும் இனக் கூறுக்கே முதன்மை அழுத்தம் கொடுத்தனர். பள்ளிவாசல் மேலான தாக்குதல்களின் போதும் கூட, இது வெளிப்பட்டுவிடவில்லை. தமிழ் தேசிய இயக்கங்கள் குறுந்தேசிய இயக்கங்களாக சீராழிந்து பரிணமித்த வரலாற்றில், முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதல் ஒரு அரசியல் செயற்பாடாக, ஒரு செயல் வடிவமாக மாறியது. இதில் இந்தியாவின் குறிப்பான பங்களிப்பும் உண்டு. அநுராதபுரத்தில் 1985 இல் சிங்கள மக்கள் மேலான புலிகளின் தாக்குதலை, இந்தியா கூறியே புலிகள் செய்ததாக பாலசிங்கம் கூறியது இங்கு கருத்தில் எடுப்பது அவசியமாகும். முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதலாக வளர்ச்சி பெற்று இனக் கலவரமாக, இன அழிப்பாக மாறிய படுகொலை வரலாற்றில், இந்திய ஆக்கிரமிப்பு நலன்களும் இணைந்த வகையிலேயே திணிக்கப்படுகின்றது. இந்திய ஆக்கிரப்பின் போது, தமிழ் மக்களை ஏமாற்றி உருவான சமாதான நாடக மேடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கிய புதிய அதிகார அலகுகளை நோக்கி இப்படுகொலை ஊக்குவிக்கப்பட்டது. இந்தியாவின் இந்துத்துவ கண்ணோட்டம் இதன் நெம்புகோலானாது. தொடர்ச்சியான தமிழ் இயக்கங்களின் முஸ்லீம் விரோத கண்ணோட்டம், முஸ்லீம் தேசிய உணர்வுகளை தட்டியெழுப்பிய நிலையில், மாகாண சபைக்கான தேர்தலில் முஸ்லீம் கங்கிரசை எதிர்கட்சியாகவும் புதிய தேசியக் கட்சியாகவும் பரிணமிக்க வைத்தது. இது இயக்கங்களின் அதிகாரத்தை முஸ்லீம் சமூகங்கள் மத்தியில் கேள்விக்குள்ளாக்கியதுடன், வரி மற்றும் பண சேகரிப்பை தடுத்தது. இந்த புதிய சூழ்நிலைக்கான காரணகாரியத்தை இயக்கங்கள் ஆய்வு செய்து, தேசிய போராட்டத்தை சரியாக முன்னெடுப்பதற்கு பதில், பழைய குறுந்தேசிய இனவாதத் தாக்குதலை அதிகரித்தனர். முஸ்லீம் காங்கிரஸ் மாகாணசபை மூலம் முஸ்லீம் மக்கள் மேலான அதிகாரத்தை வெற்றி கொண்ட காலம் தான், அந்த மக்கள் மேலான தாக்குதலின் உச்ச ஆண்டுகளாகும். இந்தியாவின் தயவில் ஆட்சி பீடம் எறிய கைக்கூலி பொம்மை அரசுகள், ஈவிரக்கமற்ற முஸ்லீம் படுகொலையை நடத்தத் தொடங்கினர். இதனால் ஏற்பட்ட எதிர் தாக்குதல்களுக்கு பதில் கொடுக்கும் வண்ணம் புலிகளும், இந்த கூலிக்குழுக்களின் வழியில் முஸ்லீம் மக்களை ஒடுக்குவதில் சமாந்தரமாகவே செயற்பட்டனர். ஒரு இனத்துக்கு எதிரான தாக்குதலில் புலியும் அதன் எதிர் அணியான கைக்கூலி அமைப்புகளும் ஒன்றுபட்டு கைகோத்து நின்றனர். இங்கு இந்தியாவின் சதி வலைகளை அம்பலம் செய்து முஸ்லிம் மக்களை அணிதிரட்ட வேண்டிய பாரிய பொறுப்பை, புலிகள் எதிர்நிலையில் கையாண்டனர்.

இந்திய ஆக்கிரமிப்பாளனை இலங்கை அரசு கட்டாயப்படுத்தி வெளியேற்றிய போது, புலிகள் இழந்து போன அதிகாரத்தை கைப்பற்ற தமிழ் கைக் கூலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதலை சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து நடத்தினர். கட்டாய இராணுவத்தில் இணைக்கப்பட்ட பல அப்பாவி இளைஞர்கள் உட்பட, பலர் அக்கால செய்திப் பத்திரிகைகளிலே குறிப்பிடுமளவுக்கு ஒவ்வொரு நாளும் பல நூறு பேர் வீதிகளில் கொல்லப்பட்டனர். அதேநேரம் புலிகள் முஸ்லீம் பகுதியில் இழந்த அதிகாரத்தை கைப்பற்ற முஸ்லீம் மக்கள் மேல் தொடர்ந்து தாக்குதலை நடத்தினர். பார்க்கவும் மேல் உள்ள தாக்குதல் தரவுகளை. புகழ் பெற்ற பள்ளிவாசல் கொலைகள் உட்பட சில நூறு பேரை கொன்றதன் மூலம், இனப் பகைமை கூர்மையாக வளர்ச்சி பெற்றது. தமிழருக்கே அவமானமான நினைவுச் சின்னமாகியது. முஸ்லீம் மக்களை இனியும் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வர முடியாது என்பதை, புலிகளின் குறுந்தேசிய இன அழிப்பு தொடர்ச்சியாக நிறுவிய நிலையில் தான், பழிவாங்கலாக வடக்கில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை துரத்திவிடும் நிகழ்வு நிகழ்கின்றது. வடக்கில் இருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றிய நிகழ்வை, கிழக்கில் இருந்து வந்த புலிகளின் தலைமையே செய்தது. அக்காலத்தில் இதை எதிர்த்த தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் வடக்கில் இருந்த புலிகளிடம் கேட்டபோது, கிழக்கில் இருந்து வந்தவர்களே செய்தனர் என்று கூறுமளவுக்கு, அக்காலகட்ட செய்திகள் செய்திப் பத்திரிகைகளில் பதிவாகியுள்ளது.

வடக்கில் இருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்ட நிகழ்வு, கிழக்கில் அதிகாரத்தை கைப்பற்ற ஏற்பட்ட தோல்வியின் பிரதிபலிப்பே. பிரபாகரன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் இது தெளிவாக வெளிப்படுகின்றது. "சிங்கள இனவாதிகளும், சுயநலன் மிக்க முஸ்லீம்

**பிழைப்புவாதம் எப்போதும் உள்ளடக்கத்தையும், சமூக விடுதலையையும் மறுக்கின்றது.**

1990 ஐப்பசி மாதம் 30 ம் திகதி வடக்கில் இருந்து 48 மணி நேரத்தில் துரத்தப்பட்ட முஸ்லீம் மக்களின் அவலம், 10 வருடம் கடந்த நிலையிலும் தொடர்கதையாக உள்ளது. முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரத்தை தமிழ் மக்கள் சார்ந்து பலதரப்பட்டவர்கள் எதிர்த்த போதும், பிரமுகரான பிழைப்புவாதியான ஜெயபாலனே முஸ்லீம் மக்களின் மீட்சியாளராக பவனிவந்தார். இன்று ஜெயபாலன் புலிகளின் பினாமியாகிப் போன பிழைப்புவாத நிலையில், முஸ்லீம் பிரச்சனை ஒரு பிரச்சனையாக அவர் முன் இருப்பதில்லை. இது போன்று சிவத்தம்பி முஸ்லீம் மக்களின் பிரச்சனையை புலிகள் தீர்த்துவிட்டனர் போன்ற எழுத்துகள் மூலம், தனது எழுத்துக் கூலித்தனத்தை வெளிப்படுத்தி வருகின்றார். இந்த நிலையில் முஸ்லீம் மக்கள் பற்றி பலதரப்பட்ட பிழைப்புவாதிகள், தமது பிழைப்புவாத அரசியலுக்கு இதை ஒரு ஊடகமாக முன்னெடுப்பது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட துயரத்தை, அந்த சமூகம் சார்ந்தும் தமிழ் சமூகம் சார்ந்தும் வெளிவரும் இலக்கியங்களை அடிப்படையாக கொண்டு, இந்த பிழைப்புவாதம் அரங்கேறுகின்றது.

சாதாரணமாக சமூகத்தில் ஒரு பிரச்சனை ஏற்படும் போது ஒவ்வொரு மனிதனும் அதற்கு ஒரு தீர்வை எடுக்கின்றான். முஸ்லீம் மக்கள் சூறையாடப்பட்டு வெளியேற்றப்பட்ட நிலையை ஒட்டி, இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் சார்பாகவோ எதிராகவோ ஒரு முடிவை எடுத்தனர். இந்த நிலையில் முஸ்லீம் மக்கள் பற்றிய பிரச்சனை சரி, அல்லது இலங்கை சமூகம் பற்றிய அனைத்து பிரச்சனையிலும் முடிவை தெரிவிக்கவோ, முடிவை சொல்ல முடியாத இலக்கிய பிதாக்கள், முஸ்லீம் மக்கள் பற்றி நீலிக் கண்ணீர் வடிப்பது தான் பிழைப்புவாதத்தின் உச்சமாகும். சாதியைச் சொல்லி நடந்த பிழைப்புவாதம், தமிழ் நாட்டில் அன்னியப்பட அதன் முடிவுடன் முஸ்லீம் மக்கள் பற்றி புலம்பவது புதிதாக தொடங்கியுள்ளது.

முஸ்லீம் மக்களின் எதிர்காலம் என்ன? இலங்கையில் அவர்களின் அரசியல் நிலை எதிர்காலத்தில் எப்படி இருக்க முடியும்? அவர்களின் போராட்டம் எப்படிப்பட்டதாக இருக்க முடியும்? முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட துயரங்களுக்கு காரணம் என்ன? மற்றைய சமூகங்களுடன் உறவு எப்படி இருக்க முடியும்? முஸ்லீம் மக்களுக்கிடையில் காணப்படும் மதப்பிற்போக்கு கூறுகளை எப்படி எதிர்த்து போராடுவது? என்ற பலதரப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்காமல், முஸ்லீம் மக்கள் பற்றி கரிசனை என்பது போலித்தனமானதாகும். முதுகெலும்பற்ற இலக்கிய பதிவுகள், ஒரு சமுதாயத்தின் யதார்த்தத்தை மட்டும் காரணத்தை தெரிந்து கொள்ள முடியாத உள்ளடக்கத்தில் அப்படி மீள ஒப்புவிப்பதுதான். இந்த காலத்துக்குரிய வன்முறை சூழ்நிலையால் மட்டும் அவை ஒரு சமூகப் பாத்திரத்தை வகிக்கின்றன. ஆனால் அதன் உள்ளடக்கம் பிற்போக்கு கூறுகளையும் உள்ளடக்கியே வெளிவருகின்றது. இது அந்த முஸ்லீம் மக்களுக்கு தீர்வைத் தருவதில்லை. மாறாக முஸ்லீம் மக்கள் பற்றிய தெளிவான அரசியல் முடிவு தான், அவர்களை நடைமுறைக்கு இட்டுச் சென்று துயரங்களுக்கு முடிவை தருகின்றது. இதை மறுகின்ற பிழைப்புவாத ஒப்பாரிகள், தமது சமூகச் சிதைவை பிழைப்புவாதத்துக்காக மூடிமறைத்து குளிர்காய, ஒரு சமூகத்தையே பயன்படுத்துகின்றது. இது அந்த மக்களுக்கு இழைத்த கொடூரத்தை போன்ற இன்னுமொரு வக்கிரமான கொடூரமாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல்வாதிகளுமே தமிழ் மக்களக்கிடையே வேறுபாட்டைப் பெரிதாக்கிப் பகையை உருவாக்கினார்கள்." என்ற கூற்றில் சுயநலமில்லாத முஸ்லீம் தலைமை என்பது என்ன? கிழக்கில் வரி மற்றும் பண சேகரிப்பை நடத்தவும் அதிகாரத்தை நிறுவவும் கிழக்கு முஸ்லீம்கள் சம்மதிப்பார்களாயின், வடக்கு முஸ்லீம்கள் மீது தமது சொந்த நிலத்துக்கு திரும்ப புலிகள் நிபந்தனையின்றியே சம்மதிப்பார்கள். புலிகள் முஸ்லீம் மக்கள் மேல் நடத்திய தாக்குதல்கள், மற்றும் வெளியேற்றம் என்பது, கிழக்கில் முஸ்லீம் மக்கள் மேலான அதிகாரத்தை இழந்ததனால் ஏற்பட்ட குறுந்தேசிய இனவாத வெளிப்பாடாகும்.

## முஸ்லீம் மக்களும் தமிழ் மக்களும் ஒரே தேசியத்தை முன்னெடுக்க முடியாதா?

முடியும். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் அதன் முரணற்ற உள்ளடக்கத்தில் முன்னெடுக்கப்படும் போது சாத்தியமானது. ஒரு தேசம் என்பதும் தேசியம் என்பதும் என்ன? அதன் அரசியல் உள்ளடக்கம் என்ன? வரலாற்று ரீதியாக தேசம் என்பது தேசிய உற்பத்தியை கட்டமைப்பதே. நிலப்பிரபுத்துவ மதவாத கூறுகளை எதிர்த்து ஒரு மொழி பேசும் மக்கள் ஒரு குறித்த நிலத் தொடர் மேல், தனது பண்பாட்டு கலாச்சார வேர்கள் மேல் கட்டப்படுவதே தேசமாகும் இந்த தேசத்துக்கான போராட்டமே தேசிய விழிப்புணாச்சியாகும். இந்த வகையில் தமிழ், முஸ்லீம் மக்கள் நிலப்பிரபுத்துவ மதவாத (இந்து, இஸ்லாம், கிறிஸ்துவ...) கூறுகளை எதிர்த்து அதன் பண்பாட்டு கலாச்சார கூறுகளை தகர்க்கின்ற போராட்டத்தில், தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் பிளவு அகன்றுவிடுவது இயற்கையாகும். இங்கு மொழி மற்றும் பண்பாட்டு கலாச்சார கூறுகள் மேல் கட்டமைக்கப்பட்டுள்ள நிலப்பிரபுத்துவ மதவாத கருத்து முதல்வாத கூறுகளை எதிர்த்து போராடும் போது, இயல்பாகவும் இயற்கையாகவும் தமிழ் முஸ்லீம் மக்களிடையே உள்ள பிளவு அகல்வது இயற்கையாகும். ஒரே மொழி பேசுகின்ற ஒரே பண்பாட்டு கலாச்சார கூறுகளை கொண்ட ஒரு நிலத் தொடர் மீதான ஒரே தேசிய இனமாக மாறிவிடுவது அதன் தன்மையாகும். இந்த தேசியம் முற்போக்கான பொருள் முதல்வாத அடிப்படையில் தனது கடந்தகால அடிமைத் தனங்களை களைய முயல்வதன் மூலம், இந்த இணைப்பு பலமாக வளர்ச்சி பெறும். தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களிடையில் காணப்படும் பண்பாட்டு கலாச்சார கூறுகளின் மிகச் சிறந்த கூறுகளை பரஸ்பரம் உள்வாங்குவதன் மூலம், தமக்கிடையில் நிலவும் பிற்போக்கு கூறுகளை களைந்த ஒரு புதிய தேசிய இனமாக பரிணமிக்க முடியும். இல்லாதவரை மதவாத நிலப்பிரபுத்துவ கூறுகளுடன் எழும் பிற்போக்கு குறுந்தேசிய இனவாத கூறுகள், பிளவை மேலும் மேலும் ஆளமாக பிளந்து செல்வதற்கு துணை போகும். ஐக்கிய கூறுகளை எதிர் நிலையில் கையாளும் பிளவும் இணைவும், நிகழ்ச்சி நிரலின் உயிர் உள்ள அம்சங்களாக எதிரும் புதிருமாக, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் புதைந்தே கிடக்கின்றது. இந்த வகையில் சிறுபான்மை முஸ்லீம் தேசிய இனம் மீதான தமிழ் குறுந்தேசிய இனவாத வன்முறைத் தாக்குதலுக்காக, தமிழ் தேசியம் தலைகுனிந்து நிற்கின்றது. தமிழ் தேசியம் முன் கையெடுத்து கடந்தகால தவறுகளை நிவர்த்தி செய்ய போராடாதவரை, முஸ்லீம் மக்கள் தமிழ் தேசியத்தில் இருந்து விலகிச் செல்வது வரலாற்று நிகழ்வாகின்றது. தமிழ் மக்களின் வரலாற்று துரோகமாகி, வரலாற்று நிகழ்ச்சியாகிவிடும். இதை யாரும் தவிர்க்க முடியாது.



அடுத்து முஸ்லீம் மக்கள் ஒரு தேசிய இனமா அல்லது சிறுபான்மை தேசிய இனமா என்ற அடிப்படைக் கேள்வி இங்கு எழுகின்றது. இலங்கையின் முஸ்லீம் மக்களின் பிரச்சனை இரண்டு வகையில் தெளிவாக வேறுபட்டுள்ளது. இலங்கையில் பல்வேறு பகுதியில் வாழும் முஸ்லீம் மக்கள் மதச்சிறுபான்மையினராக உள்ளனர். ஆனால் அவர்கள் செறிந்து வாழும் ஒரு நிலத் தொடரைக் கொண்டு உள்ள பகுதிகளில் சிறுபான்மை தேசிய இனத்தவரவர். முஸ்லீம் என்ற அடையாளக் குறிப்பு பெரும்பான்மை பிரிவால் பெயரளவில் அடையாளப்படுத்தப்பட்டதே ஒழிய, அது இனமல்ல என மறுக்க எடுக்கும் ஒரு எடுகோள் அல்ல. மலையக மக்கள் என அவர்களை மலையில் வாழ்வதால் அடையாளப்படுத்தியது போன்று, முஸ்லீம் மக்கள் என மதத்தால் அடையாளப்படுத்தப்பட்ட இனப்பிரிவுகளே. இவர்கள் வளரும் தேசிய சிறுபான்மை இனமாக நாம் கண்டு கொள்ள வேண்டும். இங்கு சிறுபான்மை என்பது இரண்டு அர்த்தத்தைக் கொண்டது. அதாவது இலங்கையில் பெரும்பான்மை சமூகத்தில் சிறுபான்மை என்ற அர்த்தத்திலும், தமிழ் இனம் என்ற அடிப்படையில் அந்த இனத்தினுள்ளும் அவர்கள் சிறுபான்மையினமாக இருக்கின்றனர்.

அதை விடுத்து மதச்சிறுபான்மை என்றோ, மதத்துக்கு வக்காலத்து வாங்குவது என மறுதலிக்கும் எக்கோட்பாடும், இன ஆதிக்கவாதிகளின் கூற்றை கேள்விக்கு உள்ளாக்காத வரையறையே. ஏன் நாம் முஸ்லீம் மக்களை ஒரு தேசிய இனமாக அல்லாது சிறுபான்மை தேசிய இனமாக கருதுகின்றோம். இங்கு ஒரு தேசம் என்பது மதவாத நிலப்பிரபுத்துவ கூறுகளை கொண்டு வரையறுப்பதில்லை. இன்று அப்படி காட்டுவது கட்டமைப்பது அதற்காக போராடுவது என்பது ஒரு போக்காக உள்ளது. இதனால் தான் தமிழ் தேசிய போராட்டம் சீரழிகின்றது. உண்மையில் இதை அடிப்படையாக கொண்டே முஸ்லீம் மக்களை தேசிய இனமாக வரையறுப்பதும் இன்று நிகழ்கின்றது. இதுவே இந்த வரையறையும் வரையறுப்புமே தேசியத்தை பிற்போக்காக மாற்றிவிடுவதுடன், முற்போக்கை அழித்துவிடுகின்றது. தேசம் என்பது தேசியத்தின் உட் கூறுகளை சரியாக விளக்குகின்றது. இந்த தேசம் என்பது தனது சொந்த பொருளாதார கட்டமைப்பை வரையறை செய்கின்றது. அதனடிப்படையிலான பண்பாட்டு கலாச்சார கூறுகளை ஒரு மொழி பேசுகின்ற ஒரு நிலத்தொடர் மீது நிறுவுகின்றது. இதுவே தேசம். இதற்கான போராட்டமே தேசிய போராட்டமாக உள்ளது. இதை முன்னெடுக்க தவறுகின்ற தேசிய போராட்டம் தேசியமாக இருப்பதில்லை. தேசியத்தை உச்சரித்தாலும் அவை பிற்போக்கான தேசிய மறுப்பை, தேசிய அழிப்பை முன்வைக்கின்றது. இது தேசத்துக்காக போராடும் குழுக்களுக்கு அடிப்படையான நியதியாக உள்ளது.

இதே போன்றே தேசமாக தனியான அரசை அமைக்க முடியாதா குறித்த இனமக்களை தேசமாகவும், அவர்களின் போராட்டத்தை தேசிய போராட்டமாகவும் வருணிப்பதும் பிற்போக்கானவையாகும். ஒரு தேசம் அமையவேண்டுமாயின் நிச்சயமாக ஒரு பொருளாதார கட்டமைப்பும், அது சார்ந்த பண்பாட்டு கலாச்சார கூறுகளும் அதை நிறுவ ஒரு நிலத் தொடர் மீதான ஒரு பொதுமொழி இல்லாத தேசியம், என்பதும் தேசம் என்பதும் கற்பனையானது. இங்கு இதை ஸ்ராலின் வரையறை என்று காட்டுவதும், அதை சோவியத்துக்கு மட்டும் பொருத்திக் காட்டுவதும் அபத்தமானவை. ஸ்ராலின் வரையறை செய்த தேசிய அடிப்படை கூறுகள், லெனின் மற்றும் மார்க்சால் முன் கூட்டியே தமது தேசிய இனங்கள் தொடர்பான ஆய்வுகளில் எடுத்துக் காட்டியே உள்ளனர். இதை "தேசியம் எப்பொழுதும், எங்கும் முதலாளித்துவ கோரிக்கையே ஒழிய, பாட்டாளி வாக்க கோரிக்கையல்ல" என்ற எனது நூலில் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியுள்ளேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த வரையறை சோவியத்துக்கு மட்டும் பொருத்தமானது என்பது, தேசிய சுயநிர்ணய உரிமை சோவியத்துக்கு மட்டும் பொருத்தமானது என்று யே.வி.பி கூறுவதுக்கு நிகரானது. 1990 களில் யே.வி.பி தலைவர் சோமபாலாவை பாரிசில் நான் சந்தித்து கதைத்த போது (தற்போதும் பரிசிலேயே உள்ளார்.), இந்த மனங்கெட்ட அரசியல் விபச்சாரத்தை சொன்னார். இதையே இன்று ஸ்ராலினின் தேசிய வரையறைக்கும் சிலர் செய்கின்றனர். பாதை ஒன்று, சொல்லுகின்ற விதம் மட்டுமே இவர்களுக்கிடையில் வேறாகின்றது.

ஒரு தேசம் மற்றும் தேசிய போராட்டம் என்பது அதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதவரை, அவை பிற்போக்கவும் திசை மாறிச் செல்வதும் நிகழ்கின்றது. சமுதாயத்தில் எதுவும் தனக்கான வரையறையைக் கொண்டே இயங்குகின்றது. அதில் இருந்தே தன்னை மாற்றி அமைக்கின்றது. இல்லாத எடுகோள்கள் கருத்து முதல்வாதமாகும். பொருளை மறுத்த எடுகோள்களை கருத்து முதல்வாதமாக்கி, மதவாத நிலப்பிரபுத்துவ எல்லைக்குள் சீராழிக்கின்றது. இது தமிழ் தேசிய போராட்டத்துக்கே பொதுவாக உள்ள போது, முஸ்லீம் மக்களுக்கு பொருத்திப் பார்க்க மறுப்பது, அதன் மேல் குளிர்காய்வதாகும். முஸ்லீம் மக்கள் தமக்கான பொருளாதாரத்தை கட்டமைக்கும் வளர்ச்சியை எட்டாத வரை, தேசிய கூறுகள் பின்தங்கியே காணப்படுகின்றன. சொந்த சுய தேசிய பொருளாதாரத்தை கட்டமைக்கும் போராட்டமே, வளரும் தேசிய இனத்தை, தேசமாக்கும்.

இன்றைய உலகமயமாதல் நிகழ்ச்சிப் போக்கில் தேசிய இனங்கள் அழிக்கப்படுகின்றன. இது தமிழ், சிங்கள, மலையக, முஸ்லீம் மக்கள் என்று யாரையும் உலகில் விட்டுச் செல்லவில்லை. இந்த நிலையில் தேசிய இனங்கள் தமது சொந்த தேசிய சுய பொருளாதாரத்தை மையமாக வைத்து தேசிய போராட்டத்தை முன்னெடுக்காத வரை, தேசியம் என்பது நிலப்பிரபுத்துவ மதவாத அடிப்படையில் தேசியத்தை ஏகாதிபத்தியத்திடம் சரணடையவைக்கும். இந்தத் தேசியம் தனது நடவடிக்கையில் பிற்போக்கை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொள்கின்றது. மற்றைய இனங்களை எதிரியாக காட்டி அழிப்பது அதன் பொது குணாம்சமாக, உலகளவில் இக்கால கட்டம் முழுக்க நீடிப்பது விதிவிலக்கின்றியுள்ளது. இதுவே இந்த தேசியத்தின் குறிப்பான குணமாகும்.

முஸ்லீம் மக்களின் விடுதலை மற்றும் அவர்களின் தீர்வு என்பது இனம் கடந்த நிலப்பிரபுத்துவ மதவாத கூறுகளை எதிர்த்த போராட்டத்தில் சார்ந்துள்ளது. தேசிய பொருளாதாரத்தை கட்டமைக்கும் போராட்டத்தில் இதற்குத் தடையாக இருக்கும் உலகமயமாதல் ஏகாதிபத்தியத்தை எதிர்த்ததாக அமையும். இதன் பாதையில் அனைத்து தேசிய முற்போக்கு கூறுகளுடன் இணைந்து, பிற்போக்கு தேசியக் கூறுகளை அகற்றுவதாக இருக்கும். இல்லாத வரை முஸ்லீம் மக்களின தற்காலிகமான இடைத் தீர்வு என்பது புலிகளுக்கு வரி மற்றும் பண சேகரிப்புக்கு பணிந்து போகும் நடமுறையுடன் சாத்தியமானது. இல்லாத ஒரு நிலையில் ஏதோ ஒரு விதத்தில் ஏகாதிபத்தியம் புலிகளை அழிப்பதன் ஊடாக அல்லது அரசியல் ரீதியாக போராட்டத்தை கைவிடவைப்பதன் மூலம், தீர்வற்ற அல்லது அற்ப சலுகைக்கு உட்பட்ட ஒரு தீர்வை அடைவதாகவே இருக்கும். இங்கு இலங்கையின் அனைத்து தேசிய இனமும், எந்த விடுதலையையும் அடையப் போவதில்லை. மாறாக தேசியத்தை ஏகாதிபத்தியத்திடம் அடகுவைத்து அழிந்து போவதே நிகழும் இது இலங்கைக்கு மட்டுமல்ல, சர்வதேசத்துக்கே இது பொதுவானவாகும்.



# போராட்டத் தவறுகளால், இலகுவாக ஊடுருவிடும் எதிரி

அண்மைக் காலமாக புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில், புலிகளுக்கு எதிரான தனிமனித அழித்தொழிப்பு தாக்குதல்கள் அதிகரித்துள்ளது. முக்கிய முன்னணி தலைவர்களை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள், ஈனத்தனமான இராணுவ அரசியல் வழிமுறையாகும். தனிமனித படுகொலை மூலம் போராட்டங்களையும், நியாயமான மக்களின் உரிமைகளை சிதைக்கவும் அழிக்கவும் முனைகின்றனர். நன்கு தேர்ந்த முறைகளில் விரிவான தளத்தில் இந்த படுகொலைகள் நடப்பதையே நிகழ்வுகள் தெளிவாக்கின்றன. இயக்க முன்னணி தலைமைகளை குறிவைத்து தொடர்ச்சியாக நடக்கும் அழித் தொழிக்கும் நடைமுறைக்கு, தலைமைக்கு அருகில் நெருங்கி நிற்கும் பிரிவுகளை சார்ந்து நிற்பதே, எப்போதும் சாத்தியமான ஒரேயொரு வழிமுறையாகும். எதிரி நெருங்கி வரமுடியாத நிலையில், போராட்ட சக்திகளுக்கு அருகில் அக்கம் பக்கமாக நிற்கும் அதிர்த்தியுற்ற பிரிவுகளை கண்டறிவதன் மூலமே, எதிரி அவர்களை பயன்படுத்தும் நுழைவாயிலை ஏற்படுத்திவிடுகின்றது. இது இயக்கத்தின் உள்ளும் அமைப்புக்கு வெளியிலும் எதிரி நுழைந்துவிடும் போது, போராட்டம் ஆழமான நெருகடியை சந்திக்கின்றது. இந்த வகையில் அதிர்த்தியுற்ற நபர்கள் உருவாகதா வகையில், போராடும் அமைப்புகள் ஜனநாயக மத்தியத்துவத்தை ஆதாரமாக கொண்டு, எதிரியையும் நன்பனையும் சரியாக கோடு பிரிக்க வேண்டும். இதில் தவறு இழைக்கும் போது, எதிரி அவற்றை தனக்கு சதகமாக இலகுவாக பயன்படுத்திவிடுகின்றான்.

வரலாற்றில் இது முதல் தடவை நடந்தவையல்ல. உலகைக் குலுக்கிய சோவியத் புரட்சிக்கு தலைமை தாங்கிய போல்ஷிவிக் கட்சியின் மத்திய குழு வரை கூட எதிரி நுழைந்திருந்தான். இது பற்றி லெனின் கூறும் போது "தலைமையகத்தை - தலைவர்களை -'மூடிமறைத்தப்' பரம இரகசியமாய் வைத்துக் கொள்வது அவசியமாகி விடும்படி சட்டபூர்வமான வேலைகளும் சட்ட விரோதமான வேலைகளும் மாறி மாறி வந்தால், சில நேரங்களில் மிகவும் அபாயகரமான விளைவுகள் ஏற்பட்டன. இவ்விளைவுகளில் மிகவும் மோசமானது 1912ல் போலிஸ் கையாள் மலினோவ்ஸ்கி போல்ஷிவிக் மத்தியக் கமிட்டியில் புகுந்து கொண்டதுதான். மிகச் சிறந்த, பற்றுறுதி மிக்க எத்தனையோ பல தோழர்களைக் காட்டிக் கொடுத்து, அவர்களுக்குக் கடும் காவல் தண்டனை கிடைக்கச் செய்து, பலரும் விரைவிலேயே மரணமடைய அவன் காரணமாயிருந்தான். ... மலினோவ்ஸ்கி எங்கள் நம்பிக்கைக்கு உரியவனாகும் பொருட்டு, சட்டபூர்வமான தினசரிப் பத்திரிகைகளை நிறுவ எங்களுக்கு உதவும்படி நிாப்பந்திக்கப்பட்டான்." என்று எழுதிய லெனின், இதை "நமது தவறு" என்ற குறிப்பிடத் தவறவில்லை. ஒரு எதிரி அருகில் அல்லது உள்ளே நுழைகின்றான் என்றால், அது முற்று முழுதாக போராட்ட அமைப்புதான் காரணமாக இருகின்றது. அமைப்பை நம்ப வைக்கவும், அமைப்புக்காக நாய் போல் இயங்க வேண்டிய நிாப்பந்தம் உள்ளது. போல்ஷிவிக் கட்சி மக்கள் இயக்கமாக இருந்தால், அவன் கட்சிக்காக மக்களை அணிதிரட்டும் நடவடிக்கையில் செயற்பட வேண்டியிருந்தது. இதன் மூலம் தான் எதிரி தன்னை மறைக்க முடிந்தது. அவன் கட்சிக்காக புதிய பல நபர்களை இனைத்தபடிதான், சிலரை காட்டிக் கொடுக்கமுடிந்தது.

ஆனால் புலிகள் இயக்கத்தில் இது நேர்மறையில் தான் நடக்கமுடியும். தனிமனித



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகழ்பாடல் மூலம் யாரும் இலகுவாக அமைப்பில் நுழைந்து விடலாம். அதிலும் தீவிரமாக செயல் ரீதியாக உள் வெளி எதிரிகளை (போலியாகவும், உண்மையாகவும்) இனம் காட்டுவது மற்றும் தண்டனைகள் வழங்குவது, இலகுவாக சந்தேகமற்ற உயர் நிலையை அடைந்துவிட முடியும். இதன் மூலம் எதிரி பரிசோதிக்க முடியாத உயர் நிலையை அடைகின்றான். எதிரியைத் தேடி எதிரியே இயங்குவது என்ற நிலையும் ஏற்பட்டுவிடும். இது அமைப்பின் அரசியல் ரீதியாக மக்கள் அமைப்பை உருவாக்க தவறுகின்ற நிலையில் எதிரியை அடையாளம் காணமுடியாது பரிதபம் ஏற்படுகின்றது. இந்த நிலை அமைப்பில் நிகழ்வதற்கு அடிப்படையாக உட்கட்சி ஜனநாயகம் இன்மை, நன்பன் எதிரிகளை தேசிய உள்ளடகத்தில் கோட்பாட்டு ரீதியாக வகுக்காமை, தனிமனித துதிபாடல், மக்களின் சுய செயற்பாடின்மை, சுய பொருளாதார ஊக்குவிப்பின்மை, பொருளாதார நெருக்கடிகளை அரசியல் ரீதியாக முன்வைத்து போராட மறுக்கும் தன்மை, பண சேகரிப்பு வரை முறையற்ற தன்னியல்பான தன்மை, கட்டாய ஆட்சேகரிப்பும் இராணுவ பயிற்சியும், மக்கள் மேலான கடும் தண்டனை முறை, மக்கள் நீதிமன்றங்கள் சமூக பொருளாதார விடுதலையின் அடிப்படையில் அரசியல் ரீதியாக உருவாக்காமை, போராட்டத்தில் போராட விரும்பும் அமைப்புகளை அழித்தொழிப்பது போன்ற பல்வேறு காரணத்தினால் எதிரி இலகுவாக, தனக்கு தேவையான நபர்களை இயக்கத்தின் உள்ளும் வெளியிலும் போராட்டத்தின் அருகில் பெற்றுவிடுகின்றான். எதிரியின் ஊடுருவல் இனம் காண முடியாத தொடர்பற்ற வலைப்பின்னலை இது உருவாக்கிவிடுகின்றது. எதிரி இதை வெளியில் இருந்தும் உள்ளிருந்தும் இலகுவாக இயக்க முடியும்.

இனனொரு வழியில் எதிரி அல்லாத அதிர்த்திக் குழுக்கள் புலியின் உள் அல்லது வெளியில் அல்லது இரண்டு தளத்திலும் செயற்படக் கூடிய ஒரு சூழலும் இந்த விவகாரத்தில் காணப்படுகின்றது. இதில் எது என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டிய கட்டயத்தில் உள்ளது.

புலிகளின் தலைமைகள் மீதான தாக்குதல்கள் விரிவான தளத்தில் பரந்த பிரதேசத்தில் நடப்பதை அவதானிக்கும் போது, முதன் முதலாக ஆச்சரியப்படுமளவுக்கு எதிரியின் ஊடுருவல் புரையோடிப் போய்யுள்ளதை காட்டுகின்றது. வன்னி முதல் கிழக்குவரை நடக்கும் இந்த தாக்குதல், உயர் மட்ட தலைமைகளின் நடவடிக்கைகளை கண்காணித்து நடத்தப்படுவது அவதானிக்க முடிகின்றது. இதில் இருந்து இந்த தாக்குதலுக்கான கண்காணிப்பு முன்னணி தலைமைக்குள்ளும் உடுருவியுள்ளதையும், இது வடக்கில் இருந்து கிழக்கு வரை புரையோடியிருப்பதை காட்டுகின்றது. இதில் இருந்து இரு ஊகங்கள் வெளிப்பாடுகின்றது.

1.இந்த தாக்குதலை புலிகளின் அதிர்த்தியுற்ற பிரிவு ஒன்று திட்டமிட்டே உள்யிருந்து தாக்குகின்றாதா? அல்லது
2.இராணுவத்தின் கைக்கூலியாக பல அதிர்த்தியுற்ற நபர்கள் விரிவான தளத்தில் செயற்படுகின்றனரா?

என்ற சந்தேகத்தை மீண்டும் விட்டுள்ளது. ஆனால் இந்த உயர்மட்ட படுகொலை கண்காணிப்பு, புலிகளின் உயர்மட்டம் திட்டமிடும் நடத்தும் இராணுவ தாக்குதலை முன் கூட்டியே அறிந்து முறியடிக்கவில்லை. இங்கு இது புதிய ஊகங்களை விடுகின்றது.

1.தனிமனித படுகொலைகான குழு இராணுவ தாக்குதலை கண்காணிப்பதில் இருந்து, எதிரி தனிமைப்படுத்தியிருக்கலாம் அல்லது



2.இராணுவத்துடன் தொடர்பற்ற குழு புலியின் உள் அல்லது வெளியல் அல்லது இரண்டிலும் செயற்படும் குழுவுக்கு, இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்படுவது அவர்களுக்கு அவசியமற்ற விடையமாக இருக்கலாம்.

இராணுவ உளவாளிகள் உட்புகுந்து குறிப்பான தலைமைகளின் நடமட்டங்களை சரியாக தேர்ந்து ஒரு தாக்குதலை நடத்துகின்றார்கள் எனின், முன் கூட்டியே புலிகளின் இராணுவ தாக்குதலைக் கூட அறியமுடியும். ஆனால் அப்படி ஒன்றும் இதுவரை நிகழவில்லை. இது பிரச்சனையை மேலும் சிக்கலாக்கி வருகின்றது. இந் நிலையில் மட்டகளப்பில் கிளைமோர் கண்ணிவெடியுடன் கைது செய்து மரணதண்டனை வழங்கியதாக கூறும் புலிகளின் செய்தி, ஆச்சரியப்படத்தக்கது. மிக குறுகிய காலத்தில் வேகமாக அதுவும் கிளைமோருடன் கைது செய்தாக கூறுவது, எதிரி மேலும் ஆழமாகவும் நுட்பமாகவும் ஒளித்துக் கொள்வதைக் காட்டுகின்றது. பெரும் தொகையாக மட்டகளப்பில் நடந்த கைதின் பின்பும் கூட, தாக்குதல் நடந்தாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. இயக்கங்களில் இருந்து ஒதுங்கிய மற்றயை இயக்க நபர்கள், புலிகளின் இருந்து விலகியவர்கள் மேலான சந்தேகம் மற்றும் தண்டனைகள் எதிரியை அடையாளம் காண்பதற்கு பதில் எதிரியை வழமையான பணியில் விளக்கி தேடுவதாகும். இது போன்று புலிகளால் எதோ ஒரு விதத்தில் முன்னர் பதிக்கப்பட்டவர்கள் மேலான சந்தேகங்கள் மற்றும் விசாரனை நடந்துள்ளாதாக செய்திகள் வெளிவருகின்றன. சிலருக்கு தண்டனைகளை புலிகள் வழங்கியதாக அறிய முடிகின்றது. இவை அனைத்தும் எதிரி நவீனமாக உடுருவி உள்ளிருந்தும் நடத்தும் தாக்குதலின் புறநிலைத் தன்மையை, புலிகள் இனம் காணமையைக் காட்டுகின்றது. பழைய வடிவில் எதிரியை தேடி வரும் போக்கு, அவர்களின் திசை வழியில் ஆழமான சமுதாய பிளவை அகல வைக்கின்றது. இதன் மூலமும் எதிரியின் நோக்கம் வெற்றிபெறுகின்றது. இந்த தாக்குதலின் நோக்கம் பலவாக இருக்கலாம்.
1.புலிகளின் தலைமை அழிப்பதன் மூலம் புலிகளின் போராட்டத்தை ஒடுக்குவதன் மூலம், தமிழ் மக்களின் சுயநிர்ணயத்துகான போராட்டத்தை அழிக்கலாம்.
2.கடுமையான தீவிரமான தலைவர்களை அழிப்பதன் மூலம் மிதவாத தலைமையை உருவாக்கி பேச்சு வார்த்தை மூலம் போராட்டத்தை சிதைய வைக்கும் ஒரு வழிமுறையாக இருக்கலாம்.
3.புலிகளின் உள் உள்ள ஒரு பிரிவு, மற்றொரு பிரிவை அழிப்தன் மூலம் தலைமைக்கு வர முயல்வதாக இருக்கலாம்.
4.புலிகளின் உள் உள்ள ஒரு பிரிவு போராட்டத்தை அழிக்கும் ஒரு நடைமுறையை கடந்தகால விரக்திகளில் எடுத்திருக்கலாம்.

இதிலும் எது என்பது காலமே பதில் அளிக்க வேண்டியுள்ளது. புலிகளின் உள்ளான கருத்து முரண்பாடுகள் அனுமதிப்பதில்லை. அதே போல் தலமை என்பது ஜனநாயக மத்தியத்துவதை கொண்டது அல்ல. தனிமனித வழிபாட்டை கொண்ட ஒரு தலைமையின் மேல் எற்படும் அதிர்ப்திகள் அனைத்தும், தன்னை அதற்குள்ளேயே மூடிமறைத்துக் கொள்கின்றது. முரண்பாடுகள் துரோகமாகி விடும் என்பதால், அதிர்த்திகள் தன்னை இரகசியமாக்கி கொள்கின்றது. இவை இணைகின்ற போது ஆழமான சதிக் குழுக்களாக அல்லது எதிரியுடன் கூட்டு இணைந்த துரோக குழுக்களாக செயற்படத் தொடங்குகின்றது. இதை கண்டு அறிவது என்பது, புலிகளின் இராணுவ வழிமுறைகளில் சாத்தியமில்லை. அனைத்தும் தனிமனித புகழ்பாடு பொது செயற் திட்டத்தில், நன்றாக தன்னை அலங்கரித்து மறைத்துக் கொள்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விமானத் தகர்ப்பும் அதன் பின்னான நெருக்கடிகளும்



தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் குண்டு வீசி மக்களை கொன்று போட்ட, சிங்கள இனவாத வான்வழி தாக்குதல்களை நடத்திய விமானங்கள் மேல், அண்மையில் புலிகள் பாரிய தாக்குதலை நடத்தியிருந்தனர். வான் படையின் முதுகெலும்பே தற்காலிகமாக முறிந்துவிடுமளவுக்கு, இந்தத் தாக்குதல் விரிவானதாக இருந்தது. பலத்த பாதுகாப்புகளைக் கொண்ட விமானப்படைத் தளம் மீது, ஊடுருவிய தாக்குதலை நடத்தியதுடன், ஒரு பகுதியினர் தப்பிச் சென்றதுடன், தாக்குதலின் ஒளி நாடாவையும் வன்னியில் வெளியிட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் தற்காலிகமாக தமிழ் மக்கள் மீதான இனவெறி வான்வெளி படுகொலைகளை மட்டுப்படுத்தியதுடன், அரசின் யுத்த பொருளாதார நெருக்கடியையும் அதிகரிக்க வைத்துள்ளது. அதே நேரம் இனவாத கட்டமைப்பின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

மறுதளத்தில் 2-8 ஒகஸ்ட் 2001 ஈழமுரசு தலையங்கத்தில் "விமானத்தளத்தை ஊடுருவி சிறுத்தைப் படையணி தாக்குதல்!" என்ற தலைப்பில் எழுதியவர்கள், உப தலைப்பாக "தேசியத் தலைவரின் நேரடிப் பயிற்சி" என்று எழுதினர். 23-29 ஒகஸ்ட் 2001 இல் சுப.தமிழ்ச்செல்வனின் பேட்டியில் "கட்டுநாயக்கா தாக்குதலுக்கு 'புலிகளின் குரல்' உரிமை கோரவில்லை - ஆனால் இத் தாக்குதல் குறித்து தமிழ் மக்களும் நாமும் மகிழ்ச்சியடைந்தோம்" என்று கூறினர். புலிகள் இதுவரை உத்தியூர்வமாக உரிமை கோரத நிலையில், இந்த தாக்குதலை நாம் ஆய்வுக்குள்ளாக்க வேண்டியுள்ளது. இங்கு புலிகளின் தலைவர் பெயரிலும், அவரின் நேரடி பயிற்சி (வழக்கமாக வழிகாட்டல்) என்று எல்லாம் எழுதும் பத்திரிகைகள், தனிநபர் வழிபாட்டின் வரம்புக்கு அப்பாற்பட்ட எல்லை மீறல்களை, தன்னிச்சையாக புலிகளின் பெயரிலும், புலிகளின் தலைவரின் பெயரிலும் செய்கின்றனர். அதுவே மேலும் ஆழமாக புலிகளின் சிதைவுக்கான சீராழிவுக்கான கடிவாளமாகவும் உள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் நீண்ட பல நாட்களாக திட்டமிட்டு ஊடுருவிய போதும், தற்செயலாகவே இது வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதலுக்காக வந்து இறங்கியது முதல் மூன்று முறை தாக்குதல் நடத்தியவர்களைப் பற்றிய சந்தேகத்தை எழுப்பிய தகவல் கொடுக்கப்பட்ட போதும், அதன் மேலான தொடர்ச்சியான அலட்சியமே இந்தத் தாக்குதலை வெற்றி பெறவைத்தது. இல்லாவிடின் எந்த ஒரு நிலையிலும் இத் தாக்குதல் ஆரம்பத்திலேயே தோல்வி பெற்றிருக்கும். இந்த அலட்சியத் தன்மைக்கு சிங்கள இனவாத கட்டமைப்பே அடிப்படையான காரணமாக இருந்துள்ளது. தமிழ் மக்கள் அனைவரையும் புலியாகவும் பயங்கரவாதியாகவும் சித்தரிக்கும் சிங்கள இனவாதம், அனைத்து தரப்பினதும் பொதுவான சமூக பண்பாடாகிவிட்டது. இதனால் தமிழர் என்றால் புலி என்ற இலக்கணத்தில், புலி பற்றிய தகவல் தமிழன் என்ற அடையாளமே போதுமானதாக மாறிவிட்டது. இனவாதம் தமிழ் அடையாளங்கள் முதல் சிறு அசைவு வரை சந்தேகிக்கின்றது. இதனால் தகவல்கள் எல்லையற்ற வகையில் இனவாத அடிப்படையில் குவிகின்ற போது, தகவல்களை சரிபார்க்கும் தன்மையை அலட்சியப்படுத்திவிடுகின்றது. அதாவது வரைமுறையற்ற தகவல்கள், அதன் உண்மையற்ற தன்மைகள், உண்மையானதை உண்மையற்றதாக மூடிமறைத்துவிடுகின்றது. கோருகின்ற தகவல்கள் குறிப்பாக மட்டும் சரியாகவும் பொதுவாக அர்த்தமற்றும் போய்விடுகின்றது. மறுதளத்தில் குறிப்பானதையும் பொதுவானதையும் இனம்பிரிக்க முடியாத வகையில், இனவாத கட்டமைப்பு மாறிவிட்டது. பொதுவான சந்தேக தகவல்கள் இனவாத கட்டமைப்பினால், தகவலற்ற வெற்றிடத்தை சிங்கள இனவாத அடக்குமுறையாளனுக்கு ஏற்படுத்திவிடுகின்றது. இது படிப்படியாக தகவல் கொடுப்பதை கைவிடுகின்றது. இது எதிரியிடம் இருந்து தற்காப்பை உருவாக்கின்றது. தகவல்களை அலட்சியப்படுத்தல் அல்லது அதை கவனிக்க மறுப்பது என்ற தற்காப்பு எல்லைக்குள் தான், இந்த விமானப்படைத் தாக்குதல் வெற்றிகரமாக நடைபெற முடிந்தது. இதை விட்டு இந்தத் தாக்குதல் வெற்றிபற்றி கூறுகின்ற மிகைப்படுத்தலுடன் கூடிய பிரமிப்பை விதைப்பது, அரசியலற்ற பிழைப்புவாதத்தின் அரசியலாகின்றது.

இந்தத் தாக்குதலை அடுத்து சிங்கள இனவெறி அரசு தமிழ் சிங்கள பிரதேச வேறுபாடு இன்றி, நாட்டை மேலும் ஏகாதிபத்தியத்திடம் அடகுவைத்து கைக்கூலியாவதன் மூலம், சொந்தத் தேசிய அடிப்படைகளை ஆழமாக சிதைத்து ஏகாதிபத்தியத்தின் நேரடியான மறுகாலியாக்கத்துக்கு இட்டுச் செல்லுகின்றனர். புலிகள் இராணுவ விமானத் தளத் தாக்குதலை தாண்டி, தாக்குதலை சர்வதேச சிவில் விமானத்தளத்துக்குள்ளும் விரிவாக்கி நடத்தியது என்பது, மறுகாலனியாக்கத்தை விரைவுபடுத்தும்படி ஏகாதிபத்தியம் கோருமளவுக்கு நேரடியாக இது துணைபோயுள்ளது. இலங்கையில் ஏகாதிபத்திய தலையீடுகளை அதிகரித்துள்ள நிலையில், போராட்டத்தை ஒரு நெருக்கடியான நிலைக்குள் இட்டுச் சென்றுள்ளது.

இராணுவத் தளங்கள் மற்றும் அதனுடன் நேரடியாக தொடர்புடைய இராணுவ இலக்குகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், போராட்டத்தை பலப்படுத்துவதாகவே இருக்கும். இராணுவ இலக்கு அல்லாத அதனுடன் நேரடியாக தொடர்பற்ற மறைமுகமான இராணுவ இலக்குகள் மற்றும் சிவில் நிலையங்கள் மேலான தாக்குதல்கள், போராட்டத்துக்கு அதிகமான பாதகத்தை ஏற்படுத்துகின்றன. சிவில் நிலைகள் மேலான தாக்குதல் என்பது, அரசு பயங்கரவாதத்தை மூடிமறைத்து அதை சமூக மயமாக்கிவிடுகின்றது. இந்த வகையான தாக்குதல்கள் சரி, தாக்குதல் நடத்தியவர்களையும் சரி, பயங்காவாத நடவடிக்கையாகவும் பயங்கரவாதியாகவும் காட்டி, இதை உலகமயமாக்கி ஏகாதிபத்திய துணையுடன் அடக்கி ஒடுக்கவும் முடிகின்றது, முனைகின்றது.

இந்த வகையில் எமது தேசிய விடுதலைப் போராட்டம் சார்ந்து பல தரம் பல தவறுகளை புலிகள் தொடர்ச்சியாக இழைத்தே வந்துள்ளனர். எல்லைப் புற சிங்கள கிராம மக்கள் மேலான தாக்குதல்கள், முஸ்லிம் கிராம மக்கள் மேலான தாக்குதல்கள், மக்கள் கூடும் கட்டிடங்கள் மேலான குண்டுத் தாக்குதல்கள், சிவில் விமானங்கள் மேலான தாக்குதல்கள், சர்வதேச விமான நிலையங்கள் மேலான தாக்குதல்கள போன்ற பல நடவடிக்கைகள், சர்வதேச ரீதியாக எமது தேசிய போராட்டத்தை பயங்கரவாதமாக காட்டி சிதைக்க அழிக்க துணைபோயுள்ளது. இது போன்று அப்பாவி சிங்கள முஸ்லிம் மக்களை எதிரியாக காண்பது, அவர்களை கைது செய்வது, கொல்வதும், முஸ்லிம் மக்களை சொந்த மண்ணில் இருந்து அவர்களின் சொந்த உழைப்பை பறித்து




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலுக்கட்டாயமாக வெளியேற்றிய நிகழ்வுகள், தமிழ் மக்கள் மீதான சமூக அக்கறை உள்ளவர்கள் மீதான கைதுகள் படுகொலைகள், சர்வதேச ரீதியாக நடத்திய படுகொலைகள் (ராஜீவ் முதல் பாரிஸ் படுகொலைகள் வரை), கைதிகளை கொல்வது, கைதான அல்லது சரணடைந்த எதிரி இராணுவத்தை கொல்வது மற்றும், இது போன்றன தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயத்துக்கான மக்களின் தேசிய போராட்டத்தை, தனிநபர் பயங்கரவாதப் போராட்டமாக சிதைத்துள்ளது. குறைந்த பட்சம் முதலாளித்துவ ஜனநாயகத்தை கூட கடைப்பிடிக்க முடியாத அனைத்து நடவடிக்கைகளும், எமது போராட்டத்தை ஆழமாகவும் அகலமாகவும் பயங்கரவாதமாகவும் சிதைத்து வருகின்றது.

இந் நிலையில் தமிழ் மக்கள் தமது சொந்தப் பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமையை பெற்று வாழும் உரிமை என்பது, உயிரை விட முதன்மையானது. அந்த உரிமையை சிதைக்கும் வகையில் போராட்டம் நகரும் போது, அதன் சிதைவுக்கான நடவடிக்கைகளும் அதன் மேலான அரசியல் வரலாறு, வரலாற்றுத் துரோகமாக எஞ்சுவது தவிர்க்க முடியாது. இவை பாரிய தியாகங்களையும் தாண்டி விளைவாகுவது யாராலும் தவிர்க்க முடியாது.

இராணுவ இலக்குகளைத் தாண்டிய விடுதலைப் புலிகள் சர்வதேச சிவில் விமானத் தளத்தில் சர்வதேச சிவில் விமானங்கள் (இங்கு இவை சிறீலங்கா விமானமாக இருந்த போதும்) மீது நடத்திய தாக்குதல், தாக்குதலை சர்வதேச மயமாக்கிவிட்டது. இது சர்வதேச விமான சேவை தொடர்பான பாதுகாப்பை சர்வதேச அளவில் ஏகாதிபத்திய முடிவுக்கு விட்டுவிடுகின்றது. இராணுவ விமான இலக்கை தாண்டி, சர்வதேச சிவில் விமானம் மேல் (இந்த இலங்கை விமானம் கூட முழுமையாக இலங்கைக்கு சொந்தமானது அல்ல. 40 சதவீதமான ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் பங்கு டுபாயை சேர்ந்த எமிரேட்ஸ்க்கு சொந்தமானது.) நடத்திய தாக்குதல், அன்னிய மூலதனத்தின் மேலானதாக சர்வதேசம் மேலானதாக மாறியமையாலும் (சர்வதேச விமான நிலையம் மற்றும் சர்வதேச தூதரகங்கள் இருக்கும் நாட்டுக்கு மட்டும் சொந்தமானவையல்ல), சர்வதேச சிவில் சேவை மேலானதாக இருப்பதாலும், இதை சாக்காகக் கொண்டு ஏகாதிபத்திய நேரடி ஆக்கிரமிப்பை விரைவுபடுத்தியுள்ளது. அதே நேரம் தாக்குதலின் விளைவால் இலங்கை பொருளாதாரத்தை குறிப்பாக பாதித்ததை விட, மறைமுகமாக உலகமயமாதல் பொருளாதார அமைப்பில் எற்பட்ட பாதிப்பு அதிகமாகவுள்ளது. இதனால் ஏற்படவுள்ள ஏகாதிபத்திய தலையீடு என்பது, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அழித்து சிதைத்துவிடுமளவுக்கு வளர்ச்சி பெறுகின்றது.



உலகமயமாதல் பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு கலாச்சாரக் கூறுகள் எமது தேசியத்தை சிதைப்பதையும் அழிப்பதையும் புலிகள் இனம் காட்டி, அதை எதிர்த்து எமது தேசிய பொருளாதாரத்தை உருவாக்கும் போராட்டத்தை நடத்தாத நிலையில், எமது போராட்டம் நீடிக்கின்றது. இந்த நிலையில் உலகமயமாதல் பொருளாதார அலகு மீதான மறைமுக சேதம் என்பது, எமது சுயநிர்ணய போராட்டம் மீதான அழித்தொழிப்பை இலகுபடுத்தி விடும்.

சர்வதேச சிவில் விமானம் மேலான தாக்குதல் எப்படி உலகமயதால் பொருளாதார அலகை பாதித்துள்ளது என்பதை பார்ப்போம். சர்வதேச சிவில் விமானம் மேலான தாக்குதல், விமானப் பறப்புகள் மீதான காப்புறுதியை சில மடங்குகளாக அதிகரிக்க



வைத்துள்ளது. இது போன்று கப்பல் போக்குவரத்து மீதும் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இலங்கைக்கான விமான மற்றும் கப்பல் போக்குவரத்தின் எண்ணிக்கை குறைவடைவது இயல்பானது. இதனால் உலக நிதி மூலதனங்களை திரட்டும் காப்புறுதி நிறுவனங்களின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது நேரடியாக தவிர்க்க முடியாது. அதேநேரம் தாக்குதலுக்குள்ளான விமானத்துக்கான காப்புறுதி பணக் கொடுப்பனவு, காப்புறுதி நிறுவனத்தின் மூலதனத்துக்கு இழப்பாக வேறு மாறுகின்றது. இதனால் சர்வதேச பன்னாட்டு காப்புறுதி நிறுவனங்கள் இந்த தாக்குதலால் நேரடியாக பொருளாதார பாதிப்பை அடைந்து நிற்கின்றது.

அத்துடன் சர்வதேச சுற்றுலாத்துறை சார்ந்த பன்நாட்டு நிறுவனங்கள், இலங்கைக்கான சுற்றுலாத்துறை வீழ்ச்சி ஊடாக நேரடியாக பாதிப்பை அடைந்துள்ளது. 2000 ஆண்டு உல்லாசப் பயணத்துறை வருமானம் 9024 கோடி ரூபாவாகும். இந்த நிலையில் இலங்கைக்கு வரும் விமானங்களுக்கு 50 முதல் 100 மில்லியன் ரூபாய் வரை, காப்புறுதிப் பணமாக செலுத்த வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது. இதனால் பயணிகளின் கட்டணம் நேரடியாக 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2000 ஆண்டில் இலங்கைக்கு வந்த விமானப் பயணிகளின் எண்ணிக்கை 29 லட்சமாகும். இதில் 63 சதவீதம் ஸ்ரீலங்கன் விமான சேவையூடாக நடந்த போதும், இந்த விமானப் போக்குவரத்தைக் கூட சர்வதேச ரீதியாக பன்நாட்டு சுற்றுலா நிறுவனங்களே ஏற்படுத்துகின்றன. இந்த தாக்குதலின் பின்பாக 80 வீதமான பயணங்கள் ரத்தாகியதால், இலங்கை அரசுக்கு நேரடியாக 360 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. இது போன்று சர்வதேச சுற்றுலாத் துறை சார்ந்த பன்நாட்டு நிறுவனங்களுக்கும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்தத்துறை சார்ந்து நேரடியாக இலங்கையில் 115 000 பேர் தமது தொழிலை இழந்துள்ளனர். இதனால் சமூக சிதைவு ஏற்பட்டுள்ளது.

இந்தத் துறை சார்ந்த உல்லாச விடுதிகள் பாரிய நெருக்கடிக்குள் சிக்கியது. இந்த உல்லாச விடுதிகளில் பெரும்பாலானவை சர்வதேச பன்நாட்டு சுற்றுலா நிறுவனங்களுக்கு சொந்தமானவை மட்டுமின்றி மற்றவைகள் மேல் தனது வலைப் பின்னலைக் கொண்டதுமாகும். இந்த பன்நாட்டு உல்லாச விடுதிகளால் எதிர்பார்க்கப்பட்ட 290 மில்லியன் டொலர் வருமானம் 125 மில்லியன் டொலராக சரிந்துள்ளது. அதே நேரம் பல உல்லாச விடுதிகள் மூடப்படுகின்றன.

அடுத்து இலங்கைக்கான கப்பல் மற்றும் விமானக் காப்புறுதிக்கான அதிகாரிப்பு சர்வதேச கப்பல் போக்குவரத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. அதாவது இலங்கை அல்லாத நாடுகளுக்கான, இலங்கையை அண்டிய கடல் பாதை மற்றும் தரிப்பு நிலையம் மீதான காப்புறுதி அதிகரிப்பு, தவிர்க்க முடியாமல் இலங்கையை விட்டு விலகிய ஒரு சுற்றுப் பயணத்தை நடத்த வேண்டிய அளவுக்கு மாறியுள்ளது. இதனால் கப்பல் பயண நாட்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் அதிக இழப்பு, கப்பல் செலவை அதிகரிக்க வைத்துள்ளது. இதனால் இலங்கை அல்லாத சர்வதேச பன்நாட்டு கப்பல் போக்குவரத்து நிறுவனங்ளின் செலவு அதிகரித்ததன் ஊடாக, பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி மீதான செலவு அதிகரித்ததன் மூலம் இலங்கை அல்லாத நாடுகளிலும் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

அதே நேரம் இலங்கைக்கான 5 சதவீதமான சரக்கு விமானப் போக்குவரத்துக்குரிய கட்டணம் அதிகரித்துள்ளது. 2000 ஆண்டு இலங்கை வந்த கப்பல்களின் எண்ணிக்கை 38 322 ஆகும். அதே நேரம் இலங்கைத் துறை முகத்தில் 25 222 000 மெற்றிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொன் பொருட்கள் இறக்கப்பட்டன. இந்தக் கப்பல்களுக்கு யுத்தக் காப்புறுதி கட்டணம் 21 அடி கொள்கலனுக்கு 500 டொலராக இருந்தது. கட்டுநாயக்க விமான நிலையம் மீதான தாக்குதலின் பின்பு, விஷேட யுத்த அபாயக் காப்புறுதி என்ற பெயரில் 2500 டொலராக மாறியுள்ளது. இதனால் இலங்கைக்கான கப்பல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பன்நாட்டு நிறுவனங்களின் சூறையாடும் ஏற்றமதி இறக்குமதி முற்றாக பாதிப்படைந்துள்ளது. உதாரணமாக எவர்கிறீன் நிறுவனம் நடத்த இருந்த 38 கப்பல் பயணத்தில் 22ஐ நிறுத்தியுள்ளது. ஹஞ்சின், ஹீண்டாய் நிறுவனங்கள் தனது பயணத்தில் 50 சதவீதத்தை நிறுத்தியுள்ளது. கப்பல் போக்குவரத்தில் ஏற்படுத்தியுள்ள தடை பன்நாட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை நேரடியாக பாதித்துள்ளது. கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலைய ஆடை தொழில் சார்ந்த 4 லட்சம் பெண் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் ஆடை ஏற்றுமதி மீதான அதிகரித்த புதிய காப்புறுதி, பன்நாட்டு மூலதன திரட்சிக்கு தடையாகியுள்ளது. இதனால் செய் ஆடையின் விலை உயர்ந்ததன் மூலம், சர்வதேச அளவில் அதிகரிப்பை கோரும் அதே நேரம், இதை உருவாக்கும் தொழிலாளர்களின் சம்பளத்தில் சரிவை ஏற்படுத்திவிடுகின்றது. ஆடை உற்பத்தியில் ஈடுபடும் சர்வதேச பன்நாட்டு கொள்ளைக்கார நிறுவனங்கள், இதை சகித்துக் கொள்ள தயாரக இல்லை. இதனால் கூலிக் குறைப்புக்கும், வேலை இழப்புக்கும் தொழிலாளர்களை இட்டுச் செல்லுகின்றது. இந்த பன்நாட்டு புடவை சார்ந்த தொழில் மூலம் கிடைக்கும் வருமானம் 26 930 கோடி ரூபாவாகும். இதில் பாரிய வீழ்ச்சிக்கு இந்தத் தாக்குதல் வழி சமைத்துள்ளது. பன்நாட்டு ஆடைத் தொழில் சார்ந்த வருமான வீழ்ச்சியை பன்நாட்டு மூலதனம் சகித்துக் கொள்ளப் போவதில்லை. அந் நிறுவனங்கள் புலிகளை அழித்தொழிப்பதில் அரசுடன் முரண்பாடு கொள்வதில்லை. தமது சுரண்டலை மேலும் அதிகரிக்க, புலிகளை அழித்தொழிப்பது பன்நாட்டு நிறுவனங்களுக்கு நிபந்தனையாக இன்று மாறிவிட்டது.


இது போன்ற நேரடியாக விமான சேவை மூலம் நடத்திய ஏற்றுமதிகள் பாதிப்படைந்துள்ளது. பழம் மற்றும் மரக்கறி ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம் 53 லட்சமும், மீன் ஏற்றுமதி மூலம் 3782 லட்சம் ரூபாவும், வளர்ப்பு மீன் ஏற்றுமதி மூலம் 5603 லட்சம் ரூபாவும், அணி கலன்கள் மணிக்க கல் ஏற்றுமதி மூலம் 14546 லட்சம் ரூபாய் வருமானம் விமானம் மூலம் நிகழ்ந்துள்ளது. இந்த ஏற்றுமதியில் பெரும்பான்மை புலம் பெயர் சமூக தேவையுடன் தொடர்புடையதாக இருந்தது. இந்த நிலையில் புலம் பெயர் சமூகத்தின் தேவையை ஒட்டிய ஏற்றுமதிப் பொருட்கள் விலை ஏற்றத்தை சந்தித்துள்ளது. இது சார்ந்த இலங்கையில் வளர்ச்சி பெற்று இருந்த உள்ளூர் உற்பத்திகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. சிவில் விமானத் தளத்துக்குள் இத்தாக்குதல் நகர்ந்ததன் மூலம், உள்ளூர் மற்றும் சர்வதேச உற்பத்திகள் பாதிப்படைந்ததுடன், நேரடியாக மக்களின் வாழ்வில் வீழ்ச்சியை சாதித்துள்ளது.

உலகமயமாதல் அதிக மலிவான மனித உழைப்பை அதிகம் சுரண்டும் ஆசிய பிரதேசங்களில், தமது முதலீட்டை நகர்த்தி சுரண்டி வரும் பொருட்கள் மீதான விலை அதிகரிப்பு, உலகமயமாதலின் அடிப்படை சூறையாடும் சுரண்டும் நோக்கத்தை, மறைமுகமாக பகுதியளவுக்கு தேக்கத்துக்குள்ளாக்கியுள்ளது. மூலதனக் குவிப்பில் அதிக சுரண்டலால் கிடைக்கும் லாபத்தில் ஏற்படும் நெருக்கடி, இலங்கை மீதான ஏகாதிபத்திய தலையீட்டை கூர்மையாக்கியுள்ளது. இலங்கையில் நேரடி சுரண்டல் மற்றும் சுற்றியுள்ள நாடுகளின் மலிவு கூலியைக் கொண்ட சுரண்டலை ஏதோ ஒரு



விதத்தில் பாதிப்படைந்து உலகமயமாதலில் சந்திக்கும் நெருக்கடி, எமது போராட்டத்தை வெளியில் இருந்து அழிப்பதை தீவிரமாக்கியுள்ளது. தமிழ் பேசும் மக்களின் தேசிய பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட சுயநிர்ணயத்தை, மறுத்து நிற்கும் புலிகளின் அரசியல், அதை நோக்கி அணிதிரட்டப்படாத மக்களைக் கொண்ட எமது தேசிய விடுதலைப் போராட்டம் மீதான ஏகாதிபத்திய தாக்குதல், ஈவிரக்கமற்ற அழிவாகவே இருப்பது அதன் நிபந்தனையாகும். எகாதிபத்திய பொருளாதார இலக்குகள் மீதான தாக்குதல்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்கப்படும் போது, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அரசியல், சமூக மயமாக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லாத தாக்குதல் ஏகாதிபத்திய பொருளாதார சமூக அடிப்படையையே தமது அரசியலாக கொண்ட மக்களையே, ஏகாதிபத்திய தலையீட்டின் போது போராட்டத்துக்கு எதிராக திருப்பிவிடும்.

அதே நேரம் இராணுவ இலக்கு கடந்து சிவில் விமானங்கள் மீதான தாக்குதலால் விமானம் மற்றும் கப்பல் மீதான காப்புறுதியை அதிகரிக்க வைத்துள்ளது. இதனால் இலங்கைப் பொருளாதாரம் பாரிய நெருக்கடியில் சிக்கியுள்ளது. அதிக காப்புறுதியால் இலங்கையில் உற்பத்தியாகும் பொருட்களின் விலை அதிகரித்து, ஏற்றுமதி தடைப்படுவதால் உற்பத்தியில் வீழ்ச்சி அதன் நிபந்தனையாகின்றது. எற்றுமதிக்கு கோரும் அதிக கட்டணம் உற்பத்தி பொருட்களின் விலை குறைப்பை கோருகின்றது. அதே நேரம் இறக்குமதிப் பொருளின் விலை அதிகரிப்பால் வாழ்க்கைத் தரம் இலங்கையில் வீழ்ச்சியடைகின்றது. இது யுத்தப் பொருளாதாரத்துடன் அதிக நெருக்கடியை சந்திக்கும் அதேநேரம், தமிழ் மக்கள் மேலான சுமை மேலும் அதிகமாகிவிடுகின்றது. பொருளாதாரத்தில் ஏற்படும் சுமை தமிழ் மக்களுக்கே மேலும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்த பொருளாதார நெருக்கடி சிங்கள மக்களை விழிப்புற வைப்பதற்கு இனவாத யுத்தம் ஒரு தடையாக உள்ளவரை, யுத்தம் மூர்க்கமாகின்றது. பொருளாதார நெருக்கடியை கடந்து யுத்தம் செய்வதற்கான இராணுவ தளபாட வசதிகளை, ஏகாதிபத்தியங்கள் நிபந்தனையின்றி தாராளமாக கொடுத்து உதவ காத்துக்கிடக்கின்றன. புதிய தொழில் நுட்ப வளர்ச்சியில் இராணுவ தளபடத்தை மாற்றியமைக்கின்ற நிலையில், காலாவதியான தொழில் நுட்ப ஆயுதங்களை மலிவு விலையிலும், இனாமாகவும், கடனாகவும் கொடுப்பதன் மூலம், மூன்றாம் உலக நாடுகளை பொருளாதார ரீதியாக அடிமைப்படுத்தி சுரண்ட, ஒரு ஊடகமாகின்றது. ஒரு இனவாத பாசிச அரசுக்கு பொருளாதார நெருக்கடி என்பது கடன் கொடுப்பவன் இருக்கும் வரை, உழைக்கும் மக்கள் உழைக்கவும் அதைச் சுரண்ட அனுமதிக்கும் வரை வெற்றுரைகள் தான். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய போராட்டத்தை உயர்த்தியும், மக்களைச் சார்ந்து நிற்பதும் அவசியமாகும். அதே நேரம் மக்கள் மற்றும் சிவில் துறைகள் மேலான தாக்குதலை தவிர்ப்பதும், எமது தேசிய விடுதலைப் போராட்டம் சரியான திசை வழியில் செல்வதற்கான ஒரு நிபந்தனையாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்டமும் மக்களும்

வடக்கு கிழக்கில் புலிகளின் ஆட்சேர்ப்பு தொடர்பாக அண்மைக் காலத்தில் தொடர்ச்சியான பாரிய சர்ச்சைகள் எழுகின்றன. இது தொடர்பாக மட்டக்களப்பு - திருமலை ஆயர் ஜோசப் கிய்ஸ்லி சுவாம் பிள்ளை, இராம கிருஷ்ண மிஷன் பிரதிநிதி பத்மநாதன், மட்டக்களப்பு சமாதான குழு உறுப்பினர் அன்டன் மாரட்டின், மனித நேயர் நிலைய பிரதிநிதி எஸ். கமலநாதன் ஆகியோர், கிழக்கு புலிகளின் அரசியல் பொறுப்பாளர் கரிகாலனையும் வேறு முக்கிய உறுப்பினர்களையும் சந்தித்து பேசியுள்ளனர். இது தொடர்பாக புலிகள் "எமது விடுதலைப் போராட்டக் கொள்கைக்கு அமைவாக வீட்டுக்கு ஒரு வீரனைத் தரவேண்டுமென்றே கோரிக்கை விடுத்தோம். அதற்கு அமைவாகவே பெற்றோர்கள் பிள்ளைகளை எங்களிடம் கையளித்து வருகிறார்கள். ... ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டுள்ள பெற்றோர் குழுவினரே, பிள்ளைகளின் பெற்றோர் மூலமாக கையளித்து வருகிறார்கள். சிலர் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் சொத்துகளை நாம் கண்காணித்து வருகின்றோம்." என்று தெரிவித்த பின்னனியில், இந்த விடயம் மக்கள் மத்தியில் புதிய பாரிய முரண்பாட்டை புலிகளுடன் ஏற்படுத்தியுள்ளதை காட்டுகின்றது. இங்கு புலிகளின் கருத்துக்களான கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபடவில்லை, சொத்துகளை பறிமுதல் செய்யவில்லை என்ற கூற்றுக்கு மாறாக, அவர்களின் முரண்பாட்டை தெளிவாக கொண்டு வருகின்றது.

முதலில் இது தொடர்பான பேச்சு வார்த்தை தன்னியல்பாக எந்தவிதமான அடிப்படையுமின்றி நடக்கவில்லை. மக்களின் முரண்பட்ட பிரச்சனைகளை அடிப்படையாக கொண்டே, முக்கிய பிரமுகர்கள் புலிகளை சந்திக்கின்றனர். இந்த பேச்சு வாத்தைகளின் போது, புலிகள் தெரிவித்த கருத்துகள், உண்மையின் பக்கத்தை மறைமுகமாக தெளிவாக்குகின்றது. வீட்டுக்கு வீடு ஒருவன் அல்லது ஒருத்தியை போராட்டத்துக்கு தரவேண்டும் என்பது, உள்ளடகத்தில் கட்டாயமான ஆட்சேர்ப்புதான். ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்ட்ட குழு என்பது தன்னியல்பாக உருவாகிவிடவில்லை. மாறாக ஆட்சேர்ப்புக்காக உருவாக்கப்படுகின்றது. யாரால் உருவாக்கப்பட்டதெனின் புலியால் தான். உருவாக்கப்பட்ட குழு கட்டாய ஆட்சேர்ப்பை நடத்துகின்றது. சிலர் அச்சம் காரணமாக வெளியேறுகின்றனர் எனின், அங்கு கட்டாய ஆட்சேர்ப்பு நடக்கின்றது. கட்டாய ஆட்சேகரிப்பு இல்லை எனின், ஏன் வெளியேறுகின்றனர். என்ன அச்சம் தான் புலிகளைவிட்டு மக்களுக்கு ஏற்பட்டது? வெளியேறிவர்களின் சொத்துகளை பாதுகாக்கின்றோம் என்பதே, ஆட்சேகரிப்புக்கு உடன்படாதவர்களின் சொத்துகள் பறிமுதலானதை தெளிவாக்கின்றது. இது போல் தான் வடக்கில் இருந்து முஸ்லீம் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றியதாக கூறிய புலிகள், முஸ்லீம் மக்களின் சொத்துகளுக்கும் கூறிய காரணமாகும். தெளிவாக கட்டாய ஆட்சேர்ப்புக்கு உட்பட மறுக்கும் மக்களின், சொத்துகள் பறிமுதல் செய்யப்படுகின்றது. இது வெறுமனே கிழக்கில் மட்டுமல்ல. வடக்கிலும் நடக்கின்றது. தொண்டர் படை பிரிவுகள் முதல் அனைவரும் கட்டாய ஆட்சேர்ப்புக்குள்ளாகி வருகின்றனர். இது வெவ்வெறு வடிவங்களில், வெவ்வேறு துணைக் காரணத்துடன் அரங்கேறுகின்றது.



இந்த இடத்தில் மக்கள் தாமாக பெருமளவில் நெற்றில் திலகமிட்டு இணைகின்றார்கள் எனின், அது அரசியல் ரீதியாக விளக்கப்பட வேண்டும். புலிகளின் இயல்பான ஆட்சேகரிப்பு என்பது குறுந்தேசிய அரசியல் எல்லைக்குள், துணிச்சல்வாதம் சார்ந்த ஆயுத கவர்ச்சியிலும் இராணுவ கவர்ச்சியிலும் பொதுவாக நடைபெறுகின்றது. அரசியல் கொள்கை, அரசியல் நோக்கம் என்பது பொதுவான ஒரு அரசியல் வழியில் அல்லாமல், குறிப்பான கவர்ச்சிகரமான ஒற்றை பரிமாண கோசங்களை ஆதாரமாக அடிப்படையாக கொள்கின்றது. இதற்கு இராணுவ சாகச நிகழ்ச்சிகள் ஆதாரமாக துணையாக உள்ளது. அதை அறுவடை செய்ய மக்கள் மேல் இராணுவம் தாக்குதல் செய்ய வேண்டும். அதற்கு ஏற்ற தாக்குதலை நடத்திவிடுவதே, புலிகளின் அரசியல் மூல உபாயமாகும்.

இந்நிலை தான் புலிகளின் நீண்ட வரலாற்றின் ஒரு தொடர்ச்சியான அனுகுமுறையாகும். அப்படியிருக்க எப்படி திடிரென மக்கள் புலிகளின் பின் இணையமுடியும். வீட்டுக்கு வீடு ஒவ்வொருவர் எப்படி எந்த அரசியல் நலனில் இணைகின்றனர். மக்களின் பிரச்சனைகள் பலவாக பல வடிவில் இருக்கும் போது, அதை கடந்து புலிகளின் குறுந்தேசியத்தின் எந்த கோசத்தில் இணைகின்றனர். மக்கள் அல்லாத எந்த பிரிவும் தனது நலன் சார்ந்தே போராட்டத்தில் இணைகின்றனர் அல்லது எதிர்க்கின்றனர் அல்லது வெளியில் பார்வையாளனாக நீடிக்கின்றனர். மக்கள் நலன்கள் வேறு ஒன்றாக இருக்க, புலிகளின் நலன்களை அதனுடன் தொடர்பற்றதாக இருக்க, எப்படி மக்கள் புலிகளின் பின்னால் அணி திரள்வர்.

சிங்கள இனவெறி அரசின் கூலிப்பட்டாளங்கள் சந்திக்கும் ஆட்சேர்ப்பு நெருக்கடி கூட, கட்டாய ஆட்சேகரிப்பை உருவாக்கவில்லை. ஆனால் ஒரு போராடும் அமைப்பு ஈடுபடுமளவுக்கு, அதை மூடிமறைக்க முனையுமளவுக்கு போராட்டத்துக்கு என்ன நேர்ந்தது. மக்களின் அடிப்படை தேவைகளை உள்ளடக்கிய போராட்டமாக போராட்டம் மாறாத வரை, மக்கள் போராட்டத்தில் இருந்து விலகி நிற்பதும் விலகிச் செல்வதும் நிகழ்கின்றது. ஆட்சேர்ப்பில் பெண்விடுதலை கோசமாகிய போதும், சமூக தளத்தில் உண்மையில் பெண்விடுதலை எதையும் வைத்து போராடவில்லை. இன்று பெண்விடுதலை என்ற கோசத்திலும் மந்த நிலையே நிகழ்கின்றது. சமூகத்துக்கும் புலிகளின் போராட்டத்துக்குமிடையில் பெண்விடுதலை, சாதிஒழிப்பு, சுரண்டல் ஒழிப்பு, தேசிய நலன்கள் சார்ந்து ஆழமாகவும் அகலமாகவும் பிளவுபட்டே வருகின்றது. இந்நிலையில் எப்படி மக்கள், போராட்டத்துடன் தன்னியல்பாக தன்னிச்சையாக இணைவர். இந்த பிளவு அகலமாக ஏற்பட, மக்களை எதிரியாக கணித்து கட்டாய ஆட்சேகரிப்பு நிபந்தனையாகின்றது. இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிளவை மேலும் ஆழமாக்குகின்றது. இது எதிரிக்கு கொண்டாட்டமே. போராட்டத்துக்கோ பாதகமானவைதான்.

இந்த கட்டாய ஆட் சேகரிப்பு புதிய சமூக நெருக்கடியை கொண்டு வருகின்றது. நாட்டை விட்டு வெளியேறுவது பெருமளவில் வடக்கு அதிலும் யாழ் சார்ந்து இருந்த நிகழ்வு, இனி கிழக்கையும் பெருமளவில் வெளியேறத் தூண்டுவதாக உள்ளது. அண்மையில் சர்வஜன வாக்கெடுப்பு இலங்கையில் நடத்த முற்பட்ட போது, பலர் இதை வீராவேசமாக எதிர்த்தனர். அகதியாகி இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களைச் சார்ந்து இதை எதிர்ப்பதாக கூறிய போது, எதிர்ப்புகான உண்மைக் காரணத்தை குழிதோண்டிப் புதைப்பதில் தமக்கிடையில் போட்டியிட்டனர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு தமிழ் மக்களின் சுயஇருப்பை கேள்விக்குள்ளாக்கியிருக்கும். எந்த போராட்டமும் சந்திக்காத ஒரு துயரத்தை அம்பலப்படுத்தியிருக்கும். இன்று தமிழ் மக்கள் என்று மலையக, முஸ்லீம், தமிழ் மக்கள் என அனைவரையும் உள்ளடக்கியா கணக்கெடுப்பது? வடக்கில் இருந்து முஸ்லீம் மக்களை சொந்த மண்ணில் இருந்து தமிழ் புலிகள் துரத்திய நிலையிலும் படுகொலை செய்த நிலையிலும், முஸ்லீம் மக்களை தமிழ் மக்கள் என உள்ளடக்க முடியுமா? இல்லையா? என்ற கேள்வி எழுந்திருக்கும். அத்துடன் போராட்டம் சார்ந்து இறந்த ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர், மேற்கு நோக்கி புலம் பெயர்ந்த 5 லட்சத்துக்கு மேற்பட்டோர் (அண்ணளவாக 7 லட்சம் பேர் வரை இருக்கலாம்), இந்தியாவுக்கு புலம் பெயர்ந்த ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர், கொழும்பு நோக்கி புலம் பெயர்ந்த 4 அல்லது 5 லட்சத்துக்கு மேற்பட்டோர் அனைவரும் ஏதோ ஒரு வகையில் மண்ணை விட்டு வெளியேறிய தமிழர்கள் ஆவர். அதாவது போராடும் மண்ணில் இருந்து 12 லட்சத்துக்கு அதிகமானோர் காணாமல் போய்யுள்ளனர். இதைவிட வடக்கில் இருந்து 1 லட்சம் முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டுவிட்டனர். அதாவது 1981 மக்கள் தொகை அடிப்படையில் அரைவாசிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் காணாமல் போய்விட்டனர். இந்த தொகையில் பெரும்பகுதி அதாவது 80 சதவீதத்துக்கு அதிகமாக, அந்த மண்ணுக்கு இனி ஒரு போதும் திரும்பிப் போய் வாழப்போவதில்லை. இந்த பாரதூரமான சமூகச் சிதைவும் குடிபெயருதலும் கூட, போராட்டத்தின் ஜனநாயகமின்மையில் இருந்து உருவானதே. அரசின் கொடூரமான அழித்தொழிப்பு இந்த மக்களை போராடும் மண்ணில் இருந்து துரத்தியது என்பது, ஒரு பக்க சார்பானது மட்டுமேயாகும். ஏன் எனின் போராடும் மண்ணில் இன்னமும் போராடும் மக்கள் இருக்கும் ஒரு இடத்தில் இருந்து, மக்களை துரத்தியது போராட்டத்தின் இயங்கியலற்ற தன்மையே. இன்று கட்டாய ஆட்சேகரிப்பு, மண்ணை விட்டு வெளியேற்றும் எண்ணிக்கையை வரைமுறையற்றதாக்கப் போகின்றது. இது கிழக்கிலும் அகலமாகின்றது.

இங்கு அடுத்த சோகம் பெருமளவில் வெளியேறியவர் உழைப்பில் ஈடுபடக் கூடிய மனித வளத்தை கொண்டவர்களும், அடுத்த தலைமுறையை ஆற்றலுடன்



உருவாக்கும் இனவிருத்தி வலிமையுடைய சமூகப் பிரிவே வெளியேறியது. புலம் பெயர்வால் ஏற்பட்ட குடும்ப பிளவுகளும் பிரிவுகளும், யுத்த நெருக்கடிகள், ஆண்களின் மரணங்கள் என எண்ணற்ற காரண காரியத்துடன் குழந்தை பிறப்பு வீழ்ச்சிக்குள்ளாகியுள்ளது. இது வடக்கு கிழக்கில் தமிழ் இனத்தின் இருப்பை பாரிய சரிவுக்குள்ளாக்கி, சனத் தொகை வீழ்ச்சியை துரிதமாக்கியுள்ளது. அத்துடன் வெளியேறியவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாக இருப்பதால், திருமணங்கள் சார்ந்து 2, 3 லட்சம் இளம் பெண்களை தவிர்க்க முடியாமல் உடனடியாகவே மண்ணில் இருந்து வெளியேற்றத் தூண்டுகின்றது. அத்துடன் தொடர்ச்சியான குடிபெயர்வு நிகழ்ந்த வண்ணமே உள்ளது. எனவே தமிழ் மக்களின் மண்ணின் இருப்பு என்பது வீழ்ச்சி கண்டு வருகின்றது. ஒவ்வொரு போராட்டத் தவறும், மக்களுக்கும் மண்ணுக்கும் இடையிலான பிடிப்பை தகர்க்கின்றது. தவான போராட்டம் மேலும் ஆழமாக சீரழிவதை துரிதமாக்குகின்றது. போராட்டத்தை புலிகளின் போராட்டமாக அல்லாது, மக்கள் போராட்டமாக மாற்ற வேண்டும். மக்களின் அடிப்படை உரிமைகளை இனம் கண்டு, அவர்களின் வாழ்வுக்கான தேவைகளுடன் போராட்டம் தன்னை இசைவாக மாற்றி அமைக்கத் தவறுகின்ற நிலையில், போராட்டம் அரசியல் ரீதியாக மேலும் சீரழிந்து சிதைவதை யாரும் தடுக்க முடியாது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்